கலைக்கதிர்

ரோதி மாத வெளியீடு சித்திரை

THE REGISTRAR OF BOOKS
18 APR 1949
MADRAS

229

1—5

அணா 8

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 APR 1949
MADRAS

ஸௌந்தரராஜா மில்ஸ்

லிமிடெட்,

திண்டுக்கல்.

★

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரிடரீஸ்

லட்சுமணு & கோ.,

20-நெ. முதல் 40-நெ. வரை

ஒத்தை முறுக்கு நூல்கள் தயாரிக்கிறோம்.

இந்திய மூலதனம்

இந்திய உழைப்பு

இந்திய நிர்வாகம்

G. T. நாராயணசாமி நாயுடு,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் செக்ரிடரீஸ் & பார்ட்னர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 APR 1949
MADRAS

போன் : 70 தந்தி : "ஸ்பின்வீவ்"

ஸ்பின்னிங் & வீவிங் கம்பெனி லிமிடெட்,

கோயமுத்தூர்.

மூல தனம் ... ... ரூ. 25,00,000
வசூலான தொகை ... ... ரூ. 20,76,900

டைரெக்டர்கள்:

ஸ்ரீ வி. கோபால் நாயுடு, ஸ்ரீ ஏ. வி. ஸ்ரீனிவாசலு நாயுடு,
,, சி. ஆர். சதாசிவம், ,, எ. துரைசாமி நாயுடு,
,, ஜி. புருஷோத்தமன், ,, ஆர். குருசாமி நாயுடு,
ஸ்ரீ ஆர். வி. லட்சுமைய நாயுடு.

கதிர்கள் : 51,952 **தறிகள் : 389**

நூல் : 10 முதல் 80 நெ. வரை எல்லாவிதமான நூல்களும், பனியன் காரிகம், சலவை முதலிய எல்லாவிதமான நூலும் கிடைக்கும்.

நெசவு : எல்லாவித ஜவுளிகள், உயர்ந்த ஷர்டிங், லாங்லாத், கதர் துவாலைகள், வேஷ்டிகள் முதலியவைகள் தயாரிக்கப்படுகின்றன

சுதேச மூலதனம்! பாரதத் தொழில்!! பாரதீய நிர்வாகம்!!!

Agents & Secretaries :

R. G. S. NAIDU & CO.,
COIMBATORE.

Telegrams: 'CHARITY.' Phone: 58.

P. S. G. & SONS'

CHARITY INDUSTRIAL INSTITUTE,

PEELAMEDU P. O.,

COIMBATORE.

Manufacturers of

Fine Cotton Piece Goods of

40s 60s 80s.

Sales Branch:
**Avanashi Road,
Coimbatore.**

Factory:
Peelamedu.

சேவையே எமது லக்ஷியம்.

THE PIONEER FIRE & GENERAL INSURANCE COMPANY LIMITED

பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: ஜெயில் ரோடு, கோயமுத்தூர்

—o—

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து
முதலிய எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸ்
களும் ஏற்று வருகிறோம்.

செல்வாக்கும், திறமையும் வாய்ந்த ஏஜெண்டுகளும், ஆர்கனைசர்களும்
தாராளமான நிபந்தனைகளின் பேரில் தேவை.

விபரங்களுக்கு:

தலைமை ஆபீசுக்கு எழுதுக.

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்.

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

மூலதனம் மானேஜ்மேண்டு தொழிலாளர்

ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்

சுதேசி நூலையே வாங்குங்கள்.

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே

நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்

இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அநுபவம் நிறைந்தவர்களால்

நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல

டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்.

Managing Agents:—

N. APPUSWAMY NAIDU & CO.,

Managing Director:—

G. V. MUTHUSWAMY, B. Sc.,

கலைக்கதிர்

ஆசிரியர்: திரு. ஜி. ஆர். தாமோதரன்,
[B. Sc., Elec., B. Sc. Mech. (Durham). A. M. I. E. E. (London.)]

மலர் – க   விரோதி : சித்திரை   இதழ் – ரு

பொருளடக்கம்

அரசாங்கக் கவிஞர் ...	திரு. ஜி. ஆர். தாமோதரன் ...	3
வினாக்களும் விடைகளும் ...	...	7
இருண்ட சத்திரம் ...	டாக்டர் – மு. வ. ...	9
மனிதனும் சூழ்நிலையும் ...	திரு. தா. ஏ. சண்முகம் ...	13
விஞ்ஞானத் துணுக்குகள் ...	'வி. ஞானி' ...	17
திருக்குறளும் யாகங்களும் ...	திரு. அ. இராமசாமிக் கவுண்டர் ...	18
கடற்கரை ...	திரு. தா. ஏ. ஞானமூர்த்தி ...	22
எக்ஸ்-கதிர் ... படக் கருவி ...	'யூசிஸ்' ...	27
உள்ளத்தின் உண்மை ...	திரு. தா. ஏ. சண்முகம் ...	29
சங்க காலச் சோழர்கள் ...	திரு. தி. வை. சொக்கப்பா ...	31
பொன் பூக்கும் கடல் ...	திரு. ஈ. த. இராசேசுவரி அம்மையார் ...	35
பறவையின் ... இயல்புகள் ...	திரு. பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி நாயுடு ...	42
தொழில் வளர்ச்சி ...	திரு. சி. வேலாயுதம் ...	48
என் உதவி? ...	திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் ...	58

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை கதை முதலியவற்றின் கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

விலை 8 அணா



அரசாங்கக் கவிஞர்

அரசாங்கக் கவிஞர்

திரு. ஜி. ஆர். தாமோதரன்

கலைகளெல்லாவற்றுள்ளும் தலை சிறந்து விளங்குவது இலக்கியம். இவ்விலக்கியத்துள்ளும் கவிதையாகிய இலக்கியமே சிறப்பாக மதிக்கப்படுகின்றது. ஏனென்றால் கவிதைக்குத் தனி சக்தி உண்டு. 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்ற பழமொழி கவிதைக்குப் பொருந்தாது. கவிதையைப் படிக்கப் படிக்க அதன்பால் மேன்மேலும் ஆர்வமும், விருப்பமும் ஏற்படுமேயன்றிச் சலிப்போ, வெறுப்போ ஏற்படுவதில்லை. படிப்போர் நெஞ்சினைக் கவர்ந்து இன்பத்தைத் தந்து தன்னோடு ஐக்கியப்படுத்தும் வன்மையுடையது கவிதை.

"கவிதை வாழ்க்கை வகையினை ஆராய்ந்து தெளிவு படுத்துவதாகும்," என்று மேலைநாட்டு அறிஞர் ஆர்னால்டு கூறுகின்றார். நல் வாழ்க்கைக் கேற்ற சிறந்த கருத்துக்களை அழகான முறையில் எடுத்துச் சொல்ல வல்லவனே கவி என்று போற்றுதற் குரியவன். கவி கண்ட உண்மையே கவிதையின் உயிர். அவர் அமைக்கும் இனிய அழகிய சொற்களே அதன் உடல்.

நமது அரசாங்கக் கவிஞர் தற்கால உலகை நன்கு ஆராய்ந்து அதன் தவறான போக்கை நினைந்து நினைந்து வருந்துகிறார்.

வெட்டி வெட்டிக் கொல்லுவார்
வீரம் என்று சொல்லுவார்
சுட்டுச் சுட்டுத் தள்ளுவார்
சூரம் என்று துள்ளுவார்
திட்டித் திட்டி ஏசுவார்
தீரம் என்று பேசுவார்
கட்டு வார்த்தை தீருமோர்
காலம் வந்து சேருமோ

அன்பின் வெற்றி அல்லவே
அறிவின் வெற்றி அல்லவே
வம்பு தும்பு வாது ஆதி
வறுமை வெற்றி பெற்றது
துன்பம் வெற்றி பெற்றது
துயரம் வெற்றி பெற்றது

என்பன அவர் வருந்திப் பாடியவை. தற்கால உலகப் போக்கைக் கண்டு வருந்தும் இவர், இனி உலகம் எப்படி அமைய வேண்டும் என்பதையும் வகுக்கின்றார்.

சோறும் துணியும் இல்லாமல்
சோம்பி இங்கு எவரும் நில்லாமல்

படிக்காதவர் எனச் சொல்லாமல்

ஜாதிக் கொடுமைகள் நீங்கிடவும்
சமரச உணர்ச்சிகள் ஓங்கிடவும்
நீதிக் கெல்லாம் இருப்பிடமாய்
நிற்குமோர் அரசியல் உருப்படவே

வரிகளை எல்லாம் குறைத்திடவே
வரும்படி விளைவுகள் நிறைத்திடவே

மனிதனை மனிதன் ஏய்ப்பதையும்
மக்களைப் போரில் மாய்ப்பதையும்
தனியொரு வழியில் தடுத்திடவே ஓர்
தருமம் உலகினில் தழைத்திடவே

என்பன நம் கவிஞரின் உள்ளத்திலிருந்து எழுந்த மொழிகள்.

வாளுக்கு வாளும், வில்லுக்கு வில்லுமாகப் பல போர்க் கருவிகளைத் தாங்கி நாடுகள் ஒன்றோடொன்று போரிட்டு அழியும் உலக நிலைக்கு ஏற்றதொரு மருந்து நமது கவிஞர் கண்டு உரைக்கின்றார். அதாவது—

சத்தியம் சாந்தம் இரண்டு சரக்கை
சமனிடை அன்பெனும்
தேனில் குழைத்துப்
பத்தியம் தெய்வ நினைப்பொடு [உண்டால்
பாருக்குள் பேருக்கும்
போரிலை கண்டாய்

இக்கவிதை புனையும் கலையைத் தமிழர் பழங்காலந்தொட்டு ஆதரித்து வந்திருக்கின்றனர். பழங் காலத்தில் கவிகளுக்கு இருந்த பெருமை வேறு எவருக்கும் இருந்ததில்லை. பேரரசர்களும் சிற்றரசர்களும் கவிபாடும் புலவர்களோடு நட்புக்கொள்ளப் பெரிதும் ஆசைப்பட்டார்கள். எல்லா இலக்கியங்களும் செய்யுள் வடிவிலேயே செய்யப்பட்டன. தமிழர் பேச்சும் கவிதைகளாகவே விளங்கின. சுருங்கக் கூறின், பண்டைத் தமிழகத்தில் கவிதை வெள்ளம் பெருகி ஓடியது எனலாம்.

இன்றும் தமிழகத்தில் கவிதையின் பெருமை மறையவில்லை. கவிதைக்கு இன்றும் சிறப்பு அதிகமாகவே இருந்து வருகிறது. கவிஞர்களை ஆதரிக்கும் பண்பு இன்றும் தமிழ் நாட்டில் உண்டு என்பதற்குச் சான்றாக நாமக்கல் கவிஞரைச் சென்னை அரசினர் தம் அரசாங்கக் கவிஞராக நியமித்துள்ளதே விளக்குகிற தல்லவா?

காலத்திற்கேற்பக் கவிதைகளின் சொல்லும் பொருளும் அமையும். பண்டைச் சான்றோர்களின் செய்யுட்கள் அந்தந்தக் கால நிலைக்கேற்பச் சொல்லையும் பொருளையும் கொண்டு விளங்குகின்றன. நமது கவிஞரின் கவிதைகள் தற்கால நிலைக்கு ஏற்றவை. இவருடைய பாடல்களில் பெரும்பாலானவை நம் நாடு அடிமை நிலையில் இருந்தபோது பாடப்பட்டவை. இவை அடிமையின் இழிவையும் விடுதலையின் பெருமையையும் உணர்த்துவனவாம். மேலும் இவை மக்களின் தளர்ந்த உள்ளம் எழும்படியாகத் தூண்டும் ஆற்றல் படைத்தவை. காந்தியடிகளின் கொள்கைகளே இவருடைய பாடல்களுக்கு உயிராக அமைந்துள்ளன.

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது

என்று தொடங்கும் இவருடைய பாடல் எத்தனையோ உள்ளங்களைக் கொள்ளை கொண்டுவிட்டது.

நமது கவிஞர், பெரியார் காந்தியடிகளிடத்தில் அசையாத அன்புகொண்டவர் என்பதையும் காந்தியமே உலகெங்கும் பரவவேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்டவர் என்பதையும் இவருடைய பாடல்கள் நன்கு விளக்குகின்றன.

உள்ளம் உருகுது கள்ளம் கருகுது
உத்தமன் காந்தியை நினைத்து விட்டால்
வெள்ளம் பெருகிடக் கண்ணீர் வருகுது
வேர்க்குது இன்பம் தேக்குதடா

என்பது நமது கவிஞர் பாடல். காந்தியடிகளின் பெருமையைக் கவியாகப் பாடுதற்குக் கம்பன் இல்லை என்றும் கற்பித்துரைப்பதற்குக் காளிதாசனும் இல்லை என்றும் கீர்த்தனையாகப் பாடுதற்குத் தியாகையரும் இல்லை என்றும் நம் கவிஞர் வருந்திப் பாடுகின்றார். மேலும் பாரதிபோல் பாடுதற்குத் தமக்குத் திறமும் இல்லை என்று இவர் அடக்கத்தோடு பேசும் திறம் நெஞ்சை உருக்குகின்றது. காந்தியடிகள் மறைந்த பின்பு நாமக்கல் கவிஞர் உள்ளம் உருகிப் பாடிய பாக்கள் பல. இவர் காந்தியடிகளாகிய பெரியாரைப் பாடியதுபோல் இதுவரை வேறு எவரும் இத்தனைப் பாடல்களால் எப்பெரியாரையும் எந்நாட்டிலும் எம்மொழியிலும் பாடியதில்லை. எனவே, உலகமெலாம் போற்றும் உத்தமராகிய காந்தியடிகளை உள்ளங் கனிந்து பல பாக்களால் பாடும் பெருமை நம் கவிஞருக்கே உரியதாகும்.

தவிர, பெரியவர் எவராயினும் அவர்களைப் போற்றிப் பாடும் பண்பு உடையவர் நாமக்கல் கவிஞர். திலகர் இறந்த செய்தியைக் கேட்டதும்,

இடியது விழுந்ததோதான் இரும்பினைப்
பழுக்கக் காய்ச்சி
இரு செவி நுழைந்ததோ தான்

என்று கதறினர். இங்ஙனமே, இவர் கோபால கிருஷ்ண கோகலே, சிதம்பரம் பிள்ளை, கவி தாகூர், உ. வே. சாமிநாதையர் ஆகிய இவர்களைக் குறித்து நெஞ்சுருகிப் பல பாக்கள் பாடியிருக்கின்றார்.

நாமக்கல் கவிஞர் எப்பொழுதும் தம்மையொத்த புலவர்களைப் புகழ்ந்து பேசும் உயர்ந்த குணத்தை உடையவர் என்பது

தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பது என் செவிப்
[பெருமை

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைப் பாராட்டிப் பாடுவதனின்றும் விளங்கும்.

நம் கவிஞர் தம் கொள்கைகளை எதிர்த்துப் பேசுபவர்களை என்றும் கடிந்து பேசியதில்லை. அவர்கள் தவறான முறையில் செல்வதைக் குறித்து அவர்களுக்காகத் தாம் வருந்துவதே அவர் பண்பு. சங்க காலத்தில் இருந்த சாத்தனர் என்னும் புலவர் சங்கத்தில் அரங்கேற்றப்படும் நூல்களில் குற்றம் காணுவாரானல் அக் குற்றங்களுக்காகத் தாம் வருந்தித் தம் தலையில் குத்திக்கொள்வாராம். இப்படி அடிக்கடி குத்திக்கொள்ளவே அவர் தலையில் புண்ணுகிச் சீழ் பிடித்து விட்டது. அதனல் அவர் சித்தலைச் சாத்தனர் என்று அழைக்கப்பட்டார் என்பர். பிறர் குற்றங்களுக்குத் தாம் வருந்தும் குணத்தைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பெற்றிருந்தார்கள். இக் குணம் காந்தியடிகளிடத்தில் நிறைந்திருந்த தென்பதை உலகம் அறியும். அவர் வழிச்செல்லும் நம் கவிஞரும் அக்குணத்தோடு விளங்குகின்றார்.

காந்தி வழி பழைய வழி என்றும் அவர் கொள்கை தற்காலத்திற்குப் பொருந்தாது என்றும் கருதிப் பரிகாசம் செய்வோரை நேர்முகமாகக் கடிந்துரையாமல் அவர்களைக் குறித்து நமது கவிஞர் வருந்தி,

சாந்த வழி சத்தியத்தில் சலித்தாய்
[நெஞ்சே
சன்மார்க்கப் பழக்க மில்லாச்
[சகவாசத்தால்
காந்தி வழி பழசாகப் போன தென்று
கதி மாற மாறிக் கருநுகின்ருய்

என்று தன் நெஞ்சைப் பார்த்துப் பேசுகின்றார். மேலும் காந்தி வழி பழையது என்று கருதுவது

பெற்றெடுத்த தாய் மிகவும் பழசாய்ப்
[போனுள்
பிறிதொரு தாய் வேண்டு மென்று
[பேசுவார் போல்

இருக்கிறது என்று மிக்க நாகரிகமான முறையில் நயமாக அறிவுறுத்துகின்றார். மேலும் காந்தி தொல்லறத்தின் புதுப் பதிப்பேயாகும் என்று அவர் சாற்றுகின்றார்.

கவிகளுக்கு இயற்கையே ஒரு பெரிய நூலாகும். அடிக்கடி அவர்கள் இயற்கையில் ஆழ்ந்து சிறந்த உண்மைகளைக் காண்பார்கள்.

மடக்கிய பயிர்கள் எல்லாம்
மழை வர நிமர்ந்து நீளும்
ஒளிந்திடும் நாகம் நல்ல
ஓசையால் வெளி வந்தாடும்

என்று இயற்கைக் காட்சிகளை நாமக்கல் கவிஞர் விளக்குகின்றார். நெற்கதிர்கள் முற்றித் தலைசாய்ந்த வண்ணம் நிற்கும் பயிர்களைக் காணும் கவிஞர் பெரியோர்களைக்கண்டு அறிஞர்கள் தலைவணங்கி நிற்பதுபோல இருக்கிற தென்று கூறுகின்றார். இதனல் இவர் இயற்கை அழகில் ஈடுபட்டு உண்மை காணும் ஆற்றல் வாய்ந்தவர் என்பது தெளிவாகிற தல்லவா?

பொதுவாக, கவிகள் எல்லா வேற்றுமைகளையும் கடந்தவர்கள். சாதி, மதம், நிறம், நாடு ஆகிய இவை பற்றிய வேற்றுமைகள் கவிகளுக்கு இல்லை. அவர்கள் 'யாதும் ஊரே

யாவரும் கேளிர்' என்று உலகத்தை ஒரே சமுதாயமாகக் காணும் பெரு நோக்கம் கொண்டவர்கள். நமது கவி ஞரும் இப்பரந்த நோக்கம் கொண் டவர் என்பதற்கு அவருடைய பாடல் களே சாட்சியாக அமைகின்றன. இவ ருக்கு மற்ற மொழிகளின்மீது வெறுப்பு இல்லை என்பது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. மற்ற மொழி களிலே உள்ள அரிய கருத்துக்களையும் தமிழிலே கொண்டு தமிழுக்கு ஆக்கம் செய்கின்றார் என்பதைத் தமிழுலகம் அறியும்.

இனி, இவர் கவிதைகளே அன்றி சிறந்த வசன நூல்களும், நாவல்களும் இயற்றியுள்ளார். இவர் ஆக்கிய இலக் கிய இன்பம் என்ற நூல் கம்பன் காவி யத் திறனைத் தெளிவாக எடுத்துக்காட் டுகிறது. இந்நூலைப் பலமுறை படித்து இன்பமடையலாம். இவருடைய வசனம் யாவரும் படித்து அறிந்து கொள்ளுமாறு எளிய, இனிய நடையில் அமைந்துள்ளது. பெரிய பொருளை யும் தம் உரைநடையின் ஆற்றலால் கவிஞர் எளிதில் விளக்கிச் சொல் கின்றார்.

நாமக்கல் கவிஞரை இன்றைய அர சாங்கத்தார் ஆஸ்தானக் கவிஞராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆண்டு தோறும் ஆயிர ரூபாய் கொடுப்பார்கள். இத்தொகையைத் தமிழுக்கு அரசாங் கத்தார் நிர்ணயித்துள்ள விலையாகக் கொள்ளலாகாது. மிகச் சிறிய தொகை; நிறையக் கொடுக்கவேண்டும். 'இராமலிங்கம் பிள்ளைக்கா நிறையக் கொடுப்பது' என்று எண்ணக்கூடாது. தமிழ்ப் புலவனுக்குத் தமிழ் மக்களின் சார்பாக அரசாங்கம் தருகிற காணிக் கையாகத்தான் கொள்ளவேண்டும். இந்தக் கருத்தோடு காணும்போது ஆண்டொன்றுக்கு ஆயிர ரூபாய் என்பது மிகச் சிறிய தொகைதான்.

இக்கவிஞர் பெரியார் கவிமழை பொழிய இன்னும் பல்லாண்டுகள் இனிதே வாழவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.

வாழ்க கவிஞர்! வாழ்க தமிழ்!

'ஆடவரும் பெண்டிரும்'

"எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் திருமணம் செய்துகொள்வது பெண்ணின் வேலையாகும், திருமணத்தை எவ்வளவு காலம் தள்ளிப்போட முடியுமோ அவ்வளவு காலம் தள்ளிப்போடுவது ஆடவ னின் வேலை".

— பர்னார்ட் ஷா.

வினக்களும் விடைகளும்

பசிக்காமலிருக்க வழி ஏதாவது இருக்கிறதா?

உணவுப் பங்கீடு காலத்தில் இதை அனுசரிக்க உத்தேசமோ? தென் அமெரிக்காவில் அதிகமாகக் காணப் படும் எரித்ராக்ஸிலான் கோகா (Erythroxylon Coca) என்ற மரத் தின் இலைகளில் கோகெய்ன் (Cocaine) என்ற பொருள் இருக்கிறது. இதை உட்கொண்டால் பசி தோன்ருது. பசியென்ப தில்லாமலே சில நாட்கள் சாதாரணமாக இருக்கலாம். சற்று அதிகமாகத் தின்ருல் மயக்கப் பொருளைப்போலப் போதையளித்து உலகக் கவலைகளை மறக்கச்செய்யும். ஆனல், பழக்கப்படுத்தினல் இது நம்மை விடாது; நிறுத்திவிட்டால் சோர்வு மேலிடும். அளவுக்கு மீறி ஞல் சித்த சுவாதீனம் இராது.

சிறு சத்திர சிகிச்சைகளின்போது இம்மருந்து ஊசியா லேற்றப்பட்டால் வலியை மறைக்கவும் பயன்படுகிறது.

ஆணைப் பெண்ணக்க மருந்துகள் கண்டு பிடித்திருக்கிருர்களாமே, நம்ப லாமா?

தாராளமாக நம்பலாம். இந்த மருந் துகளைச் சேவல் முதலிய ஆண் பிராணி களுக்குக் கொடுத்தால் பெண் தன் மைக்கு உரிய மாறுதல்கள் அதன் உடம்பில் நிகழுகின்றன. மருந்து கொடுப்பதை நிறுத்தினல் மறுபடியும் ஆண்தன்மை திரும்பிவிடுகிறது.

உடம்பில் பெண் தன்மைக்குக் காரணமான ஈஸ்ட்ரோ ஜென்ஸ் (Oestrogens) என்ற பொருள்களைச் சில சுரப்பிகள் (glands) உண்டாக்கு கின்றன. இவற்றைவிடச் சக்தி வாய்ந்த மருந்துகளைச் செயற்கை முறையில் தயாரித்துள்ளார்கள். இவை களின் பெயர் ஸ்டில்போஎஸ்ட்ரால், (Stilboestrol), ஹெக்ஸோஎஸ்ட்ரால் (Hexoestrol), டியனேஎஸ்ட்ரால் (Dienoestrol) முதலியவை.

இதைவிட உபயோகமானது ஆண் தன்மைக்குக் காரணமான டெஸ் டோஸ்டிரோன் (Testosterone) என்ற பொருள். செயற்கை முறையில் இதைக் கொலெஸ்டெரால் (cholesterol) என்ற பொருளி லிருந்து தயாரிக்கி ருர்கள். பெட்டைக் கோழிகளுக்கு இதைக் கொடுத்தால் சேவலைப் போலக் கொண்டை வளர்ந்து, சண்டையிடு வதற்குரிய ஆண்மை தோன்றுகிறது. வயதாகித் தளர்ந்த குதிரைகளுக்கு ஒரு அவுன்ஸு எடையில் அறுபதில் ஒரு பங்கு ஊசிமூலம் உட்செலுத்தி யதில் பந்தயங்களில் வெற்றியடைந்து வியப்பூட்டின; அலிகள் ஆண்மையெய் தினர். சக்தி மிக்க இம்மருந்துகளை ஊசி மூலம் உட்செலுத்தவும், வாயால் உட்கொள்ளவும் முடியும். பஞ்சாப், லாகூர் முதலிய இடங்களி லிருந்து வரும் போலி விளம்பரங்களைப் போலன்றி, வாலிபம் தரும் இம் மருந்துகளை முற்றிலும் நம்பலாம்.

சில மருந்து மாத்திரைகளுக்கு M & B 693 என்று பெயரிட்டிருக் கிருர்களே, அப்படியென்ருல் என்ன?

M & B என்ருல் அதைத் தயார் செய்பவர்களாகிய மே அண்டு பேக்கர் (May & Baker) கம்பனியைக் குறிக் கும். 692 மருந்துகளைச் சோதனை செய்து சரிப்படாமல், 693-ம் தடவை யாகச் சரியான மருந்தைக் கண்டுபிடித்த தால் அதற்கு இப்பெயர் இடப்பட்டது.

அதன் சரியான பெயர் என்ன தெரியுமா? — பேரா-அமினோ பென் ஸீனி ஸல்பைனமிடோ பிரிடின் (2pamino benzene sulphinamido pyridine) என்பது.

நைலான் (Nylon) ஸில்க் சிறந்ததா?

செயற்கைப் பட்டு (ஸில்க்), நல்ல பட்டைப்போல் பலமுடையதல்ல என்பதை யாவரும் அறிவர். இயற்கைப் பட்டு நனைந்தாலும் பலங் குன்றுகதது; செயற்கைப் பட்டை நீரில்போட்டவுடன் அதன் பலம் மிவுகம் குறைந்துவிடுகிறது.

அமெரிக்க அறிவியல் நிபுணர்கள் இதை உத்தேசித்து நல்ல பட்டின் அமைப்பை (Structure) யொட்டி, நனைத்தாலும் பலம் குறையாத பட்டைச் செயற்கை முறையில் தயாரிக்க முனைந்தார்கள். அதன் பயனாக நைலான் தோன்றியது. இது நல்ல பட்டைப்போல் ஏறக்குறைய இரண்டத்தனைப் பலமும், நீரினால் பாதிக்கப் படாமலும்இருப்பதால், நைலான் சிறந்தது என்பதற்கு ஐயமில்லை.

வைரஸ்

வைரஸ் (Virus) என்பவை உயிரணுக்கள் என்று கருதப் பட்டன. வியாதிகளைப் பரப்பிவந்த இவற்றின் அமைப்பைக் காண முற்பட்ட மனிதனின் முயற்சிகள் வீணாயின.

1935-ம் வருடம் சில அறிஞர்கள் இவற்றில் சிலவகைகளை ஆராய்ந்து இவை உடம்பில் அணுவளவுள்ள உயிரற்ற பொருள்கள் என்று கண்டார்கள். இவை உடம்பில் புகுந்தால் தம்மைப்போல ஆயிரக் கணக்கான அணுக்களை உண்டாக்கிக்கொண்டு உடலுக்கு ஊறு விளைக்கின்றனவாம்.

துணிக் கடைகளில்தான் எத்தனை எத்தனை வகையான துணிகளைக் காண்கிறோம்! அத்தனை வகைகளையும் வாங்க ஆட்களிருப்பது கண்டு மிகுந்த வியப்பு உண்டாகிறது. இதேதான இலக்கியத் துறையிலும் காணக் கிடக்கிற உண்மையுமாகும். பல வகை; பல சுவை — காழ்ப்பு வேண்டாம் ....

இருண்ட சந்திரம்

டாக்டர் - மு. வரதராசன், M.O.L., PH.D.

துணிக்கடையுள் நுழைந்து பார்க்கத் தொடங்கினுல், வெவ்வேறு வகையான மக்கள் வெவ்வேறு வகையான துணிகளை வாங்கிச் செல்வதைப் பார்க்கலாம். ஆண்களும் பெண்களுமாகப் பலர் வந்து வாங்குகின்றார்கள் என்றும் பருத்தியாடையும் பட்டாடையுமாகப் பலவற்றை வாங்குகின்றார்கள் என்றும் சுருக்கமாகச் சொல்லிவிடலாம். ஆனல், இது வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை காண்பதில் வல்ல அறிஞனுடைய - தத்துவ ஞானியினுடைய—கருத்தாக இருக்கலாம். பொதுமக்கள் இவ்வாறு சுருக்கி ஒற்றுமைப்படுத்திக் கூறமாட்டார்கள்; கலைஞர்களும் இவ்வாறு கூறமாட்டார்கள். அவர்களுடைய கண்களுக்கு ஆடைவகைகளின் பற்பல வேறுபாடுகளே தெளிவாகத் தோன்றும்.

ஆடைகளின் நிறத்தையும் பளபளப்பையும் பார்த்து வாங்குவோர் சிலர். நிறங்களிலே சிலர்க்குச் சில நிறம் பிடித்திருக்கும்; சிலர் விரும்பும் நிறத்தையே வேறு சிலர் வெறுப்பதும் உண்டு. பழைய காலத்துக் கரையையும் அமைப்பையும் நாடி வாங்குவோர் சிலர். சென்ற ஆண்டில் பாராட்டப்பட்டிருந்த கரையும் கோடுகளையும் மதிக்காமல், நேற்றும் இன்றும் புதிதாகப் பரவிவருகின்ற புதுவகைக் கரை கோடு முதலியனமட்டும் பார்த்து வாங்குவோர் சிலர். விலையைக் கேட்டறிந்து, கஜம் பத்து ரூபாய்க்குக் குறைவாக உள்ள மட்டவகையான துணியை வாங்குவதில்லை என்று நோன்பு கொண்டவர்கள் சிலர். அவர்கள் துணியின் விலைமதிப்பால் தங்கள் வாழ்க்கையின் மதிப்பும் உயரும் என்ற உறுதியான நம்பிக்கை கொண்டு, நம்பிக்கைக்குப் பழுதில்லாமல் வாங்குவார்கள். கருநாடகம் என்று சொல்லத்தக்க சிலர் தாங்கள்வழக்கமாக இருபது முப்பது ஆண்டுகளாக வாங்குகிற துணியையே கடைகடையாகத் தேடிக்கொண்டு திரிவார்கள். காலம் எந்த வகையாக மாறினுலும் அவர்கள் கவலைப்படாமல், தங்கள் பழக்க வழக்கத்தை ஒட்டிக்கொண்டு நடப்பார்கள். அவர்கள் தேடுகின்ற ஆடை இல்லை என்றாலும், 'அது எங்கே கிடைக்கும், எப்போது தருவிப்பீர்கள்' என்று சலிக்காமல் கேட்பார்கள். வாழத் தெரிந்தவர்கள் சிலர் - வாழ்க்கைக் கலையில் வல்லவர்கள் சிலர் - இப்படி ஆடை தேடாமல், எது நன்றாக உழைக்கும், எது விலை குறைவு, விலை குறைவாக இல்லாவிட்டாலும் நாள்பட உறுதியாக இருக்கக்கூடியது எது என்றெல்லாம் தேடி வாங்குவார்கள். திருவள்ளுவர்

காந்தியடிகள் போன்ற மனப்பான்மை உடைய வேறு சிலர், "எளிய ஆடை எது? அது தூய்மையானதா? நன்மக்களால் நூற்று நெய்யப்பட்டதா? இந்த நாட்டுப் பொருளா? இந்த ஆடை செய்யப்படுவதில் எவ்வகைப் பாவத் தொழிலும் கலக்கவில்லையே? குற்ற மற்றதுதானே?" என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்து வாங்குவார்கள்.

இத்தனை வகையான மக்களுக்கும் இடங்கொடுத்து அவரவர்க்கு வேண்டிய ஆடைவகைகளைத் துணிக் கடை விற்றுக்கொண்டிருக்கக் காண லாம். கலையுலகமும் ஏறக்குறைய இப் படிப்பட்டதுதான். பாட்டுக் கலையிலும் இவ்வளவு வேறுபட்ட துறைகள் இருப்பதைக் காணலாம்.

துணிக்கடையில் கண்ட மக்களை நோக்கி, "இங்குள்ள ஆடைகளில் உயர்ந்தது எது?" என்று கேட்போமானால், ஆளுக்கு ஒரு வகையான விடையே கூறுவர். அவரவர்களின் விடைக்கும் காரணம் இல்லாமற்போக வில்லை. ஆழ்ந்துணர்ந்தால் காரணங்கள் புலப்படும். இன்று பாட்டைப் பாடி உணர்ந்து இன்புறும் மக்களை நோக்கி "உயர்ந்த பாட்டு எது?" என்று கேட்டாலும், பற்பல வகையான விடைகளே வரும். அவைகளுக்கும் காரணங்கள் உண்டு. ஆனால், ஆடை வகைகளுக்குள் காரணம் கூற முடிவது போல் அவ்வளவு எளிதில் பாட்டு வகைகளில் காரணம் கூற முடியாது. காரணம் என்ன? ஆடைகளின் நிறம், விலைமதிப்பு, உறுதி, மென்மை, தூய்மை முதலியவை பெரும்பாலோர் அறிந்தவை. ஆனால், பாட்டின் ஓசையின்பம், கற்பனை வளம், உணர்வுச் சிறப்பு முதலியவற்றைப் பலரும் எளிதில் அறிய முடியாது. பலரும் இன்புற முடியும் என்றாலும், இன்பத்திற்கு இன்ன காரணம் என்று ஆராய்ந்தறியச் சிலரால்தான் முடியும். இப்படி எளிதில் காரணம் காண முடியாத துறைகளில் மூடநம்பிக்கைகள் புகுதல் இயற்கை. பாட்டுத் துறையில் பலவகை மூட நம்பிக்கைகள் வாழ்வது இதனால்தான்.

நல்ல ஆடை என்று அறிஞர்கள் பொதுவாகக் கருதக்கூடிய ஒன்றில் போதுமான அளவு நிறம், பளபளப்பு, உறுதி, மென்மை, மதிப்பு முதலியவை இருக்கின்றன. அதுபோலவே கலைஞர்கள் பொதுவாகப் போற்றுகின்ற நல்ல பாட்டிலும் போதிய அளவிற்கு ஓசையின்பம், கற்பனைவளம், உணர்வுச் சிறப்பு ஆகியவை அமைந்திருக் கின்றன. ஆனால், இந்தப் 'போதிய அளவு' என்பது எப்போதும் பலரும் விரும்புகின்ற அளவு அன்று. இதனால் தான் எல்லாத் தொல்லையும் கருத்து வேறுபாடும் விளைகின்றன. ஆடையின் நிறத்திலே அல்லது பளபளப்பிலே மனம்செலுத்தி விருப்பத்தை வளர்த்து விட்ட ஒருவர் உறுதி, தூய்மை முதலியவற்றைப் புறக்கணிப்பது போலவே, ஓசையின்பம் அல்லது கற்பனைத் திறனில் விருப்பத்தை வளர்த்துவிட்டவர் உணர்வுச் சிறப்பைப் பொருட்படுத்தாமல் விடுகின்றனர். ஆடையின் தூய்மையில் நாட்டம் செலுத்திய காந்தியடிகள் மற்றவற்றைப் பொருட்படுத் தாதவாறு போலவே, பாட்டின் உணர்வுச் சிறப்பிலே கருத்துச் செலுத்தியவர் ஓசையின்பமும் கற்பனை வளமும் குறைவுபட்டிருந்தாலும் கவலைப்படாமல் போற்றுகின்றனர்.

தாயுமானவர் பாடலிலிருந்து ஒரு பாட்டைப் பாடிக் காட்டுகின்றார் ஒருவர்: 'என்ன சிறந்த உணர்வு! நினைத்தாலும் இனிக்கின்றதே' என்கின்றார். அதைக் கேட்ட மற்றொருவர், 'பாட்டென்றால் உயர்ந்த தத்துவ ஞானியின் உணர்வுமட்டும் இருந்தால் போதுமா? இதில் கற்பனை வளம் காணோமே. இதோ பார்' என்று முத்தொள்ளாயிரப் பாட்டொன்றைப் பாடிக் காட்டுகின்றார். இன்னொருவர், "ஆமாம், இருக்கிற ஒழுக்கக் கேடு போதாதா? பார்க்குமிடமெல்லாம் ஒழுக்கம் கெட்

டவர்களைப் பார்ப்பது போதாதென்று கற்பனையிலும் வேசையரைக் கண்டு மகிழ வேண்டுமா?" என்று சொல்லித் திருவாசகத்தில் திருவெம்பாவையிலிருந்து ஒரு பாட்டைப் பாடுகின்றார். மற்றொருவர் குறுக்கே புகுந்து, "என்ன இருந்தாலும் நாச்சியாருடைய பாட்டி லிருக்கிற கற்பனைக்கு ஈடு ஆகுமா?" என்று சொல்லி ஆண்டாள் திருப்பாவையில் முழங்கை நெய் வாரும் படமுள்ள பாட்டைப் பாடுகின்றார். உடனே வேறொருவர் கம்பரின் கற்பனைவளத்தை எடுத்துக் காட்ட முனைகின்றார்.

உடனே மற்றொருவர், "வந்து விட்டீர்களா பொய்க்கற்பனைக்கு? இல்லாததையும் இருக்க முடியாததையும் கற்பனை செய்து செய்து நாடு ஒரு படியும் முன்னேறவில்லையே! போதும் ஐயா" என்று குறுந்தொகைப் பாட்டு ஒன்றைப் பாடுவார். முதலில் தொடங்கியவர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, "பாட்டென்றால் ஓசையின்பம் வேண்டாமா? பாடினால் பொருளுணர்ச்சி புலப்பட வேண்டாமா? ஏதோ லத்தீன் மொழிபோல் இருக்கின்றதே" என்று, காளமேகப் புலவரின் "பெருமாளும் நல்ல பெருமாள்" என்ற வெண்பாவைப் பாடுவார். குறுந்தொகைப் பாட்டைப் பாடியவர் அதை விட்டு, இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையைப் பாடித் தம் இறுமாப்பைப் புலப்படுத்துவார்.

இந்தக் கருத்துவேறுபாடுகளையும் விருப்பு வெறுப்புக்களையும் ஒழித்துப் பாட்டின் சிறப்பை அளந்தறிவதற்காக அறிஞர்கள் முயன்று வருகின்றனர். 'கலை கலைக்காகவே, கலைத்துறையில் தத்தம் கொள்கை, கட்சி முதலியவற்றைப் புகுத்தி அளக்கக் கூடாது' என்று வரையறைப் படுத்தும் முயற்சி இப்படிப்பட்டதே. ஆனால், இந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை. அங்கும் நுட்பமான உணர்வுடைய கலைஞர்களின் சுவைக்கும் பொது மக்களின் சுவைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ளது போன்ற வேற்றுமை இருக்கின்றது. சினிமா உலகமே இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. கலைஞர்கள் போற்றும் படத்திற்குப் பொதுமக்களின் காசு கிடைப்பது அரிதாகவே உள்ளது. கலைஞர்கள் விரும்புவது நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் உள்ளத்தில் ஊறுகின்ற கலைத்தேன். பொதுமக்கள் விரும்புவது கண்டதும் கேட்டதும் உணரப்படும் போதை, கிளர்ச்சி வெறி. பாட்டுத் துறையிலும் இந்த இருவகைக்கும் இடம் உள்ளது. இரண்டும் இரண்டு எல்லைகள். இடையில் உள்ள நிலைகளோ பல. ஆகையால் ஒவ்வொரு வகையால் ஒவ்வொன்றைச் சிறந்த பாட்டு எனக் கொண்டு போற்றுகின்றனர். இவர் சிறந்தது என்று ஒன்றைச் சொன்னால் "அல்ல அல்ல" என்று மற்றொருவர் மறுக்க முனைகின்றார். இருவரும் தத்தம் எல்லைகளை விட்டு நெருங்கி வந்து காரணம் காண முயல்வதே இல்லை.

ஒரு சத்திரத்தில் இருண்டதோர் இரவில் தெலுங்கர் ஒருவரும் தமிழர் ஒருவரும் படுத்துறங்கிக்கொண் டிருந்தனராம். ஒரு தூக்கம் தூங்கி விழித்ததும் தெலுங்கர் தம் குடையை நினைத்துக்கொண்டு படுத்தபடியே தடவினாராம். அந்தக் குடை பக்கத்தி லிருந்த தமிழரின் தலைப் பக்கத்தில் இருந்தது. குடையைத் தடவியவர் அதை இழுத்ததும் தமிழரின் காதில் அது அகப்பட்டுக் கொள்ள, அவர் "காது காது" என்றாராம். தமிழ் தெரியாத அந்தத் தெலுங்கர், குடையை அந்த ஆள் தர மறுப்பதாக எண்ணி, "நாதி நாதி" என்று மறுபடியும் இழுத்தாராம். இருவர்க்கும் சினம் மூண்டு குழப்பம் ஏற்பட்டதாம். இப்படி ஒரு கதை வழங்குகின்றது. 'காது' என்ற தமிழ்ச் சொல்லிற்குத் தெலுங்கில் 'அல்ல' என்று பொருள். அதனால் "உன்

குடை அல்ல அல்ல'' என்று தமிழர் சொன்னதாகத் தெலுங்கர் எண்ணிச் சினங் கொண்டாராம். தமிழரோ தம்மை "நாதி நாதி'' என்று ஏதோ திட்டுவதாகச் சினங் கொண்டாராம்.

அவர் சொன்னது இவர்க்கு விளங்கவில்லை. இவர் சொன்னதோ அவர்க்கு விளங்கவில்லை. ஆனால், இருவரிடையே குழப்பம் ஏற்படுத்துவதற்குக் குடை காரணமாக இருந்தது. இன்று தமிழ் நாட்டில் பாட்டுப் படும் பாடு இதுதான். அவர் புகழ்வதை இவர் பழிக்கின்றார். இவர் புகழ்வதை அவர் பழிக்கின்றார். ஆனால், அவரும் இவரும் கூடித் தம் தம் காரணத்தை ஆராய்வதில்லை. விளக்கு இல்லாத இருண்ட சத்திரமாகத் தமிழ்நாடு உள்ளது. கற்பனை வளம், ஓசையின்பம், உணர்வுச் சிறப்பு முதலான காரணங்களை ஆராய இந்தச் சத்திரத்தில் வாய்ப்பும் இல்லை; வழியும் இல்லை. ஆராய முடிந்தால் காதும் நோகாது; கையும் வலிக்காது; பொருளும் உரிய இடத்தில் வாழும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமிழ்

பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு சக்திகளால் இயக்கப்பட்டு, பல வாறாகப் பெருங் கவிஞர்களால் கையாளப்பட்டு வந்தமையினாலே பல நல்லியல்புகளைத் தமிழ் பெற்றது. குறித்த பொருளை நேரிதின் உணர்த்தும் நேர்மையும், பேச்சின் இயற்கை ஓசையும், நெகிழ்ந்த ஓசை இனிமையும், கல்லார்க்கும் கற்றவர்க்கும் ஒருங்கே இன்பமூட்டி உணர்வைப் பெருக்குகின்ற பண் இனிமையும், பொருளை விழுங்கி நின்ற நடை இனிமையும் தமிழில் இயைந்தன. இவையேயன்றி, அணிகட்கு அணியாம் இயற்கை யழகும், பலவகைக் கருத்துக்களையும் உணர்த்தவல்ல ஆற்றலும் அமைந்தன. இந் நல்லியல்புகளோடு தமிழ் அமைந்துவிடவில்லை. வடசொற்கள் மிகுதியாகக் கலந்து தமிழின் இயற்கை நலத்தைக் கெடுக்கக்கூடிய நிலைமையும் இருந்தது. ஒருசில ஆடம்பர நெறிகளால் தமிழின் இயற்கைச் சுவை கெடுகின்ற நிலைமையும் இருந்தது.

— திரு. ச. வையாபுரிப் பிள்ளை.

கூட்டத்திலும் கூட்டுறவிலுமே வளர்ச்சி பெறுபவன் மனிதன், கூட்டத்துக்கும் கூட்டுறவுக்கும் ஏதுவாக அமைவதுதான் சமூகம் என்பது. சமூகம் இரண்டு வகை. இக்கட்டுரை செயற்கைச் சமூகத்தைச் சித்தரிக்கிறது.

மனிதனும் சூழ்நிலையும்

திரு. தா. ஏ. சண்முகம், M.A. M.Litt.

★

மனிதன் குமரப் பருவத்தைக் கழித்து, முதிர்ச்சிப் பருவத்தை அடைந்தவுடன் இந்த உலகின்கண் பல்வேறு சமூகங்களையும் அந்தந்தச் சமூகத்து மனிதர்களையும் காணும் வாய்ப்புக்களைப் பெறுகிறான். அறிவிலும், ஆற்றலிலும், உருவத்திலும், நிறத்திலும், பரம்பரை காரணமாகவும், அவனவன் வசிக்கும் குடும்பத்தின் சூழ்நிலை காரணமாகவும், அவன் வாழும் நாட்டின் வெப்பதட்ப நிலைமைகள் காரணமாகவும், மனிதர்களுக்குள்ளேயே மிக்க வேறுபாடுகள் இருக்கின்றன. ஏன்? ஒரே குடும்பத்தில் பிறந்த குழந்தைகளுக்குள்ளேயே வேற்றுமைகள் அதிகம் இருக்கின்றன. இந்த உண்மையை அறிவுறுத்தத்தான் ஓர் அறிஞர், 'மனிதர்களுக்கிடையே உள்ள வேற்றுமை இரண்டு கோள்களுக்கும் (Planets) இடையே உள்ள தூரத்தைவிட அதிகமானது' என்று கூறுகிறார். இந்தக் கருத்தை ஏற்று உலகத்திலுள்ள மக்களின் மதங்களையும் பண்புகளையும் நாகரிகத்தையும் ஆராய்ந்தோமானால், ஒவ்வொரு மனிதனும் ஒரு மதத்திற்கும் ஒருவகையான பண்புக்கும் நாகரிகத்திற்கும் காரணமாக இருக்கவேண்டும் என்பது புலனாகும். சான்றாக, உலகத்து ஆயிரம்கோடி மக்களை ஆராய்ந்தோமானால் ஆயிரம்கோடி சமயங்களும், ஆயிரம்கோடி வேறுபட்ட பண்பும், நாகரிகமும் மலிந்து இருக்கவேண்டும். ஆனால், நாம் காணும் உண்மை யாது? பொதுவாக கிறிஸ்துமதம், இந்துமதம், புத்தமதம், மகமதியமதம், சிண்டோ மதம் போன்ற மதங்களைத் தழுவுபவர்களையும், அதே போன்று எண்ணக்கூடிய அளவிலுள்ள பண்புகளையும், நாகரிகத்தையும் உடையவர்களாயுமே மக்கள் இருக்கிறார்கள். தற்போதைய அரசியல் நிலையை உலக ஆராய்ந்தோமானாலும்கூட உலகத்து மக்களெல்லாம் ஜனநாயகமோ, பொதுவுடைமையைப் போன்றவைகளையோ, பொதுவாகப் பின்பற்றுகிறார்கள். மற்றும் நடை, உடை, பாவனை, மொழி முதலியவைகளை ஆராய்ந்தால் ஒரு நாட்டினருக்கும், மற்றொரு நாட்டினருக்கும், வேறுபாடு இருந்தபோதிலும், ஒரே நாட்டிலுள்ள மக்களைப் பார்த்தால் ஒற்றுமை அதிகம் இருக்கின்றது. ஏன்? உலக சரித்திரத்திலே ஏற்பட்ட, பல்வேறு புரட்சிகளையும் (Revolution) மதவெறிகளையும், ஆராய்ந்தோமாயினும் எப்படி அந்தந்த நாட்டு மக்கள் ஒன்றுபட்டுச் சில சமயங்களில் மனிதனுக்கு இயற்கையான

பகுத்தறிவையும் நுண்ணறிவையும் இழந்து மிருகங்களைப் போல் நடக்கத் தலைப்பட்டார்கள் என்பது நன்கு விளங்கும். தற்போது உலகத்திலே நிறவெறியும், மதவெறியும், பல்வேறு பாகங்களில் காண்கின்றோம். தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள் இந்தியர்களையும் நீகிரோவர்களையும் நடத்தும் முறையும் உலகத்திலே ஜனநாயகத்தை நிலைநாட்டப் பாடுபடும் அமெரிக்க நாட்டினர், தங்களது நாட்டிலேயே, நீகிரோவர்களை நடத்தும் முறையும், நம் நாட்டிலே நடந்த இந்து முஸ்லிம் கலகங்களும் ஆகிய இவை மக்களுக்குள் ளிருக்கும் வேற்றுமை மனப்பான்மையை உணர்த்துவன வாயினும், அவர்கள் ஒன்றிவாழும் இயல்புடையவரே ஆவார்.

சமூகத்தோடு ஒத்துவாழ்வது மனிதனுக்கு இயற்கையாக அமைந்த ஓர் இயல்பாகும். 'சிங்கம், புலி போன்ற வன விலங்குகளும், ஆன்ம விசாரம் செய்யும் யோகியரும் தனித்து வாழும் குணமுடையவர்கள். ஆனால், மனிதன் பொதுவாகச் சமூக வாழ்வை நம்பி அதன் கொள்கைகளுக்கு ஒருவாறு கட்டுப்பட்டு வாழும் தன்மையை உடையவனாயிருக்கிறான். தான் பிறந்த குடும்பம், தான் பழகிய தோழர்கள், தன் மொழி பேசும் மக்கள், தான் வாழும் நாட்டு மக்கள் இவைகளோடு கலந்தும், ஒன்றியும் வாழ்வது மனிதனது இயல்பு. ஆனால், சமூகத்தோடு வாழும் இயல்பு மனிதனுக்குமட்டும் தனிப்பட்டது அன்று. ஊர்வன வகையிலும் பறவை இனங்களிலும், மிருகங்களிலும் இந்த இயல்பைக் காண்கின்றோம். எறும்பு, தேனீ போன்றவைகளின் விசித்திர வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குவோமானால், அவைகளது சமூக வாழ்க்கை, வியப்பை விளைவிக்கிறது. இந்த வாழ்க்கையை, நாட்டிலும், காட்டிலும் வாழும் சில மிருகங்கள் மேற்கொண்டு வாழ்கின்றன. ஆடுகளும், மாடுகளும், மான்களும், யானைகளும், ஓநாய்களும் எப்போதும் கூட்டமாகவே வாழ்கின்றன. எல்லா மிருகங்களையும் விடச் சமூக வாழ்வு குரங்கு இனத்திலும், சிறப்பாக மனிதக்குரங்கு (anthropoid apes) இனத்திலும் விளங்குகிறது. கோலர் (Kohler) என்ற உளநூல் பேரறிஞர் தம் ஆராய்ச்சி மூலமாக, மனிதக் குரங்குகளுக்குள், நெருங்கிய நட்பும் ஏற்படுவது உண்டு என்றும், ஒரு கூட்டத்திலுள்ள குரங்கு காணாது போய்விட்டால், அதற்காகச் சில சமயங்களில் வருந்துவதும் உண்டு என்றும், புதிதாக ஒரு குரங்கு வந்தால் கூட்டமாகச் சேர்ந்துகொண்டு அதைத் துரத்துவதும் உண்டு என்றும் கூறுகிறார். இந்த உண்மைகள், எப்படி மனித உருவம் மிருக உருவத்தினின்றும் பரிணாமத்தின் காரணமாக மாறுதலடைந்து பக்குவமடைந்ததோ, அதேபோன்று சமூக வாழ்க்கையும் அதற்கான இயல்புகளும் முறையே, ஊர்வன நீர்வாழ்வன, பறவை விலங்கு முதலியவைகளில் சூழ்நிலை காரணமாகத் தோன்றி, மனிதனிடத்தில் பக்குவமடைந்திருக்கிறது. சமூக வாழ்க்கையின் அடிப்படையான கொள்கை ஒன்றுபட்டால் உண்டு வாழ்வுஎன்பதே யாகும்.

சமூகம் என்னும் சொல் பொதுவாக வெவ்வேறு கூட்டங்களையும், குழுக்களையும், கழகங்களையும் குறிக்கும் ஒரு சொல். சாதாரணமாகச் சமூகத்தை இரண்டாகப் பிரிக்கலாம். அவை இயற்கைச் சமூகம் (natural society), செயற்கைச் சமூகம் (artifical society) என்பனவாகும். ஒருவனுடைய குடும்பம், அவன் விளையாடும் தோழர்கள் கூட்டம் முதலியவைகள் இயற்கைச் சமூகமாகும். செயற்கைச் சமூகமானது மனிதனால் அவன் நன்மைக்காகவும், பொழுது போக்குக்காகவும் ஏற்படுத்தப் பட்டவைகளாகும். பல்வேறு கழகங்களும், அந்தந்த நாட்டு அரசாங்கமும், செயற்கைச் சமூக

மாகும். மனிதன் இயற்கைச் சமூகத்தின் விளைவுகளி னின்றும் தப்ப முடியாது. அதேபோல்தான் செயற்கைச் சமூகமும் மனிதனது இயல்புகளைப் பல்வேறு வழிகளில் மாற்றியமைக்கிறது. நாம் கற்கும் கல்வி, நமது நடையுடை பாவனை முதலியவைகள் செயற்கைச் சமூகத்தின் பலனேயாகும். சில சமயங்களில் ஒரு நாட்டின் மக்களின் இயல்புகளையெல்லாம் மாற்றியமைக்கவும், செயற்கைச் சமூகத்தினால் முடியும். இந்த உண்மை, ஹிட்லர் ஜெர்மனியில் சிறுவர்களுக்குத் தம்முடைய கொள்கைகளைப் போதித்து அவர்களது இயல்புகளை மாற்றியதி னின்றும் உணரலாம். பொதுவாக ஜெர்மானிய மக்களின் குணத்தை மாற்றியதும், யூதர்களின்மேல் வெறுப்பை உண்டாக்கியதும் ஹிட்லருடைய அரசாங்கமாகிய செயற்கைச் சமூகமேயாம்.

குடும்பமாகிய இயற்கைச் சமூகத்தின்,முக்கியத்தை முன்பே கண்டோம். இப்போது செயற்கைச் சமூகத்தின் பலன்களும், விளைவுகளும் ஆராய்வோம்.

செயற்கைச் சமூகம் பல்வேறு வகைகளை உடையது. சந்தைகளிலும், கடைத்தெருக்களிலும், ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருக்கிறார்கள். அங்ஙனம் குழுமியிருப்பது ஒரு குழுவோ, அல்லது கூட்டமோ ஆகாது. ஏன்? அந்தக் கூட்டங்களி லுள்ள மக்கள் அவரவர்களது காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மனிதனும், கூட்டத்தில் இருந்தபோதிலும் தனியாகவே தனி மன உலகத்தில் இருக்கிறான். திடீரென்று ஓர் ஆபத்து ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். மக்களெல்லாம் ஒருங்கே திரண்டு ஆபத்து நேர்ந்த இடத்தில் சேருகிறார்கள். எல்லோருடைய நோக்கும், மனமும், அந்த ஆபத்து நேர்ந்த இடத்தில் பதிந்து இருக்கிறது. அந்த இடத்தில் குழுமியிருக்கிற மக்களையே 'கூட்டம்' என்றோ 'குழு' என்றோ உளநூலாசிரியர்கள் கூறுவார்கள். மேற்கூறிய கூட்டம், சிறிது நேரத்தில் அரசியல் சேவகன் வந்தால் மறைந்துபோய் விடும். இதுபோன்ற 'கூட்டம்' அடிக்கடி சேர்வது உண்டு. ஒரு 'திரைப்படம்' சம்பந்தமாகப் புதிதாக ஒரு பொது இடத்தில் ஒரு 'சித்திரத்தை' ஒட்டினால் ஜனங்கள் கூடியிருந்து சிறிது நேரத்தில் கலைந்துவிடுகிறார்கள். சிறுவர் பலர் குறும்புத்தனத்திற்காகக் கடைத்தெருக்களிலோ, கும்பல் அதிகம் இருக்கும் இடங்களிலோ, சூழ்ந்திருக்கும் மக்களின் கவனத்தைக் கவரும் பொருட்டு ஏதோ தேடுவது போன்று பாவனை செய்வார்கள். அங்கே ஒருவர் பின் ஒருவராக மக்கள் சேருவார்கள். கூட்டம் அதிகரிக்க அதிகரிக்கப் பின்னே வரும் மக்கள் ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டும் இடித்துக்கொண்டும் முன்னேசெல்ல முயலுவார்கள். அச்சமயத்தில் குறும்புத்தனமுள்ள சிறுவர்கள் அவ்விடத்தை விட்டு நகர்ந்து தூரத்தில் நின்றுகொண்டு வேடிக்கை பார்ப்பார்கள். இது போன்ற கூட்டங்கள் தோன்றி மறையும் குணம் உடையவை. மக்களை எப்படிக் கூட்டமானது கவர்ச்சி செய்கின்றது? சாதாரணமாகச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழும் மனிதர்கள் சில சமயங்களில் கூட்டங்களில் வேறு விதமாக நடக்கத் தலைப்படுகிறார்கள். சான்றாக, சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்காவில் நடந்த சம்பவத்தை எடுத்துக்கொள்வோம். ஒரு நீகிரோ ஒரு வெள்ளை மாதுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தான். ஒரு சமயம் இக்காதலர் இருவரும் ஒன்றியிருந்ததைச்சில வெள்ளையர்கள் கண்டார்கள். அவர்கள் சீற்றம் மிகுந்தவர்களாய்த் தம் கிராமத்திலிருந்த மற்ற வெள்ளையர்களையும் திரட்டிக்கொண்டு நீகிரோ வாலிபனைத் துரத்திச் சென்று அவனைப் பிடித்துத் தலைகீழாகத் தொங்கவிட்டு அடியில்

நெருப்பையிட்டு உயிரோடு எரித்தார்களாம். இவ்வெள்ளையர் கூட்டத்திலிருந்த ஒவ்வொருவரும் நியாயத்திற்கும் சட்டத்திற்கும் கட்டுப்பட்டு வாழும் மனிதர்களே யாவர். இருந்தபோதிலும் கூட்டத்திலே தம் தவறை மறந்து இக்கொடுமையை இழைத்தார்கள். இதை ஆங்கிலத்தில் லின்ச்சிங் (Lynching) என்று கூறுவார்கள்.

சென்ற உலகப் போருக்குப் பிறகு பெர்லினில் உருளைக் கிழங்கு அதிகம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டது. நூற்றுக் கணக்கான மகளிர் உருளைக் கிழங்குக்காக வரிசை வரிசையாகக் காத்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் யாவரும் நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களே, மிகவும் நியாயமாக நடந்து கொள்பவர்கள். ஒரு குடியானவன் கை வண்டியில் உருளைக் கிழங்குகளை அந்த இடத்திற்குக் கொண்டு வந்தான். அவன் ஒரு விலை கூறினன். அந்த விலை கொடுத்து வாங்கும் நிலைமையில் அம்மகளிர் இல்லை. எனவே, திடீரென்று அம்மகளிர் யாவரும் உருளைக் கிழங்கைக் கொள்ளை அடிக்க ஆரம்பித்தார்கள். கொள்ளை முடிந்தவுடன் யாவரும் அவரவர்கள் வீடு சென்றுவிட்டார்கள். இதே போன்ற சம்பவங்கள் நாமே நமது தற்போதைய வாழ்க்கையில் காணலாம். சான்ருக அலுவலகம் செல்லவேண்டிய சிப்பந்திகள், ஒரு 'பஸ்' காலத்தில் வராதிருந்தால் கூட்டம் கூடி, 'பஸ்' ஓட்டுபவர்களையும், முதலாளிகளையும், தற்போதைய அரசாங்கத்தையும் பலவாறு நொந்து கொள்வார்கள். 'பஸ்' வர மிருந்த கால தாமதமானல், அதற்காக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவதற்கும், உணர்ச்சியோடு கத்துவார்கள். ஆனல், 'பஸ்' வந்தவுடன், அவரவர்கள் எல்லாவற்றையும் மறந்து, தமக்கு இடம் கிடைத்தால் போதும் என்று ஓடி இடத்தைப் பிடித்துக்கொள்வார்கள். கூட்டம் கலைய அவர்கள் ஆவேசமும் குறைகிறது. இதுபோன்றவைகளெல்லாம் தோன்றி மறையும் கூட்டங்களாகும்.

இப்படித் தோன்றி மறையும் கூட்டங்களும் (Transitory Crouds), அரசியல் சமூகத் தொண்டு வியாபாரம் ஆகியவற்றுக்காக ஏற்படும் நிரந்தரமான கழகங்களும் செயற்கைச் சமூகங்க ளாகும். இவைகளுக்கிடையே வேற்றுமைகள் பல இருந்தபோதிலும், அடிப்படை யான காரணங்கள் ஏறக்குறைய ஒன்றே தான்.

❖

காந்திஜியின் சக்தி மின்சாரத்தைப் போன்றது. ஏதாவது ஒரு கம்பியாவது சேதமடைந்து விட்டால், 'கரெண்ட்' பூராவும் போய்விடும். காந்திஜியின் சக்தி நம்முடைய நாணயத்தையும், உண்மையையும் பொறுத்துத்தான் இருக்கிறது.

ராஜாஜி.

விஞ்ஞானத் துணுக்குகள்

தொகுப்பு: வி. ஞானி

ஒரு நாளில்

நம் இதயம் 103,389 தடவை துடிக்கிறது; நம் குருதி 168 மில்லியன் (168000000) மைல்கள் சுற்றுகிறது; 438 கன அடி அளவுள்ள காற்றினை 20,040 தடவைகளில் உறிஞ்சுகிறோம்; ஐந்து பவுண்டு உணவும் நீரும் உட்கொள்கிறோம்; 1·43 பைன்ட் அளவு வியர்வை வெளியாகிறது; 0·000046 அங்குல அளவு நம் நகம் வளர்கிறது; உரோமத்தின் வளர்ச்சி 0·01714 அங்குலம்.

அமெரிக்காவில் நடந்த சோதனை

50,000 நெருப்புக் குச்சிகளை நெருக்கமாக அடுக்கிவைத்த பெட்டிகளில் ஒரு குச்சி தற்செயலாகப் பற்றிக்கொண்டால் என்ன ஆகும்? ஆபத்துத்தான் அல்லவா? இல்லை. டயமண்ட் நெருப்புக் குச்சிக் கம்பெனியாரைச் சேர்ந்தவர்கள் இதுபற்றி ஆராய்ந்தார்கள். 180 குச்சிதான் எரியும். மற்றவை அப்படியே இருக்கும் என்பது அவர்கள் கண்ட முடிவு. 180 குச்சிகள் எரிந்தால் அந்தப் பெட்டியிலுள்ள அவ்வளவு உயிர்க் காற்றும் (பிராணவாயு) செலவாகி விடுகிறது. அந்தக் காற்று இல்லாமல் நெருப்பு எரியாது.

சரியான வழி

நள்ளிரவில் திடீரென்று ஒரு பெண் அபாயத்தில் சிக்கி, உதவி நாடிக் கத்தினால் என்ன ஆகும்? அந்தப் பெண்ணும் புகழ்பெற்ற நடிகையாக இருந்தால் கேட்கவேண்டுமா? சுற்றுவட்டாரத்திலுள்ள எவர் காதில் விழுந்தாலும் உடனே உதவிக்கு வந்துவிடுவார்கள் அல்லவா?

ஆனால், இந்தக் கூக்குரல் கேட்டு, எல்லோரும் ஓடிவந்தால், அவர்களால் நடிகை யாரையும் காணமுடியாது. திருடன்தான் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டிருப்பான்.

திருடர்களைப் பிடிப்பதற்கு இந்த மாதிரியான ஒரு புது வழியை டி செஸாரிஸ் (De Cesaris) என்பவர் கண்டுபிடித்திருக்கிறார்.

கதவைத் திறந்தால் மணிஅடிப்பது அல்லது கிரீச்சென்ற ஒலி கிளப்புவது போன்ற முறைகளைவிட்டு நடிகையர் குரலால் இனிமேல் திருடர்களைப் பிடித்துவிடலாம்.

விளக்கு ஆங்கிலம் பேசுகிறது!

போக்குவரத்து மிகுதியாயுள்ள நகரங்களில் சாலைகளைக் குறுக்கே கடந்து போவதென்பது எளிய காரியமா? உயிருக்கே இறுதி நேரலாம். ஆனால், இங்கிலாந்திலுள்ள ரிச்மாண்ட் என்ற நகரத்தில் ஆங்கிலம் பேசும் விளக்குகள் இந்த ஆபத்தைத் தவிர்க்கின்றன. எப்படி?

சிவப்பு விளக்கு எரியும்போது "நில்; இப்போது சாலையைக் கடக்கமுடியாது" என்ற குரல் (ஆங்கிலத்தில்) உண்டாகிறது. அது அணைந்து பச்சை விளக்கு எரியும்போது, "வலப் பக்கம் பார் — இடப் பக்கம் நோக்கு — இன்னொரு முறை வலப் பக்கம் கவனி" என்ற குரல் எச்சரிக்கிறது. பிறகு ஒரு கண நேரம் கழித்து, "சரி, இப்போது போகலாம்" என்று ஒரு குரல் கட்டளை இடுகிறது.

ஒளியையும் ஒலியையும் ஒரு பக்குவமான நிலையில் இணைய வைத்து இந்த அரிய வித்தையைச் சாதித்திருக்கிறார்கள்.

● வேத வேள்வி வள்ளுவர் காலத்தே தமிழ் நாட்டில் நிலவிற்று? இது பற்றிய ஆராய்ச்சிதான் இக்கட்டுரை. வள்ளுவர் கருத்தைப் பரிமேலழகர் திரித்துக் கூறுகிறர் என்ற உண்மையும் இவ்வாராய்ச்சியால் நிறுவப் படுகிறது.

திருக்குறளும் யாகங்களும் ★

திரு. அ. இராமசாமிக் கவுண்டர், M.A., L.T.

●

வட மொழி வேதங்களில் பல்வகை யாகங்கள் சொல்லப்படுகின்றன. இந்திரன், வருணன், உருத்திரன், அக்னி முதலிய தெய்வங்களை வடவர் வணங்கி வந்தனர். தேவருக்குத் தாம் ஒன்றைக் கொடுத்தால் அத்தேவரும் தமக் கொன்று கொடுப்பார் என்ற நம்பிக் கையுடன் யாகங்கள் அவர்களால் இயற்றப்பட்டு வந்தன. நூற்றுக் கணக்கான உயிர்கள் யாகங்களில் கொல்லப்பட்டன. அவற்றின் இறைச்சியையும், மிகுந்த வெறியினைத் தரும் சோம பானத்தையும் யாகத்தின்கண் படைத்துத் தாமும் அயின்று வந்தனர். "மாணிக்கவாசகர் வரலாறு" என்ற நூலில் திரு. மறைமலை யடிகளார் இதனை நன்கு விளக்கியுள்ளார். "உயிர்களை ஏராளமாகக் கொன்று அவற்றின் இறைச்சியைத் தெய்வங்களுக்குப் படைத்துத் தாமும் அயின்று வந்தமை இருக்கு வேதத்தில் தெளிவாகச் சொல்லப் பட்டுள்ளது. முதல் மண்டிலத்தில 116ஆம் பதிகத்தின் 7வது செய்யுளில் அசுவினி தேவர்க்கு நூறு ஜாடிச் சாராயங் கொடுத்தமையும், 16வது செய்யுளில் விதையடித்த நூறு செம்மறி யாடுகளை வெட்டி அவற்றின் ஊனை உணவாகப் படைத்தமையும் சொல்லப்பட்டுள்ளன. 162, 163 ஆம் பதிகங்களில் வெள்ளாட்டினையும், குதிரையையுங் கொன்று அவற்றின் ஊனைச் சமைத்து இந்திரனுக்குப் படைத்தமை கூறப்பட்டுள்ளது. அதன் 5ஆம் மண்டிலத்தில் 29ஆம் பதிகத்தில் 7வது செய்யுளில் முந்நூறு எருமைகளைக் கொன்று அவற்றின் இறைச்சியை நெருப்பில் வாட்டிப் பதப்படுத்தி அதனை மூன்று தொட்டி சோம சாராயத்துடன் இந்திரனுக்குப் பலியூட்டினமை காணப்படுகிறது. ஒரு கால் நூற்றுத் தொண்ணூற்றைந்து மனிதர்களை வெட்டி யாகஞ் செய்த குறிப்பு சதபத பிராமணத்தில் காணப்படுகின்றது. (13, 6, 2). வட நாட்டில் குடியேறிய ஆரியர்கள் யாகங்களை ஏதுவாக வைத்துக்கொண்டு உயிர்க்கொலை புரிந்து அவற்றின் ஊனைத் தின்று வந்தமை மறுக்கப்படாத உண்மையாகும். இந்தத் தீய ஒழுக்கத்தைத் தடை செய்தற் பொருட்டே வடநாட்டில் புத்த மதமும், சமண மதமும் தோன்றிப் பரவின."

இத்தகைய யாகங்களைக் குறித்துத் திருக்குறள் ஏதேனும் கூறுகிறதா என்ற வினவுக்கு விடை காணுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருவள்ளுவர் பாரதப் போருக்கு முந்தியவர் என்பதைத் "திருவள்ளுவரின் காலம்" என்ற கட்டுரையில் நன்கு விளக்கியுள்ளேன். பாரதப்

போருக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஆரியர்கள் வட இந்தியாவில் குடியேறினதாக வரலாற்று வல்லுநர்கள் கூறுகின்றனர். எனவே, திருக்குறள் எழுதப்பட்ட காலமும் ஆரியர் வடநாட்டில் குடியேறின காலமும் ஏறக்குறைய ஒன்றே யாதலால் ஆரியரது மதக் கோட்பாட்டையும், யாகமுறைகளையும் திருவள்ளுவர் அறிந்திருக்க இயலாது. மேலும், வேதம், யாகம், வருணம் என்ற சொற்கள் திருக்குறளில் யாண்டும் காணப்படாமையாலும் இக்கருத்து வலியுறுகிறது. இதனைச் சில குறட்பாக்களைக் காட்டி விளக்குவாம்.

> அவி சொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத் துண்ணாமை நன்று

என்பது ஒரு குறள். நெய்யைச் சொரிந்து ஆயிரம் யாகங்கள் செய்தலினும் ஒரு விலங்கின் உயிரைப் போக்கி அதன் ஊனை உண்ணாமை நன்று என்பதே பரிமேலழகர் உரை. இந்த உரையை மெய்யென நம்பி "யாகங்களை மறுத்தற்பொருட்டே இக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது" எனப் பலரும் கூறுகின்றனர். ஆனால், இதே உரையை ஆதாரமாகக் கொண்டு ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்.

"நன்றாகிய யாகத்தினும் உயிர் செகுத்துண்ணாமை நன்று எனக் கூறியதனால் திருவள்ளுவர் யாகத்தை உடன்பட்டவரே யன்றி விலக்கியவராகார். யாகம் நன்றென்று உடன்படாராயின் யாகஞ் செய்தலைக் காட்டிலும் கொல்லாமை நல்லது என்று திருவள்ளுவர் கூறமாட்டார். நல்லதொன்றைக் காட்டி அதைக் காட்டிலும் இது நல்லது என்று கூறுதலே முறை. தீய தொன்றைக் காட்டி அதைக் காட்டிலும் இது நல்லது எனக்கூறும் வழக்கம் இல்லை என்பதறிக. யாகம் நல்லது; அதைக் காட்டிலும் கொன்று தின்னாமை நல்லது என்பதே திருவள்ளுவர் கருத்து. யாகம் நல்லது என்றமையால் திருவள்ளுவரும் வேதக் கோட்பாட்டைச் சேர்ந்தவரே."

யாகத்தைத் திருவள்ளுவர் மறுப்பதாக ஒரு சாரார் கூறுகின்றனர். அவரே அதனை ஒப்புக்கொள்வதாக மற்றொரு சாரார் சொல்லுகின்றனர். இருசாரிலும் நியாயம் இருக்கின்றது. இவ் விரண்டு கட்சிக்குள் எதனையும் பொருளற்றதெனத் தள்ளுதல் முடியாது. முரண்பட்ட இரு முடிவுகளுக்கும் பரிமேலழகர் உரையே ஆதாரமாக விருப்பதால் அவ்வுரையானது பொருந்தாத போலியுரை யாகும். இரு பொருட் சிலேடையாகத் திருவள்ளுவர் எழுதினர் என்பதும் நீதி நூற்குப் பொருந்தாது. ஆதலால் இக்குறளை ஆராய்ந்து மெய்யுரை காணுவாம்.

வேட்டல் என்ற சொல்லுக்கு வேள்வி செய்தல் என்பதே பொருள். வேள்வி, வேட்கை, வேளிர், வேளாளர் என்ற சொற்கள் வேள் என்ற வேரினடியாகப் பிறந்தவை. வேள் என்பதற்கு விரும்பு என்பது பொருள். விரும்பிச் செய்யப்படும் விருந்து வேள்வி எனப்பட்டது.

> இனைத்துணைத் தென்ப தொன்றில்லை [விருந்தின்
> துணைத்துணை வேள்விப் பயன்.

> பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் [விருந்தோம்பி
> வேள்வி தலைப்படாதார்.

இவ்விரு குறள்களிலும் வேள்வி என்ற சொல் விருந்தினையே குறிக்கின்றது. எனவே, "அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன், உயிர்செகுத் துண்ணாமை நன்று" என்பதற்கு நெய்யைச் சொரிந்து ஆயிரம் விருந்துகளைச் செய்வதைக் காட்டிலும் ஒருயிரைக் கொன்று தின்னாமை நன்று என்பதே ஆசிரியர் கருத்தாகும். "நெய்யில்லா உண்டி பாழ்" ஆதலின் அவி சொரிந் தென்றார். விருந்தோம்பல் நல்லது; ஒருயிரைக் கொன்று தின்னாமை அதனினும் நல்லது என்பதே திருவள்ளு

வா கருததாகும். இந்த உரையின்படி இக்குறளில் யாகத்தைப் பற்றிய குறிப்பே இல்லை என்பது வெளிப்படை.

செவியுணவிற் கேள்வி உடையார் [அவியுணவின்
ஆன்ருரோ டொப்பர் நிலத்து.

என்பது மற்ருெரு குறள். இதற்குப் பரிமேலழகர் உரை வருமாறு: "செவியுணவாகிய கேள்வியினை யுடையவர் நிலத்தின்கண்ணராயினும் யாகத்தீயிற் கொடுக்கப்படும் அவியாகிய உணவினை யுடைய தேவரோ டொப்பர்". இந்த உரையைப் படித்துவிட்டுத் திருவள்ளுவர் யாகத்தை ஒப்புக்கொண்டார் எனப் பெருமிதங் கொள்வாரும் உளர். ஆனல், இது போலியுரை என்பது குறளை ஊன்றிப் படிப்போர்க்கு விளங்காமற் போகாது. யாகம், தீ, தேவர், என்ற சொற்கள் மூலத்தில் இல்லாதிருந்தும் உரையில் வலிந்தும் நலிந்தும் புகுத்தப்பட்டுள்ளன. அவியுணவு என்பதற்கு அவிக்கப்பட்ட புலன்கள் என்பதே நேரான பொருளாகும். உணவு என்பது ஐண்டுப் புலன்களைக் குறித்தது.

பொறிவாயில் ஐந்தவித்தான் [பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்.

ஐந்தவித்தான் ஆற்றல்-அகல் [விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி.

செவிச் சொல்லும் சேர்ந்த நகையும் [அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து.

இந்தக் குறட் பாக்களில் பெரிய எழுத்துக்களால் அமைந்த சொற்ருெடர்கள் ஐம்புலன் அவித்தலைக் குறிப்பது போலவே அவியுணவு என்பதும் அவிக்கப்பட்ட புலன்களையே குறித்தமை காண்க. ஆதலின்,

செவியுணவிற் கேள்வி உடையார் [அவியுணவின்
ஆன்ருரோ டொப்பர் நிலத்து.

என்ற குறளுக்கு, செவியுணவாகிய கேள்வி ஞானம் உடையோர் அவிக்கப்பட்ட புலன்களையுடைய துறவிகளோடொப்பர் என்பதே நேரான பொருளாயிற்று.

யாகத்தைத் திருவள்ளுவர் ஒப்புக்கொண்டார் எனக் காட்டும் பொருட்டுப் பரிமேலழகர் வரம்பு மீறிக் குறிப்பெழுதும் இடங்கள் இன்னும் இரண்டுள. அவற்றையும் இக்கட்டுரையில் சுருக்கிக் கூறுவாம்.

கொலைவினையராகிய மாக்கள் [புலைவினையர்
புன்மை தெரியா ரகத்து

என்பது கொல்லாமை என்ற அதிகாரத்துள்ள ஒரு குறள். இதற்குப் பரிமேலழகருரை பின்வருமாறு. "கொலைத் தொழிலை யுடையராகிய மாந்தர் அத்தொழிலின் கீழ்மையை அறிவார் நெஞ்சத்துப் புலைத்தொழிலினர் ஆவர். கொலைவினையர் என்றதனுல் யாகத்தின்கண் கொலையன்மை யறிக."

"யாகத்தின்கண் கொலையன்மையறிக" என்ற பரிமேலழகரது குறிப்பு நகைச்சுவை தருகின்றது. இக்குறிப்புக்கு ஆதாரமான சொல்லோ, சொற்களோ, குறளில் இல்லாதிருந்தும் அதைப் பரிமேலழகர் வலிந்தே புகுத்துகின்ருர். விலக்கு விதியை வெளிப்படையாக விதந்து கூறுதலே திருவள்ளுவரது இயல்பு. பொய்யாமை என்பது பொதுவிதி, ஆனல் சில தருணங்களில் பொய்பேசலாம் என்பது

பொய்ம்மையும் வாய்மை யிடத்த [புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்

என்ற குறளில் கூறப்பட்டது. கொல்லாமை என்பது பொதுவிதியே யாயினும், அரசன் கொன்று தண்டிக்கலாம் என்பது

கொலையிற் கொடியாரை வேந்தொறுத் [தல் பைங்கூழ்
களைகட் டதனெடு நேர்

என்ற குறளில் விளக்கப்பட்டது.

மானமே உயிரினும் சிறந்ததெனினும் குடியை உயர்த்தும் முயற்சியில் மானத்தைக் கருதக்கூடாது என்பது

குடிசெய்வார்க் கில்லை பருவம்
[மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

என்ற குறளில் சொல்லப்பட்டது.

யாகத்தில் கொலை செய்யலாம் எனத் திருவள்ளுவர் கருதியிருப்பின் அதனை அவர் வெளிப்படையாகவே கூறியிருப்பார். அங்ஙனம் கூறாமையால் அஃது அவர் கருத்தன்மை அறிக.

யாகக் கருத்தினைப் பரிமேலழகர் வலிந்து புகுத்தி வம்பு செய்யும் மற்றோர் இடமும் உண்டு.

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும்
[சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை

என்பது ஒரு குறள். நலந்தரும் ஆக்கம் பெரியதாயினும் அஃது ஒருயிரைக் கொல்வதால் வருவதாயின் சான்றோர்க்குக் கடையானது என்பதே இதன் பொருள். பெருநலந் தருவதாகிய பட்டமோ, பதவியோ, பொருளோ ஒருயிரைக் கொல்வதால் வருவதாயின் அது சான்றோர்க்குக் கடையானது என்பதே ஆசிரியர் கருத்து.

யாகமோ, யாகப் பலனோ, மறு பிறப்போ இக்குறட்பாவில் சொல்லப்பட்டதோ இல்லை. இவையெல்லாம் வடமொழி நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

நன்றாய் மறைமுன் றினையறிந்து
நஞ்சாம் சோமக் குடியினராய்
வென்றே பாவம் இலராகி
வேள்வி களினால் எனைத் துதித்துப்
பொன்னார் சுவர்க்கம் கேட்போர்கள்
புண்ய தேவேந் திரலோகம்
சென்றவ் வுலகில் அதித்திவ்ய
தேவ போகம் அநுபவிப்பார் (20)

பொன்னார் தேவேந் திரலோகம்
புகுந்தோர் அங்கே சிலகாலம்
நன்றாய்ப் போக நலந்துய்த்து
நவின்ற புண்ய மெலாங்கழிந்த
பின்னால் மனித உலகத்தில்
பிறந்து மூன்று தருமத்தே
நின்று ராகிப் பொருளாசை
நிறைந்தே உழல்வார் பிறப்பிறப்பில்
(21)

[பகவத்கீதை:அத்தியாயம் 9- எனது மொழிபெயர்ப்பு)

இந்தக் கருத்தை யெல்லாம்

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும்
[சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை

என்ற குறளுரையில் பரிமேலழகர் பின்வருமாறு புகுத்திவிட்டார்.

“தேவர் பொருட்டு யாகத்தின்கண் கொன்றால் இன்பமிகும்; செல்வம் பெரிதாம் என்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்ட தாயினும் துறவானமைந்தவர்க்கு ஒருயிரைக் கொல்ல வரும் செல்வம் கடை. இன்பமிகும் செல்வமாவது தாமுந் தேவராய்ச் சொர்க்கத்துச் சென்றெய்தும் செல்வம். அது சிறிதாகலானும் பின்னும் பிறத்தற் கேதுவாகலானும் வீடாகிய இன்பம் வேண்டுவார்க்குக் கடை எனப்பட்டது. சொர்க்கம் எய்துவார்க்கு ஆமாயினும் வீடெய்துவார்க்கு ஆகா தென்றமையின் விதி விலக்குகள் தம்முள் மலையாமை விளக்கியவா றாயிற்று.”

கொல்வதால் வரும் நன்மை பெரிதாயினும் அது சான்றோர்க்குக் கடையானது என்ற வள்ளுவரது கருத்தைப் பரிமேலழகர் இவ்வாறு திரித்துக் கூறுவது பெரிதும் வருந்தத் தக்கதே யாகும். யாகத்தைப் பேணுவோர் பேணுக. ஆனால், திருவள்ளுவர் அதனை ஏற்றுக்கொண்டார் எனப் பிதற்றுதல் இல்லது கூறல் என்னுங் குற்றமே யாகும்.

கடற்கரை

வித்துவான்—திரு. தா. ஏ. ஞானமூர்த்தி, B.O.L.

★

முதலாம் காட்சி

இடம்: பழனியில் ஒரு வீதி.

காலம்: முற்பகல்.

(பிச்சைக்காரனும், பழனிவாசியும்.)

(குருடனான பிச்சைக்காரன், வீதி வழியே பாடிக்கொண்டு பிச்சை ஏற்றுச் செல்கிறான்).

குருடன் பாடுதல்

பல்லவி

ஜக வாழ்வு நிலையில்லை (ஜக)

அனுபல்லவி

நன்மையும் தீமையும்
பிறர்தர வாரா
மன்னுயிர் போவது
முன்வினை வழியே (ஜக)

சரணம்

அன்றே இருந்தார்
இன்று எங்கேயோ
தோன்றுதல் யாவும்
பொன்றுதல் திண்ணம் (ஜக)

அந்தகன் வருமுன்
அறம்பல செய்தே
ஆருயிர் ஓங்கிடப்
பாரினில் உய்வாம் (ஜக)

பிச்சைக்காரன்:

(காசு கொடுக்க வந்த ஒருவனை நோக்கி) சாமி, கூட்டம் கூட்டமாக மக்கள் போவதாகத் தெரிகிறதே. எங்கே போகிறார்கள்? இன்று கோயிலில் ஏதாவது சிறப்புண்டா?

பழனிவாசி:

ஆமாம், உனக்குத் தெரியாதா? இன்று கோயிலில் பாலாபிஷேகம். திருநெல்வேலியில் பெரிய பணக்காரராக விளங்கும் சிவசைலம் பிள்ளை என்பவர் ஆயிரத்தொரு குடம் பால் கொண்டு வந்து நம் பழனியப்பனுக்கு அபிஷேகம் செய்து வைக்கிறார். இன்று கோயிலில் பெரிய திருவிழாதான்.

பிச்சைக்காரன்:

அப்படியா? மிகவும் மகிழ்ச்சி. அந்தத் திருநெல்வேலிப் பிள்ளை எப்பொழுது கோயிலிலிருந்து திரும்பி வருவார்? அவரிடமிருந்து நல்ல காசு கிடைக்குமென்று நினைக்கிறேன்.

பழனிவாசி:

காசு கிடைக்காமலா போகும்? உங்களுக்கெல்லாம் இன்று நல்ல வேட்டைதான். இந்த வீதி வழியாகத்தான் அவர் வருவார். இங்கேயே இரு.

பிச்சைக்காரன்:

இதுவும் பழனியாண்டவர் செயல்தான்.

இரண்டாவது காட்சி.

இடம்: பழனியில் மற்றொரு வீதி

காலம்: முற்பகல்

(சிவசைலம் பிள்ளையும், நண்பரும்)

[சிவசைலம் பிள்ளை, தம் நண்பர்களோடு கோயிலிலிருந்து திரும்பி வீதி வழியே வருகிறார்.]

சிவசைலம் பிள்ளை:

அப்பப்பா, எத்தனை பிச்சைக்காரர்கள் இந்த ஊரிலே! எந்த மூலை முடுக்கிலும் அவர்கள்தாம் நிறைந்திருக்கிறார்கள்!

சிவசைலம் பிள்ளையின் நண்பர் 1:

சுத்த சோம்பேறிகள். நன்றாக உழைத்துச் சம்பாதிப்பதற்கு அஞ்சி எளிதாக இப் பிச்சை எடுக்கும் தொழிலிலே இறங்கி விடுகிறார்கள்.

நண்பர் 2 :

நாம் ஒரு சிறிதும் இவர்களிடத்திலே இரக்கங் கொள்ளக் கூடாது.

சிவசைலம் பிள்ளை :

நீங்கள் சொல்வன யாவும் உண்மையே. நம் அரசாங்கத்தார் ஏதேதோ சீர்திருத்தங்கள் பல செய்கிறார்கள். இப் பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்கு ஏற்றவைகளை அவர்கள் செய்வதாகக் காணோம். அப்பப்பா! இந்தப் பிச்சைக்காரர்கள் தொந்தரவைப் பொறுக்கவே முடியவில்லை. வீதியிலே காலை வைத்தால் போதும். வறட்டுத் தவளைகள் போலக் கத்திக்கொண்டு வந்து நம்மை மொய்த்துக் கொள்கிறார்கள். எப்பொழுதுதான் இந்தச் சனியன்கள் ஊரைவிட்டுத் தொலையுமோ தெரியவில்லை.

நண்பர் 3 :

அரசாங்கத்தார் அனேக பிச்சைக்கார விடுதிகள் கட்டி, அங்கே இந்தப் பிச்சைக்காரர்களை எல்லாம் கொண்டு போய்ச் சேர்க்கப்போகிறார்களாம். சேர்த்து, உடல் உறுதி உள்ளவர்களை வேலை செய்வித்து, உடல் ஈனம் உள்ளவர்களை உணவு கொடுத்து ஆதரிக்கப் போவதாகவும் பேசிக் கொள்கிறார்கள்.

நண்பர் 1 :

இவையெல்லாம் ஆகிற செயலா என்ன? இந்தப் பிச்சைக்காரப் பேய்களை வேரோடே தொலைத்துவிட வேண்டும். ஒவ்வொருவனுக்கும் ஊசி மூலமாக உடலிலே விஷத்தை ஏற்றி விட்டால் ஒருவிதச் சந்தடியுமில்லாமல் பிச்சைக்காரப் பூண்டே அழிந்துவிடும் அல்லவா?

[இதைக் கேட்ட எல்லோரும் கொல்லென்று சிரிக்கின்றனர்.]

மூன்றாவது காட்சி

இடம் : பழனி வீதி.

காலம் : முற்பகல்.

[பிச்சைக்காரன், பழனிவாசி, சிவசைலம் பிள்ளை, நண்பர்.]

பிச்சைக்காரன் பாடுகிறான்.

பல்லவி

என்ன உலக மடா பிடி
அன்னமும் இல்லை யடா

அனுபல்லவி

பட்டினி யால்வாடி
பரிதவிப்பார் பலர்
பட்டணிந்து மோட்டார்
காரில் செல்வர் சிலர்
(என்ன)

சரணம்

உள்ளம் இல்லை அந்தோ — கொள்ளை
கொள்ளை பணம் குவிப்பார்
எள்ளத் தனை ஈந்தால்
என்ன குறையுது
கள்ளத்தனம் இது
சொல்லவும் கூசுது (என்)

பாரி இருந்த நாடாம் — பொருள்
வாரி இறைத்த நாடாம்
சோறில்லாமல் ஆவி
போகும் ஏழை மக்கள்
கோரக் காட்சி இப்போ
நெஞ்சைப் பிளக்குது
(என்ன)

பழனிவாசி : (ஓடிவந்து) ஐயா, இதோ சிவசைலம் பிள்ளை வருகிறார். விரைந்து ஓடும். காசு கிடைக்கும்.

பிச்சைக்காரன் : அப்படியா, வருகிறாரா, இதோ ஓடுகிறேன்.

(விரைந்து வழியைத் தடவிக் கொண்டு வருகையில் சிவசைலம் பிள்ளை மீது இடறி விழுதல். பிள்ளை சீற்றங் கொண்டு உதறித் தள்ளுகிறார்)

சிவசைலம் பிள்ளை :

என்ன அடாத செயல் செய்தான் இப்பாவி! ஆண்டவன் சந்நிதானத்திலிருந்து மிகவும் புனிதத் தன்மையோடு வரும் என்னை, அசுத்தமே உருவாக உள்ள இந்தப் பிச்சைக்காரப் பேய் தீண்டி அசுத்தம் செய்து விட்டானே! என்ன திமிர் இவனுக்கு?

சிவசைலம் பிள்ளையின் ஆள் :

நீங்கள் உத்தரவு கொடுங்கள். இவன் கழுத்தை இப்பொழுதே திருகி விடுகிறேன்.

பிச்சைக்காரன் :

சாமி, நான் குருடன். கண் தெரியாமல் தவறு செய்து விட்டேன். மன்னிக்கும்படியாகக் கெஞ்சுகிறேன்.

சிவசைலம் பிள்ளை :

[கோபத்துடன்] மன்னிப்பா ?

பிச்சைக்காரன் :

சுவாமி, நான் சாப்பிட்டு எத்தனையோ நாள் ஆகின்றன. பட்டினிக் கொடுமை தாங்கமுடியாமல் தங்களிடமிருந்து, காசு பெறலாமென்று மிகவும் ஆசையோடு ஓடி வந்தேன்.

சிவசைலம் பிள்ளை :

காசா ? இந்தப் பிசாசுக்கா காசு கொடுப்பது ? நீ சோறில்லாமல் பட்டினி கிடந்து உயிரை விடுவதுதான் உனக்குத் தக்க தண்டனை. நீ இந்த உலகத்திலிருந்து யாரைக் காப்பாற்றப் போகிறாய் ?

குருடன் :

சாமி........ ....ஈ

சிவசைலம் பிள்ளையின் ஆள் :

சீ, நாயே, பேசாதே.

[சிவசைலம் பிள்ளை நண்பரோடு போகிறார்.]

பிச்சைக்காரன் :— (பாடுகிறான்)

(பண் : நாத நாமக்கிரியை)

ஏன்பிறந்தேன் இம் மேதினியில் ஏழை நானே
ஏற்றெனை ஆதரிப்பார் இங்குக் காணேன்
ஏதமுறும் பல் இன்னல்களால் உள்ளம் வாடி
உயிர் சோருதென் செய்வன் நான் பாவி

(கேதார கௌளம்)

பெற்றதாய் தந்தையில்லை உறவினர் யாருமில்லை
உற்றதாய் தந்தைநீயென் றிந்நாள் இருந்தேன்
செத்துநான் மடிவதோ உன் சித்தமறு முகனே அப்பா
பித்தன் என்றேசினர்க்கும் அருள் சுரந்த ஈசன் மைந்தா

(சண்முகப்பிரியா)

கண்ணுமில்லை யுடலால் உழைத்தேன் உயிர் வாழ
எண்ணி எண்ணி ஏங்குதென் நெஞ்சம்
கண்ணில்லையா கந்தாமுரு காபழனி வேலா
கண்டோர் எனை ஏசுதல் ஏனோ (ஏன்)

பழனிவாசி :

ஐயா, வருந்தாதீர். என் குடிசை அருகில்தான் இருக்கிறது வாரும். ஏதோ என்னிடம் இருக்கும் கூழைக் கொடுக்கிறேன். அதை உண்டு நீர் பசியாறலாம். கடவுளுக்கு ஆயிரத்தொரு குடம் பாலூற்றி அபிஷேகம் செய்கிறவர்கள் ஏழைகளுக்கு ஒரு காலணக் கொடுக்கவும் மறுக்கிறார்கள்.

[பிச்சைக்காரன் பழனிவாசியோடு பாடிக்கொண்டு போதல்]

நான்காவது காட்சி.

இடம் : சென்னைக் கடற்கரை.

காலம் : மாலை.

[மீனா, நீலா, கிருஷ்ணலால், காமாட்சி, இராமையா.]

மீனா :

நீலா, இன்று ஒரு கடிதத்தைப் பக்கம் பக்கமாகப் படித்துக்கொண்டிருந்தாயே, அந்தக் கடிதம் யாரிடமிருந்து வந்தது ?

நீலா :

யாரிடமிருந்து இருக்கும் ? என் தகப்பனர் அனுப்பிய கடிதம்தான்.

மீனா :

என்ன அவ்வளவு பெரிய செய்தி ? நான் அறியக்கூடாதா ?

நீலா :

என் தகப்பனர் என்ன எழுதுவார் என்பது உனக்குத் தெரியாதா ? அவர்தான் மூன்று மாதமாகத் "திருமணம் செய்து கொள்; திருமணம் செய்து கொள்" என்று எழுதிக்கொண்டிருக்கிறாரே.

மீனா :

என்ன நீலா, கரும்பு தின்னக் கூலி வேண்டுமா ? நீ திருமணம் செய்து கொள்வதற்கு என்ன தடை ? உன் தகப்பனர் பார்த்திருக்கும் மணமகன் நன்றாக இல்லையா ?

நீலா :

மாப்பிள்ளைக்கென்ன ? உயர்ந்த தோளும், அகன்ற மார்பும், கம்பீரத்

தோற்றமும், சிங்க ஏறு போன்ற நடையும் உடையவர். மேலும் இங்கிலாந்திலே கல்வி பயின்று மிகப் பெரிய பட்டங்கள் பெற்றவராம்.

மீனு :

ஆகா, நீ சொல்லும்போதே மணமகனின் திரு உருவம் என் கண்முன் நிற்கிறதே! ஏன், அவரை மணவாளனாக ஏற்கத் தாமதிக்கிறாய்? ஒருவேளை அவர் ஏழையென்றா?

நீலா :

அவரா ஏழை? அவருக்கு அளவு கடந்த செல்வமிருக்கிறது. இங்கிலாந்திலேயே பல ஆண்டுகள் இருந்து, கல்விபயின்று, பல உயர்ந்த பட்டங்களைப் பெற்ற அவர் ஏழையாக எப்படி இருக்க முடியும்?

மீனு:

பின் என்ன தடை?

நீலா :

எனக்கென்னமோ திருமணத்தில் சிறிதளவும் விருப்பமில்லை, மீனு. என் தந்தையாரோ அவருடைய ஒரே மகளாகிய எனக்குத் திருமணம் செய்வித்துக் கண்குளிரப் பார்க்கவேண்டும் என்று ஆவலோடு இருக்கிறார். எனக்குத் திருமணத்தில் விருப்பமில்லை என்று அவரிடம் சொன்னால், அவர் மனமே உடைந்துபோகும் என்று அஞ்சி, அவரிடம் உண்மையைச் சொல்லாமல் இருக்கிறேன். அவர் திருமணப்பேச்சை எடுக்கும்போதெல்லாம், நான் பி. ஏ. பட்டம் பெற்ற பிறகுதான் கலியாணம் செய்து கொள்ளுவேன் என்று சொல்லி வருகிறேன்.

மீனு :

என்ன நீலா! உனக்குத் திருமணத்தில் சிறிதுகூட விருப்பமில்லை என்றா கூறுகிறாய்? என் எண்ணமெல்லாம் திருமணத்தில்தான் இருக்கிறது. இந்தப் பாழும் படிப்பிலே என் மனம் செல்வதே இல்லை. புத்தகத்தை எடுத்தால் என் வாய்மட்டும் படித்துக் கொண்டு போகிறதே தவிர, என் மனம் திருமணத்தில்தான் இருக்கிறது. என் அப்பா என்னமோ, நான் எம். ஏ. வரை படித்த பிறகுதான் திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்று கூறுகிறார். என்னுடைய துன்பம் அவருக்குச் சிறிதும் தெரிவதில்லை, நீலா.

நீலா :

எனக்கும் வரவர இந்தக் கல்லூரிப் படிப்பிலே வெறுப்பு ஏற்படுகிறது.

மீனு :

அப்படியானால் நீ படிப்பை விட்டு விடலாமே!. உன் தந்தையார்தான் நீ எப்பொழுது படிப்பை விட்டுவிட்டு வந்து திருமணம் செய்து கொள்வாயோ என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாரே!

நீலா :

எனக்குக் கல்லூரிப் படிப்பிலும் விருப்பமில்லை; கலியாணத்திலும் விருப்பமில்லை.

மீனு :

பின் உன் மனத்தைக் கவர்ந்தது எதுவோ?

நீலா :

மீனு, நமது நாட்டின் நிலையை நினைத்தால் என் மனம் வருந்துகிறது. மக்கள் தமக்குள் பறையன் என்றும், பார்ப்பான் என்றும், பார்ப்பனர் அல்லாதார் என்றும், இந்து வென்றும், முஸ்லீமென்றும் பிறப்பால் ஜாதிவேற்றுமை கருதுகின்றனர். பகைமை மூண்டு, சில சமயங்களில் ஒருவரோடு ஒருவர் போரிட்டும் மடிகின்றனர். என்ன அறியாமை! சாதிவேற்றுமையால் அல்லவோ நமது நாடு இரண்டாகத் துண்டிக்கப்பட்டது. இச்சாதிவேற்றுமையை நம் நாட்டு மக்கள் வளர்த்துக் கொண்டே போனால் நமது நாடே அழிந்துவிடும்போல் தோன்றுகிறதே. கல்லூரிப் படிப்பை விட்டுவிட்டு மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டவேண்டுமென்பது என்னுடைய பேரவா.

மீனு:

ஓகோ, மணிமேகலை போலத் துறவு பூண்டு உலகுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்பது உன் ஆசையா? நீ பெரிய துறவிதான். நான் என்னமோ என் அப்பாவுக்குச் சாக்குப் போக்குச் சொல்லி விரைவில் என் படிப்புக்கு முற்றுப்புள்ளிபோட்டு நல்ல கட்டழகனைப் பார்த்துக்கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன். நான் திருமணம் செய்து கொண்டாலன்றி என் மனம் அமைதி பெறுது.

[கிருஷ்ணலால் கையில் ஒருபணப்பை யோடு ஓடிவருகிறுன்].

கிருஷ்ணலால்:

அம்மா, அம்மா

(தொடரும்)

"பெண்களில் பெரும்பாலோர் பணத்திற்காக தங்கள் கணவர்களை நம்பியிருக்கின்ருர்கள். ஒரு தொழிலாளி முதலாளியை நம்பி வாழ் வதைக் காட்டிலும் இது கொடுமையானது. ஓர் தொழிலாளி தன்னுடைய வேலையை உதறித் தள்ளலாம். ஆனுல் மனைவிக்கு இது கடினம். தன்னுடைய வீட்டைப் பராமரிப்ப தில் எவ்வளவு உழைத்தாலும் தகுந்த கூலியை எதிர்பார்க்க முடியாது. இந்த நிலைமை நிலவும் வரையில் பெண்கள் தங்களுடைய கணவர்களிடம் பொருளாதாரச் சமத்துவத்தை அடைய முடியாது."

— பெர்ட்ரெண்டு சஸ்ஸல்

"எக்ஸ்-கதிர் அசைவுப் படக் கருவி"

— 'யூசிஸ்' —

சாதாரணமாக ஒளி ஊடுருவிப் பாயமுடியாத பொருள்களுக்கு அப்பாலுள்ளவற்றையும் காண்பதற்குத் துணையாக அமைவது எக்ஸ்-கதிர் (X-Ray) என்பது யாவரும் அறிந்தது. இக் கதிரைப் பயன்படுத்தி அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள ஐந்து மருத்துவர்கள் அருமையான ஒரு காரியத்தைச் சாதித்திருக்கிறார்கள்.

எக்ஸ்-கதிர்ப் புகைப்படக் கருவி ஒன்றை அவர்கள் செய்திருக்கிறார்கள். இந்தப் புகைப்படக் கருவியில் மற்றொரு சிறப்பும் இருக்கிறது. திரையில் காட்டக்கூடிய அசைவுப் படமாகவே (Motion picture) பிடிக்க முடியும்.

இந்த எக்ஸ்-கதிர் அசைவுப்படக் கருவியின் உதவியால் உடலுக்குள் அமைந்துள்ள உறுப்புகளின் தொழில்களையெல்லாம் திரைப் படமாகப் பிடித்துவிடலாம். இந்த அற்புதமான கருவியானது மருத்துவத் துறையின் ஆராய்ச்சி, பயிற்சி, சிகிச்சை ஆகியவற்றுக்குப் பெரிதும் பயன்படும் என்பது மகிழ்ச்சி தருவதல்லவா? இக் கருவியினை அண்மையில் சான்பிரான்சிஸ்கோவில் நடந்த கதிரியல் துறைக் கழகத்தின் (Radioligical Society) 34-வது ஆண்டு விழாவில் காட்டினார்கள். சில படங்களும் திரையில் காட்டப்பட்டன. இருதயத் துடிப்பு, மணிக்கட்டு, தோள், முழங்கால் பட்டை, இடுப்பெலும்பு ஆகியவற்றின் அசைவுகளும் படங்களின் வாயிலாகக் காட்டப்பட்டன. இந்தப் பரிசோதனைக்கென்றே தனிப்பட்ட முறையில் ஒரு வகை நீர்ப்பொருள் செய்யப்பட்டது. ஒருவர் அதை உட்கொண்டபோது அது வயிற்றை நோக்கிப் போகுங்கால் தசைநார்கள் எவ்வாறு அசைகின்றன என்பது தெளிவாகத் தெரிந்தது,

ரோச்செஸ்டர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கதிரியல் துறை (Radiology) வல்லுநர்களான ஐந்து மருத்துவர்களே சிறப்புமிக்க இந்த எக்ஸ்-கதிர் அசைவுப்படக் கருவியைக் கண்டுபிடித்தவர்களாவர். அவர்கள் பெயர்கள்:- டாக்டர்களான - ஜார்ஜ் எச்-ராம்சே, ஜேம்ஸ் - எஸ்-வாட்சன் (இளையர்), ஜான் - ஜே. தாம்சன், ஃபிராங் ட்ரீசிங்கர், சிட்னி வீன்பர்க்.

இதற்கு முன்னரும் எக்ஸ்-கதிர் கொண்டு அசைவுப் படமெடுக்க முயற்சி நடந்ததுண்டு. ஆனால், புகைப் படக்கருவிக்கு ஆற்றல் போதாத கண்ணாடி வில்லைகளே (Slow lenses) முன் கிடைத்தன. இது காரணமாகக் கதிரியக்கத்தின்போது சுருளில் படம் பதிய அதிக நேரம் (High exposure) பிடித்ததாலும் திருப்தி தரக்கூடிய படங்கள் எடுக்க முடியவில்லை. இப்போது இக்குறைகள் நீங்கிவிட்டன.

இந்தக் கருவியைப் பயன்படுத்துவதில் ஓர் ஆபத்து இருக்கிறது. எக்ஸ்-கதிரை அளவுக்கு மீறி ஓர் உடலின் மீது செலுத்தினால், வீரியக் குறைவு முதலியன ஏற்பட்டுத் துன்பம் விளையும். புதிதாகக் கண்டுபிடித்துள்ள இந்தப் புகைப்படக் கருவி தொழிற்படும்போது வேண்டிய இடத்தில் மட்டுமே எக்ஸ்-கதிர் செலுத்தப்படும். குறிப்பிட்ட அளவுக்கு மேலும் செலுத்த மாட்டார்கள். உடலின் எந்தப் பாகத்தை ஆராய்கிறார்களோ அந்த இடத்தில் மட்டுமே எக்ஸ்-கதிர் செலுத்தப்படும். மேலும் படம் பிடிக்கிற கணத்தில் மட்டுமே கதிர் நோயாளியின் மேனியில் படும். வேண்டாத சமயத்தில் — அதாவது படம் எடுக்காத வேளைகளில்- எக்ஸ்-கதிரின் இயக்கம் நோயாளியின்மீது ஏற்படுவதில்லை. அத்தகைய முறையால் ஆபத்து நேராமல் பாதுகாக்கிறார்கள்.

படம் பிடிக்கும் விதம்:

நோயாளியை ஒளிர் திரை (Fluorescent screen) க்கு முன்னர் நிறுத்தவேண்டும். இந்தத் திரையில் சில இரசாயனப் பொருள்கள் பூசப்பட்டிருக்கும். எக்ஸ்-கதிர் இதன்மீது படும்போது

திரை நன்றாக ஒளிரும். திரையின் வெளிச்சத்தைக் கொண்டுதான் எக்ஸ்-கதிர் இயங்குவதை உணர்ந்துகொள்ள முடியும். இந்த வகையாகத்தான் எக்ஸ்-கதிரை அறியலாமே தவிர, எக்ஸ்-கதிர் என்ற பொருளை நேராகக் காண முடியாது. கண்ணுக்குத் தெரியாத இந்தக் கதிரை எப்படிப் படம் பிடிக்கமுடியும்? முடியாதல்லவா? அதற்காகத்தான் ஒளிர் திரை ஒன்று வேண்டியிருக்கிறது. அதன் முன்பக்கத்தில் நோயாளியை நிறுத்த வேண்டும்.

ஒளிர் திரைக்குப் பின்புறத்தில் (35 மில்லி மீட்டர்) படப்பிடிப்புக் கருவி ஒன்றைச் சரிசெய்து வைக்கவேண்டும். அதில் பொருத்தப்பட்டுள்ள புகைப்படக் கண்ணாடி மிகமிக ஆற்றல் வாய்ந்ததாக (Fast lens) இருக்கும் (f 85). படம்பிடிக்கும் கருவியும், எக்ஸ்-கதிர் தரும் குழாயும் ஒரே சமயத்தில் இயங்குகின்றன. இந்த ஒன்றிய இயக்கத்தை உண்டாக்குவதற்கு மிகவும் சிக்கலான மின்சாரப் பொறியமைப்பு ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த அமைப்பினைக் கொண்டு, முன்னரே கூறியபடி, படம் பிடிக்கும் அந்தக் கணத்தில் மட்டுமே எக்ஸ்-கதிரின் இயக்கம் நோயாளியின் உடலில் ஏற்படும் வண்ணம் செய்கிறார்கள். ஒரு தடவை ஒளிப் பாய்ச்சல் ஏற்பட்டால் அது 1/120 செகண்டுதான் நீடிக்கும். ஒரு செகண்டில் 60 படங்கள் எடுக்க முடிகிறது. இந்த வகையாக எடுத்து முடித்த அசைவுப் படங்களைத் திரையில் சாதாரண வேகத்தில் ஓட்டும்போது இவை மெல்ல மெல்ல இயங்கும் படங்களாக (Slow motion) நமக்குக் காண்கின்றன.

இந்தக் கருவியானது மருத்துவத் துறையில் எக்ஸ்-கதிர் ஆற்றக்கூடிய பெருந்தொண்டின் கொடுமுடியாக இலங்கத் தக்கது. உடலினுள் ஓயாது இயங்கும் உள்ளுறுப்புக்களில் ஏற்படக்கூடிய கோளாறுகளைத் தெளிவாகக் கண்டு, பிணிகளினின்று விடுதலை பெறுவதற்கு இக்கருவி ஒரு பெரிய அருள்வரம் என்றே கூறலாம்.

"குழந்தைகளோடு தொடர்பு உடையவர்கள் குழந்தைகள்பால் அளவுக்கு மிஞ்சிய அன்பைக் காட்டுவது தவறு என்பதை நன்கு உணர்வார்கள். அன்பே சிறிதும் காட்டாமலிருப்பது அதிலும் பெருந்தவறாகும். எனவே இருபுறங்களிலும் தொல்லை உண்டு. செல்லம் தொடர்ந்து பெறும் மகவு சின்னஞ் சிறிய இன்னல்கள் நேரிட்டாலும் அவைகளைப் பெரியதாகிக் கருதி அழும். வீண் ஆர்ப்பாட்டங்களினால் அன்பைப் பெறுதல் இயலாதென்ற உணர்ச்சியே குழந்தையைப் பண்படுத்தி தன்னடக்கமுடைய மனிதனாக்குகிறது."

— பேர்ட்ரேண்டு ரஸ்ஸல்

உள்ளத்தின் உண்மை

குறிப்பு:— மனிதனின் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனாகும். உள்ளத்தைப் பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப் பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளை எழுப்பி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளை எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப் பெறா. எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும் முழு முகவரியையும் குறித்து ''ஆசிரியர், 'கலைக்கதிர்' பூளைமேடு, கோயமுத்தூர்'' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

●

ஹிப்னடிஸம் என்று கூறுகிறார்களே, அதற்கும் மெஸ்மரிஸம் என்கிறார்களே அதற்கும் என்ன வித்தியாசம்? உள நூலுக்கும், மேற் கூறியவைகளுக்கும் தொடர்பு உண்டா?

ஹிப்னடிசமும் (அறிதுயில்) மெஸ்மரிசமும் ஒன்றேதான். ஹிப்னடிசத்தை முதன் முதல் அதிகமாகக் கையாண்டவர் மெஸ்மர் (Mesmer) என்னும் அறிஞர். அது காரணமாக மக்கள் எல்லாம் ஹிப்னடிசத்தை மெஸ்மரிசம் என்று கூறுவார்கள். உள நூலறிஞர்கள், அதை ஹிப்னடிசம் என்றுதான் கூறுவார்கள்.

உள நூலுக்கும், சிறப்பாக, உள நூலின் பகுதியான உளப் பாகுபாடு நூலுக்கும் (Psycho Analysis) ஹிப்னடிசத்திற்கும், அதிகத் தொடர்பு இருந்துவந்தது. இப்போதும், சில உளப்பாகுபாடு அறிஞர்கள், சில சமயங்களில் கையாண்டு வருகிறார்கள். ஹிப்னடிசத்தை முதன் முதலிலே ஹிஸ்டீரியா (Hysteria) போன்ற நோய்களின் காரணங்களைக் கண்டுபிடிக்க, பிராய்ட் (Freud), பிரயர் (Breur), இவர்களுடைய ஆசிரியரான சார்கோ (Charcot) போன்ற பேரறிஞர்கள், உபயோகித்து வந்தார்கள். அறிதுயிலைக் கொண்டு ஓர் உளநோயை நிவர்த்தி செய்தால் உடலிலுள்ள நாடிகள் தளர்ச்சி அடைகின்றன; இதனால் வேறு ஒரு உளநோய் உண்டாகிறது. இது 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது' என்ற கதையாக இருக்கிறதல்லவா? இதற்காக வேறு முறைகளைக் கையாண்டு, ஹிப்னடிசத்தை விட்டு விட்டார்கள். எனினும், சில சமயங்களில் சில உளநோய்களின் காரணங்களைக் கண்டுபிடிப்பதற்கும், நிவர்த்தி செய்வதற்கும், ஹிப்னடிசம் கையாளப் படுகிறது.

நுண்ணறிவை (Intelligence) அளக்கமுடியும் என்று கூறுகிறார்கள். அதில் உண்மை இருக்கிறதா?

ஆம்; உண்மை இருக்கிறது. பினே (Binet) என்ற பிரெஞ்சு நாட்டுப் பேரறிஞரின் உழைப்பினால் நுண்ணறிவை அளப்பது என்பது மேலை நாடுகளிலே, சிறப்பாகத் தற்போது அமெரிக்காவிலே எல்லாத் துறைகளிலும் உண்டு. சான்றாக ஒரு மாணவன் கல்லூரியில் சேர விரும்புகிறான் என்றால், நம் நாட்டில் போலல்லாமல் அங்கே கீழ் வகுப்

பில் பரீட்சையில் வாங்கின மார்க்குகளைப்பார்ப்பதோடு நின்றுவிடாமல் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு வேண்டிய நுண்ணறிவும் ஆர்வமும்இருக்கின்றனவா என்றும் பார்ப்பார்கள். எப்படி ஒருவன் நிறையையும் உயரத்தையும் அளப்பதற்குக் கருவிகள் இருக்கின்றனவோ அதேபோன்று ஒருவனது நுண்ணறிவை அளப்பதற்கும் வெவ்வேறு விதமான பரிசோதனைகள் (Tests இருக்கின்றன. எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கும் நாகரிகமற்று வாழும் மக்களுக்கும் நுண்ணறிவு இருக்கலாம். அவைகளை அளப்பதற்கும் சோதனைகள் இருக்கின்றன. துரதிருஷ்டவசமாக, நமது நாடு, தற்போது எல்லாத் துறைகளிலும் பிற்போக்கான நிலைமையிலிருப்பது காரணமாக, நுண்ணறிவு அளப்பது போன்ற முறைகளைக் கையாளுவதில்லை. இராணுவத்தில்மாத்திரம்தான் உபயோகிக்கிறார்கள். ஒருவனது நுண்ணறிவை, நுண்ணறிவு கோஷண்ட் (Intelligence quotient) மூலமாக அறிவிப்பார்கள்.

நுண்ணறிவு கோஷண்ட்டைக் கண்டுபிடிக்கும்விதமாவது: முதலிலே, ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட உளச் சோதனைக் கேள்விகளைக் கொண்டு மனவயதைக் (Mental Age or M. A.) கண்டு பிடிக்கவேண்டும். பிறகு அவனது வயதை (Chronological Age or C. A.)க்கொண்டு வகுக்க வேண்டும். வகுத்து வரும் விடையே நுண்ணறிவு கோஷண்ட். 8 வயது குழந்தையின் மனவயது 10 என்றால் அவனுடைய நுண்ணறிவு கோஷண்ட் $\frac{10.0}{8.0} = 1{\cdot}25$) 125 ஆகும். நுண்ணறிவு கோஷண்டைத் தசாம்சம் இல்லாமல் தெரிவிக்கவேண்டும்.

சாமியார்களும் ஹிப்னாடிசமும்

மேல்நாட்டு அகத்திணை வழிநின்று பார்த்தால், சாமியார் செயல்கள் 'ஹிப்னாடிஸம்' என்று விளங்கும். ஆனால் சாமியார் அவைகளை 'ஹிப்னாடிஸம்' என்று உணர்வதில்லை. அவர் யோகாப்பியாசத்தால் பெற்ற சக்தி என்றே நினைக்கிறார்! சாதாரண மக்களும் அவ்வாறே கருதுகிறார்கள். இங்கே சோதனை வேண்டும். இதற்கு விஞ்ஞானக் கலையினதும் அகக் கலையினதும் துணை தேவை. — திரு. வி. க.

சங்ககாலச் சோழர்கள்

திரு. தி. வை. சோக்கப்பா

★

கரிகாற் பெருவளத்தானுக்குப் பின்னர் அரசு கட்டில் ஏறிய சோழ மன்னர்களை இனிப் பார்ப்போம். கிறித்துவுக்குப் பின்னர் ஆண்ட அம்மன்னர்களைக் காலத்தால் வரையறுத்து வகைப்படுத்துவது இக்கால ஆராய்ச்சி நிலையில் எளிதன்று. கரிகாலனுக்குச் சேட் சென்னி நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என்று மூன்று ஆண் மக்களிருந்தனர் என முன்னரே கூறப்பட்டது. நெடுங்கிள்ளி மூத்தவனுயிருக்கலாமெனத் திரு. நீலகண்டசாஸ்திரியார் கருதுகிறார். தந்தைக்குப் பின் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் அரசுரிமைக்காகப் போரிட்டனர்; அதில் நெடுங்கிள்ளி தோல்வியுற்று இறந்தான்; நலங்கிள்ளியே சோழப் பேரரசனுய் விளங்கினன் என்பது வெள்ளிடை மலை.

சேட்சென்னி நலங்கிள்ளி :

பட்டமெய்தியபிறகு தாயத்தாருடன் போர் நிகழ்ந்தது. நலங்கிள்ளி உடன் பிறந்தான் நெடுங்கிள்ளியோடு பல இடங்களில் பொருதான். நெடுங்கிள்ளியே ஆவூர்க் கோட்டையில் முதலில் முற்றினன். பின்னர் அவன் உறையூருக்கு ஓடி ஒளியவே அவ்வூரை முற்றுகையிடும்போது கோவூர் கிழார் என்ற புலவர் இருவருக்கும் சந்து செய்விக்க முயன்றார்[1]. சோழ மரபினர் இருவர் போரிடின், இருவரும் வெல்வது இயல்பன்றாகையால், அவர்களில் ஒருவர் தோற்பதால் ஏற்படும் பழி சோழர் குடியையே சாரும்; ஆதலின் அவர்கள் போரிடலாகாது எனப் புலவர் வாதித்தார். அக்காலப் புலவர்களின் நாட்டுப் பற்றும், அரசர்களென்று அஞ்சாது அவர்கள் நீதியை எடுத்தியம்பும் மாண்பும், அரசர்கள் மாட்டு அவர்கள் காட்டும் அன்பும் நோக்கற்பாலது. நெடுங்கிள்ளி 'காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி' எனக் குறிக்கப்படுவதி லிருந்து தாயத்தார் போரின் முடிவில் காரியாறு என்னுமிடத்தில் நடந்த சண்டையிலே நலங்கிள்ளி நெடுங்கிள்ளியைக் கொன்றனன் என அறியலாம். காரியாற்றுச் சண்டையில் நெடுங்கிள்ளிக்குத் துணையாய் வந்த சேர பாண்டிய மன்னர்களும் நலங்கிள்ளியால் முறியடிக்கப்பட்டனர்[2]. இதிலிருந்து தமிழ் நாட்டில் கரிகாலன் ஏற்படுத்திய சோழப் பேரரசும் தலைமையும் மீண்டும் அவன் மகன் காலத்தில் நிலை நிறுத்தப்பட்டது எனக் கொள்ளவேண்டும்.

1. புறம்-45 2. The Colas – K. A. Nilakanta Sastri

சேட்சென்னி நலங்கிள்ளி தந்தை நிறுவிய பேரரசைக் காத்தலைத் தன் தலையாய கடனாய்க் கொண்டிருந்ததில் வியப்பொன்றுமில்லை. இவனிடம் முத்திறக் காலாட் படைகளும் (தூசிப்படை, இடையணிப்படை, இறுதியணிப் படை) குதிரைப் படையும், கடற் படையும்[3] இருந்தன. இவன் படைகளைக் கண்டு வடநாட்டரசர்களும் அஞ்சியிருந்தனர் என்று கோவூர்கிழார் பாட்டால் அறிகிறோம்[4]. எப்போதும் போர்க்களத்திலேயே இருந்து பகைவருடன் பொருது அவர்கள் அஞ்சும்படி பெருவீரனாய் விளங்கினான். பாண்டி நாட்டின்மீது படையெடுத்து 'ஏழெயிற்கதவ மெறிந்து கைக்கொண்டு'[5] அவற்றின்கண் தன் புலிக்கொடியை நாட்டினான்.

நலங்கிள்ளி கவிதை இயற்றும் திறமையும் புலமையும் வாய்க்கப் பெற்றவன். ஆலத்தூர்கிழார், கோவூர்கிழார், உறையூர் முதுகண்ணன் சாத்தனார் முதலிய புலவர் பெருமக்களை ஆதரித்த வள்ளல். அவர்கள் பாடல்களாலேயே இவன் வரலாறு அறிய முடிகிறது. இப்புலவர்கள் அறிவுரைகேட்டு மன்னன் செங்கோலோச்சினான் என்று நினைக்க இடமிருக்கிறது.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் 'தண்டமிழ்க் கிழவர் முரசு முழங்கு தானை மூவருள்ளு மரசெனப்படுவது நினதே' என்று வெள்ளைக்குடி நாகனார் பாடுவதிலிருந்து இவன் ஆட்சிக் காலத் தொடக்கத்தில் தமிழ்நாட்டு மன்னரில் தலைமை பெற்றிருந்தான் என்பதில் எட்டுணை ஐயமுமில்லை. ஆயினும் இவன் ஆட்சிக் காலத்தில் கரிகாலன் நிறுவிய, சேட்சென்னி நிலைநாட்டிய, பேரரசை வடக்கில் மலையமானும், மேற்கில் சேரமானும், தெற்கில் தென்னவனும் தகர்க்கலாயினர். தம்மாட்சி பெற அவர்கள் செய்த முயற்சியால் வெற்றியும் பெற்றனர்.

கிள்ளிவளவன் சேரநாட்டைப் படையெடுத்துச்சேரர் தலைநகராம் கருவூரைக் கைப்பற்றினான். இந்நகரழிவைக் கண்டு மாறோக்கத்து நப்பசலையார் மனம் பொருது பாடிய புறப்பாட்டொன்றுளது[6]. திருக்கோவலூரை ஆண்ட மலையமான் திருமுடிக் காரியுடன் எக்காரணம் பற்றியோ கிள்ளிவளவன் போரிட்டான். மலையமான் போரில் இறந்தனன். அவன் மக்கள் இருவரை யானையால் இடறச்செய்ய நினைத்த சோழமன்னனைக் கோவூர்கிழார் தடுத்தனர். பிறகு கிள்ளிவளவன் பாண்டியன் தானைத் தலைவன் பழையன் மாறன் என்பவனிடம் மதுரையில் தோற்றுத் தன் களிறுகளையும் புரவிகளையும் இழந்தான் என்று நக்கீரர் பாடிய அகநானூற்றுப் பாட்டால் அறியக் கிடக்கிறது. சேரமன்னனும் கருவூரில் ஏற்பட்ட தோல்விக்குப் பழிதீர்த்துக்கொண்டான். சேரமன்னன் கோக்கோதை மார்பன் கிள்ளிவளவனைக் குளமுற்றத்தில் வென்று கொன்றான். இதனால் தான் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்று குறிப்பிடப் பட்டான். கரிகாலன் கண்ட பேரரசு கிள்ளிவளவன் காலத்தில் அழியலாயிற்று.

---

3. புறம்–382. 4. புறம்–31.

5. இங்கே கூறிய 'ஏழெயில்' பாண்டி நாட்டில் சிவகங்கையைச் சார்ந்த எழுபொன்கோட்டை என்ற ஊராயிருக்கலாம்.

6. புறம்–39.

கிள்ளிவளவன் வீரமும், தமிழ்ப் புலமையும், புலவர் மாட்டுப் பேரன்பு முள்ள பேரரசனாய் விளங்கினான். உறையூரை அரசிருக்கையாகக் கொண்ட இம் மன்னனைப் புலவர் ஒன்பதின்மர் பாடியுள்ளனர். இவன் புலவர் பலரை ஆதரித்தமையும், அவர்களிடம் காட்டிய 'மாரியன்ன வண்மையும்' முத்தமிழ் நித்தம் வளர்த்த நீர்மையும் போற்றற்குரியன.

கோப்பெருஞ் சோழன்

இவனும் உறந்தைதயம்பதியில் இருந்து ஆண்டான். புவிக்கரசன் மட்டுமல்ல, கவிக்கரசன்கூட. பல நற்குண நற்பண்புகள் வாய்க்கப்பெற்ற இப்புரவலனைப் பிசிராந்தையார், புல்லாற்றூர் எயிற்றியனார், கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதனார், கண்ணகனார் போன்ற புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். பொத்தியார் இவன் அவைக்களப் புலவர். கோப்பெருஞ் சோழனின் நல்லியல்புகளைக் கேள்வியுற்ற பிசிர் ஆந்தையார் [7] அம்மன்னனைப் பெரிதும் நேசித்தார். அப்புலவன் பெருமையறிந்து சோழனும் அவர்பால் அன்புடையவனானான். ஒருவரை ஒருவர் காணாத காலத்து எழுந்த அவர்களது உழுவலன்பு தமிழிலக்கியத்தில் நட்பிறகு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. 'தன் கோலியங்காத் தேயத் துறையுஞ் சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை யன்னோனை யிழந்த விவ்வுலக மென்னாவது கொல்'[8] என்று பொத்தியார் பாராட்டும் பெருமையுடைத்து அந்நட்பு!

கோப்பெருஞ் சோழன் தம் மக்களை எதிர்த்துப் போருக்குச் சென்றான். அவர்கள் நாடாள விழைந்து கலாம் விளைத்தனரோ வேறு என்ன காரணமோ தெரியவில்லை. புல்லாற்றூர் எயிற்றியனார் அரசனுக்கு அறிவுரை கூறி அரசனை நல்வழிப்படுத்திப் போரை நிறுத்தி விட்டார். தம் மக்களுடன் போருக்குச் சென்றதால் ஏற்பட்ட பழியை எண்ணி வடக்கிருந்து உயிர் விட்டான். போரில் தோற்றவர்களும், முதுகில் புண்பட்டவர்களும், பலர் பழிக்குஞ் செயலைச் செய்தோரும் ஆற்றிடைக் குறை போன்ற தனி இடத்தில் உணவின்றிக் கடவுள் சிந்தையுடன் வடக்கு நோக்கி இருந்து உயிர்விடும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. இதுவே வடக்கிருத்தல் எனப்படும். கோப்பெருஞ் சோழனுடன் பல புலவர்களும் வடக்கிருந்து உயிர் விட்டனர் எனப் பார்க்கும்போது மன்னன்பால் அவர்கள் எத்தகைய அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர் என ஒருவாறு அறிகிறோம். அக்காலத்தில் புலவர்கள் புலமையோடு நில்லாமல் அரச காரியங்களில் தலையிட்டுப் போரினால் ஏற்படும் துன்பங்களைத் துடைப்பதிலும் முற்பட்டனர் என்று தெரிகிறது. நம் தமிழ் நாட்டில் புலவர்களுக்கு எத்தகைய சீரும் சிறப்பும் இருந்தது!

பெருநற்கிள்ளி

இவன் போர்த்திறமும் வள்ளன்மையும் பல புலவர்களால் பாராட்டப்பட்டுள்ளன. இவன் திருக்கோவலூர் மலையமான் துணைகொண்டு சேர மன்னன் மாந்தரஞ் சேரலிரும்பொறையை முறியடித்தான். பிறகு இராயசூய யாகஞ் செய்து தன் பெருமையையும்

7. பாண்டி நாட்டில் 'பிசிர்' என்னும் ஊரில் வாழ்ந்த 'ஆதன் தந்தையார்'.

8. புறம்–217.

சோணுட்டின் முதன்மையையும் தமிழ் நாட்டில் மீண்டும் நிலை பெறச் செய்தான். இராய சூயம் செய்த சங்க கால மன்னன் இவன் ஒருவனே. இராய சூய யாகத்தின்போது பாண்டி மன்னன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும் சேரமான் மாரி வெண்கோவும் சோணுட்டிற்கு வந்திருந்தனர். இம்மூவரும் ஒன்று சேர்ந்து உறைவதைக் கண்டு உவகை பூத்த ஔவையார் அவர்கள் நட்பைப் பாராட்டினுர்.[9]

பெருநற்கிள்ளி என்னும் பெயருடைய சோழ மன்னர்கள் பலர் இருப்பதால், இவனை 'இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளி' என்று அழைக்கின்றனர். கி. பி. முதல் நூற்றுண்டின் இறுதி அல்லது இரண்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தமிழ் நாட்டில் ஆரிய முறையில் செய்யப்படும் வேள்விகள் புகுந்து விட்டன என்பதற்கு இது போதிய சான்ருகும். பெருநற்கிள்ளி ஔவையார் போன்ற புலவர்களைப் பெரிதும் ஆதரித்தான்.

தித்தன்

உறையூரிலிருந்து ஆண்டவன்; பெருங் கொடையாளி. அகநானூற்றில் காணப்படும் இவன் பாடிய இனிமை மிக்க பாடல் இவன் புலமையைப் புலப்படுத்துகிறது. பரணரும் நக்கீரரும் இவனைப் பாடியுள்ளனர். இவன் நாட்டைப் படையெடுத்த வடுக வேந்தன் 'கட்டி' என்பான் உறையூரை முற்றினபின் யாதோ காரணத்தால் அச்சமுற்றுத் தன்னுடு திரும்பினுன். கற்பிற் சிறந்த 'ஐயை' இவன் புதல்வி; 'போர்வைக்கோப் பெருநற்கிள்ளி' இவன் மகன்.

9. புறம்-367.

வெப்பத்தை அளக்கும் வெட்டுக்கிளி

வெட்டுக்கிளியில் வெப்பமுணரவல்ல ஓர் இனம் இருக்கிறது. உயிர் நூலார் ஈகாந்தஸ் நிவியஸ் (Cecanthus Niveus) என்று அதற்குப் பெயரிட்டிருக்கிருர்கள். சூழ்நிலையின் வெப்பத்துக்கு ஏற்ற அளவில் அது ஒலிக்கிறது. ஒரு நிமிஷத்தில் அது செய்யும் ஒலிகளை எண்ணி, நான்கால் வகுத்து, நாற்பதைக் கூட்டினுல் வருகிற எண் பாரன்ஹீட் பாகையளவில் வெப்பத்தைக் குறிக்கிற தொகையாக இருக்கும். பல முறை சோதித்துப் பார்த்து இந்த முடிவுக்கு வந்திருக்கிருர்கள்; கணக்குத் தவறுவதே இல்லை! ஈகாந்தஸ் மரங்களில் வாழ்கிறது. இதனைச் சிலர் பனிமர வெட்டுக்கிளி என்று கூறுகிருர்கள்.

கடல் நீரிலே மக்னீஷியம் என்ற உலோகப் பொருள் நிறைய இருக்கிறது. நிறை குறைந்தது; வலிமை மிக்கது. இந்தத் திரைகடல் திரவியத்தைப் பெறுவது எப்படி? இப்போது அது பயன்படும் வகை என்ன? ஆக்க வழிகளில் எவ்வாறு பயன்படுத்தலாம்?

பொன் பூக்கும் கடல்

பேராசிரியர் திரு. ஈ. த. இராசேசுவரி அம்மையார், M.A., L.T.

பொன் பூத்த கடல்

இந்தத் தலைப்பு ஒரு வியப்பாகத் தோன்றலாம். இங்கே புராணக் கதை ஒன்று நினைவிற்கு வருகிறது. பெருமாளைக் கும்பிட்டு வருகிறார் துருவாசர்; வழியிலே இந்திரனைக் காண்கிறார். தாம் பெற்ற திருமாலின் மாலையை அன்புடன் கொடுக்கிறார். இந்திரனுக்கோ, செல்வச் செருக்கால் தலைக்கிறுக்கு. மாலையைப் பொருட்படுத்தாமல் தான் ஏறிஇருக்கும் யானைமேல் வீசி எறிகிறான். வயிறு எரிகிறார் துருவாசர். உடனே பொன்னும் பொருளும் கடலிலே புகுகின்றன. இந்திரன் ஏழை ஆகின்றான். கடலிற் புகுந்ததெல்லாம் திரும்பப் பெறுவது எப்படி? கடலைக் கடைகின்றான். பழையபடி பொன்னும் பூக்கின்றது. பொருளும் பூக்கின்றது.

தரை கரைந்த கடல்

இது மிகப் பழங்கதை. இன்று மிகமிகப் புதிய கதை. பொன் முதலிய உலோகங்கள் என்றால் நிலத்தில் பூமிதேவியின் குடலைக் குடைந்து சுரங்கங்களில் இருந்து, அவற்றினைக் கொண்டு வருவதுதான் நினைவிற்கு வருகிறது. தரையில் இருப்பது போலக் கடலிலும் உலோகங்கள் இருப்பது நினைவிற்கு வருவதில்லை. கடல் உலர்ந்தால் தரை. தரை கரைந்தால் கடல். தரையைக் கரையவிட்ட தண்ணீரே கடல் நீர். அப்படியானால் தரையிலுள்ளதெல்லாம் கரைந்து அந்தத் தண்ணீரில் இருக்கும் அல்லவா?

கடல் உப்புக் கறிப்பதேன்

கடல்நீர் ஏன் உப்புக்கறிக்கிறது? தரைமீது பெய்கிற மழையெல்லாம் தரைமேலுள்ள உப்புக்களையும் உலோகங்களையும் கரைத்துக்கொண்டு கடலில்போய் விழுகிறது. தரையின் உப்பே கடலின் உப்பு. முதலில் கடல் நீர் அவ்வளவு உப்பாக இல்லை. நம்முடைய இரத்தம் எவ்வளவு உப்போ அவ்வளவு உப்பாகத்தான் கடல் முன்னே இருந்திருக்க வேண்டும். உயிர் முன்னே நீரில் தோன்றியது. கடல்நீரில் மிதந்தது. மச்சாவதாரத்தை முதல் அவதாரம் என்று சொல்லுவதன் தத்துவார்த்தம் இதுதான். அது தரைமீது வளர வந்தபோதும் அதே உப்புநீரில்தான் மிதக்கிறது. இரத்தம் என்று சொல்லுவதெல்லாம் உப்புநீர்தானே. வாந்திபேதி முதலிய நோய்களில் இரத்தம் குறைந்துபோனால், வடிகட்டிய உப்பு நீரை இரத்தக் குழாயில் ஊசிகுத்தி ஏற்றுவது இதனால்தான். நமது

இரத்தந்தான் அந்தப் பழைய கடல் நீரின் முன்னைய உப்புஅளவை இன்றுங் காட்டிக்கொடுக்கிறது.

மைல் கட்டி

தரையிலுள்ள பலவகை உலோகங்கள் கரைந்து கடலில் பாய்கின்றன. ஒருமைல் நீளம், ஒருமைல் அகலம், ஒருமைல் ஆழம் உள்ள கடல்நீரைக் கட்டியாக்கி எடுத்தால் என்ன காணலாம்? இந்த மைல்கட்டியில் கறிஉப்புக் கிடைக்கும் என்று எல்லோரும் கூறுவர். எவ்வளவு கறிஉப்பு? பதினெரு கோடியே எழுபது லட்சம் (117,000,000)டன் கிடைக்கும். அரையேஅரைக்கால் கோடி(6,000,000)டன் மக்னீஷியம் என்ற அரிய உலோகம் கிடைக்கும். 8000 டன் அலுமினியம் கிடைக்கும். ஏறக்குறைய முக்கால் பாரம் (440 இராத்தல்) பொன் கிடைக்கும். புரோமின், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் முதலிய அடிப்பொருள்களும் கிடைக்கும். உலகிலுள்ள கடலின் ஆழத்தை எல்லாம் முழுதும் சரிவரக் கணக்கிட்டு இத்தனை மைல் கட்டிதான் உண்டு என்று கூறுவதற்கு இல்லை. பசிபிக் பெருங்கடல் 5 மைல் ஆழமும் இருக்குமாம். அம்மம்ம! எவ்வளவு பெரிய சுரங்கம் இந்தப் பெருங்கடல் எல்லாம்! கடல் பொன் பூக்கிற காலம் கிட்டிவிட்டது. பொன் என்றால் பழங்காலத் தமிழில் உலோகங்களுக்கு எல்லாம் பொதுப்பெயர். வெள்ளியோ வெண்பொன். இரும்போ கரும்பொன். தங்கமோ செம்பொன். அந்தப் பழைய பொருளில்தான் பொன் பூக்கும் கடல் எனப் பேசுகிறோம்.

நீரை விளக்கு எரித்தல்

தண்ணீரை விளக்கெரிய வைத்த சித்தினைப்பற்றிப் புராணங்களில் படிக்கிறோம். சென்னையில் ஓர் ஆராய்ச்சியாளர்[1] கடல்நீரில் இருந்து பெட்ரோலியம் போன்ற எண்ணெயை மிக எளிதில் பெறலாம் எனக் கண்டுபிடித்துள்ளாராம். இதன் முழுக்குறிப்பும் நமக்குக் கிடைக்கவில்லை. பெட்ரோலியத்தில் உள்ளது ஹைட்ரஜனும் கரியும். இவற்றைக் கடல் நீரின் உதவி கொண்டு ஆக்கிக் கொள்ளலாம் என்று கூறிவிடலாம். "எந்த முறையில் பெறுவது" என்பதே கேள்வி.

பழைய பழக்கம்

எனவே, தரையிலிருந்து கடல் வாரிக் கொண்டுபோன பொருள்களை எல்லாம் கடல் நீரில் இருந்து நாம் எப்படித் திரும்பவும் பெறுவது? கடலில் செம்பொன் இருப்பது பல நாளாக நமக்குத் தெரியும். குண்டுமணிப் பொன் பெறுவதற்குக் கோபுரம் பொன் செலவு ஆவதாக இருந்தால் என்ன செய்வது? ஆனால், மக்கள் இந்த வழியில் ஒன்றுமே செய்யாமலும் இருக்கவில்லை. கடலிலிருந்து கறி உப்பினைப் பெறுவது பழங்காலத்திலிருந்து மனிதன் கையாண்டு வருகிற முறையேயாம். நம் கடல் ஓரத்தில் எல்லாம் உப்பளங்கள், சூரியன் உதவியால் கடல் நீரை ஆவியாகப் போகவிட்டு உப்புப் பூத்து நிற்கின்றன. ஐரோப்பாவிலுள்ள கருங்கடலானது போக்குவாய் அற்ற ஏரிபோல் கிடப்பதால் பிற கடலில் போல நீரோட்டத்திற்கே அங்கு இடம் இல்லை. அங்கே கரைந்துவிடுகின்ற பொருள்கள் அந்தக் கடலிலேயே சிறு எல்லைக்குள் கிடப்பதால் அந்தக் கடல் மிக மிக உப்பு ஏறி இருக்கிறது. அதிலிருந்து பல பொருள்களையும் பிரித்து எடுக்கப் பெரு முயற்சி செய்து வருகின்றனர். வெற்றியும் கண்டுள்ளனர். கறி உப்பு, புரோமின் முதலியவற்றைப் பிரித்து எடுப்பது எளிதாயிற்று. இவ்வாறு பழகியதன் பயனாகப் பிற பொன்களையும் பிரித்து எடுக்க உலகம் முற்பட்டது.

நெருக்கடி

ஆனல், மனிதன் ஒரு சோம்பேறி. இயற்கை அன்னை அவனைப் பசி என்

1. திரு. பக்தவத்சல ரெட்டியார்.

றும், நோய் என்றும் பிரம்பு கொண்டு அடிக்கும்போதுதான் வேலைசெய்ய முந்துகிறான். நெருக்கடி ஏற்பட்டால் மட்டுமே அவன் கடவுளாக மாறு கிறான். செயற்கரியவற்றைச் செய்து முடிக்கிறான். சென்ற போர் மூண்ட போது ஒரு பெரிய நெருக்கடி எழுந் தது. 'சாவதா 'வாழ்வதா?' என்பதே அப்பொழுது எழுந்த கேள்வி. என்ன செய்தான், பார்ப்போம்.

குண்டுக்கு எதிர் குண்டு

பேதி உப்பு (Magnesium sulphate) என்று மருத்துவர் கொடுப் பதனை முகம் கோணிக் குடித்த நாள் எல்லாம் அறிவோம். கடல் நீரும் அப்படித்தான் கசக்கும். இதில் மக் னீஷியம் என்ற அடிப்பொருள் உண்டு. போரின்போது பெரியவர்கள் எல்லாம் செய்வதுபோலக் கார்த்திகையின் போது நம்முடைய சிறு குழந்தைகள் பணத்தைக் கரியாக்குகின்றனர் அன்றோ! அந்த விளையாட்டில், கம்பி போல் இருக்கும் ஒன்றைக்கொளுத்து கின்றனர். கண்ணைப் பறித்துக் கொண்டுபோவது போல வெளிச்சம் உண்டாகிறது. இதுவே மக்னீஷியம் கம்பி. இந்த மக்னீஷியத்தைப் பற்ற வைத்தே இருட்டில் புகைப்படம் பிடிக் கின்றனர். மக்னீஷியத்தைப் பொடி யாக்கினால் பளிச்சென்று எரியவிடலாம். மேலே சொன்ன விளையாட்டெல்லாம் இந்தப் பொடியை இறுக வைத்து விளை யாடுவதே ஆம். இப்படி எரிவதென் றால் போருக்கு உதவும் அன்றோ? ஊரைப் பற்ற வைக்கும் வெடிகுண்டு களைப் பகைவர்மேலே வீசி எறிவ தன்றோ சிறந்த போர்முறை! சாவை விளைவிக்கும் பல பொருள்களை அடுக் குவது — இடை இடையே பற்றி எரியும் மக்னீஷியப் பொடியை வைப் பது — போட்டதும் பற்றிக்கொள்ள வத்திவைப்பது—இப்படித்தான் இந்தக் குண்டுகளைச் செய்து வீசி எறிந்துவர நம்மவர்களும் கற்றுக்கொண்டனர். இதுவே வென்றவர்கள் கையாண்ட முறை. ஜெர்மானியர் குண்டு வீசினால் அங்கும் அந்த வகையில் சிறந்த குண் டினை எதிராக வீசினால் அல்லவா பிழைக்க முடியும்? வெற்றி பெற முடியும்? மக்னீஷியம் வைத்த குண்டு களை வீசி எறிய வேண்டுமானால் மக்னீ ஷியம் நிறைய வேண்டும் அன்றோ? செலவினையும் பாராது உலகினைக் காக்க அதனை எப்படியாயினும் பெற வேண்டியதாயிற்று.

1940

கடல் நீரில் இருந்து புரோமின் முத லியவற்றை வேறு பிரித்துப் பழகிய ஆராய்ச்சியாளர் இதில் ஈடுபட்டனர். 1940ம் வருஷம் மார்ச்சு மாதம் கடை கால் போட்டனர். 1941ஆம் ஆண்டு முடிவிற்குள் அரைக் கோடி இராத்த லுக்கு மேல் மக்னீஷியம் கடலில் இருந்து பூத்து வந்தது. 1942இல் ஒரு கோடி இராத்தல் பூத்து வந்தது. அளவு மிகுதியாக மிகுதியாகச் செலவு குறைவதுதானே இயல்பு. இராத்தல் 20 ரூபாயில் இருந்து ஒரு ரூபாய்க்குக் குறைந்துவிட்டது. புராணக் கதை யில் மந்தரத்தை மத்தாக நட்டு வாசு கியைக் கடை கயிறாகக்கொண்டு தேவர் களும் அசுரர்களும் கடைந்தார்கள். பொன்னும் பொருளும் யானையும் குதிரையும் திருமகளும் பூத்து எழுந் தனராம். இக்காலைய சிற்பிகள் கடலை எப்படிக் கடைகின்றனர்? பொன் பூக்கப் பண்ணுகின்றனர்?

உப்பில் ஒரு உப்பு?

கடல் நீரில் எத்தனையோ பொருள் உண்டு. உலகத்துப் பொருள்கள், காடிப் பொருள் (acids) என்றும், காரப் பொருள் (alkalies) என்றும் இருவகையாம். இரண்டும் சமநிலையில் இருந்தால் உப்புப் பொருளாம். கடல் நீரில் பலவகை உப்புகள் உண்டு. அதில் மக்னீஷியத்தின் உப்பும் உண்டு. அது மக்னீஷியமும், க்ளோரினும், சேர்ந் தது. இந்த உப்பில் இருந்து மக்னீஷி யத்தைப் பெற வேண்டும்.

மெருகிடும் முறை

பெறுகிற வழியும் உலகம் அறிந்ததே. அதுதான் மின்வழிப் பிரி முறை (Electrolysis). ஒரு கலவைப் (Compound) பொருளில் மின்சாரத்தை ஓடவிட்டால், அக்கலவை இரு வேறு பொருளாகப் பிரியும். வெளி மினுக்கில் நம்பிக்கை வைத்து வாழும் நம் உலகம் பித்தளைக்குப் பொன் பூசுதலில் ஈடுபட்டு இருக்கிறது. செல்வர் மினுக்குக்கு ஏழை மினுக்குத் தோற்கலாமா? முலாம் பூசுதல், மெருகிடுதல், பாட்டரி போடுதல் என்றெல்லாம் இந்த முறையை நம்மவர் வழங்கி வருகின்றனர். பாட்டரி அல்லது மின்கல அடுக்கு இங்கு உண்டு. மின்சாரக் கம்பிகளின் இரண்டு முனைகள் மின்கல அடுக்கில் உள்ள கரைசலில் தொங்கும். ஒன்று நேர்மின்முனை (Positive pole); மற்றொன்று எதிர் மின் முனை (Negative pole). ஒரு முனையில் இருந்து மற்றொரு முனைக்கு மின்சாரம் கரைசல் வழியே பாயும். கரைசலில் கரையவிட்ட பொன்னானது தனிப்பட்டு அணு அணுவாய் எதிர் மின் முனையில் போய்ப் படியும். அந்த முனையில் மெருகு இட வேண்டிய பொருளைக் கட்டிவிட்டால் நன்றாகப் பொன் பூசப்படும்.

மக்னீஷியம் க்ளோரைட் (Magnesium chloride) என்ற உப்பானது கரைந்துள்ள கரைசலே கடல் நீர். அதிலிருந்து மக்னீஷியம் என்ற உலோகத்தை மேலே கூறிய மின்பூச்சு முறைப்படியே பிரிக்கலாம் அல்லவா? இந்தக் கரைசலையும் மின்கல அடுக்கில் வைத்தால், மக்னீஷியம் ஒரு முனையிலும், க்ளோரின் மற்றொரு முனையிலும், பிரிந்துபோய்ப் படியும் அன்றோ? அப்போது எதிர்மின் முனையில் படியும் மக்னீஷியத்தை நோவாமல் எடுத்துக்கொள்ளலாம் அன்றோ? பல பொருள்களோடும் மண்ணில் கலந்துள்ள அலுமினியத்தை இந்த மின் வழிப் பிரிமுறையால் அன்றோ வேறு பிரித்து எடுத்து வருகிறோம்? கரைந்து விடுகிறதே

பிரித்து எடுக்கும் முறை எளிதாகத்தான் இருக்கிறது. ஆனால், ஒரு சிக்கல். மக்னீஷியம் க்ளோரைட் என்ற உப்பைத் தனியாகப் பெற்றால் அன்றோ இவ்வாறு வேறு பிரிக்க முடியும்? இந்த உப்போ எளிதில் தண்ணீரில் கரைந்துவிடும் உப்பாகும். ஆகையால், கடல் நீரில் இது எத்தனையோ பொருள்களோடு சேர்ந்து ஒன்றாய்க் கிடக்கிறது. ஒரு வகைப் பொருளை இரண்டு பொருள்களாக வேறு பிரிக்க மின்வழிப் பிரி முறை பயன்படுமே அன்றிப் பல பொருள்களையும் ஒரே முறையில் வேறு பிரிக்க அது பயன் படாது.

கரைவது – கரையாதது

ஆகையால் தண்ணீரில் கரையாத உப்பாக மக்னீஷியத்தைப் பெற வேண்டும். மக்னீஷிய உப்புகள் பலவகை. அவற்றில் மக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் என்பதும் ஒன்று. இது தண்ணீரில் கரையாதது;வண்டலாய்க் கீழே நின்றுவிடும். ஆதலின், மக்னீஷியம் க்ளோரைட் ஆகக் கடல் நீரில் எளிதில் கரைந்துள்ள உப்பைத் தண்ணீரில் கரையாத மக்னீஷியம் ஹைட்ராக்சைட் என்ற உப்பாக மாற்றவேண்டும்.

உப்பு மாற்றம்

மாற்றும் வழியும் வேதிப் புலவர் அறிந்தே யாகும். கடல் நீரோடு சுவருக்குப் பூசும் சுண்ணும்புக் குழம்பைக் கலந்தால் என்ன ஆகும் எனத் தெரியும். சுண்ணும்புக் குழம்பில், கால்ஷியம் என்ற சுண்ணும்புச் சத்தும், ஹைட்ரஜன், ஆக்சிஜன் என்ற இவை சேர்ந்த ஹைட்ராக்சைட் என்பதும் உண்டு. கடல் நீரும் சுண்ணும்புக் குழம்பும் சேர்ந்ததும், மக்னீஷிய உப்பிலுள்ள மக்னீஷியம், சுண்ணும்புக் குழம்பிலுள்ள ஹைட்ராக்சைடோடு சேர்ந்து, மக்னீஷியம் ஹைட்ராக் சைட் ஆகிறது. சுண்ணும்புக் குழம்பில் உள்ள சுண்ணும்புச் சத்து,

மக்னீஷிய உப்பிலுள்ள க்ளோரின் உடன் சேர்ந்து ஒன்றுகிறது. இப்படி மக்னீஷியம் ஹைட்ராக்சைட் தனியே தண்ணீரில் கரையாது வந்ததும் அதனோடு ஹைட்ரோ க்ளோரிக் ஆசிட் என்ற காடியைச் சேர்த்தால் மக்னீஷியம் க்ளோரைட் என்ற உப்பு தனியே வரும். இதிலிருந்து மின் வழிப் பிரிமுறையால் மக்னீஷியத்தை வேறு பிரிக்கலாம்.

கடலைக் கடைவது எங்கே ?

சிறு அளவில் இவ்வாறு எங்கும் செய்துவிடலாம். ஆனால், பெரிய அளவில் செய்வது எப்படி என்பதே வல்லுநர்களின் மூளையை வாட்டியது. கடல்நீர் வேண்டும். பெரிய இயந்திரமிட்டு வேலை செய்வதற்கு ஏற்றதான துறைமுகத்தில் அது இருக்கவேண்டும். கடல் அங்கே ஆழமாகவும் இருக்கவேண்டும். ஆழத்தில் உள்ள தண்ணீரையே பம்பு (Pump) என்கிற உறிஞ்சு பொறியால் மேலுக்கு இழுத்துப் பயன்படுத்த வேண்டும். மற்றொரு சிக்கலும் உண்டு. பொன்னை எல்லாம் கக்கியபின் வெறுந்தண்ணீரைக் கடலில்தான் திருப்பி விடவேண்டும். அப்படி விட்டால் உறிஞ்சி எடுக்கும்போது அந்த வெறும்தண்ணீர் தானே வரும்? பொன்பூப்பது எங்கே? ஆகையால் பொன்பிழிந்து எடுத்த நீரை, உறிஞ்சி எடுக்கும் இடத்திற்கு அருகே விடுதலாகாது. அந்த வெறுந் தண்ணீர், உறிஞ்சி எடுக்கும் இடத்திற்குப்போகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். கடலில் தண்ணீர் ஓட்டம் உறிஞ்சும் இடத்தி லிருந்து வெறும் தண்ணீர் விழும் இடத்திற்காக ஓடிவருதலாக இருக்கவேண்டுமே அன்றி எதிரிடையாக இருத்தல் ஆகாது. அதாவது உறிஞ்சு பொறிக்காக நீரோட்டம் ஓடாத இடத்திலேயே பொன்பிழிந்த தண்ணீரை விடவேண்டும். அவ்வளவு தண்ணீரையும் கடலில் அன்றி வேறு எங்கே விடுவது?

குழம்பு எங்கே ?

தண்ணீரில் கரையும் மக்னீஷியம் க்ளோரைட் என்ற உப்பினைத் தண்ணீரில் கரையாத மக்னீஷியம் ஹைட்ராக்சைட் என்ற உப்பாக மாற்றவேண்டுமானால் சுண்ணும்பு எது? இது அடுத்து எழும் சிக்கல். நாம் பயன்படுத்தும் சுண்ணும்பு, கிளிஞ்சற் சுண்ணும்பே யாம். கடலில் சில இடங்களில் கிளிஞ்சல் நிறையக் கிடைக்கும். கிடைக்கும் இடம் நாம் விரும்பும் துறைமுகத்திற்கு அருகில் இருக்க வேண்டும். கிளிஞ்சல் அருகில் கிடைத்தால்மட்டும் போதுமா? அதனைச் சுட்டு எரித்தால்தானே சுண்ணும்பு வர இடமுண்டு. சுட்டு எரிக்க எரிகரும்பு அருகில் இருக்குமா? நிலக்கரி உண்டா? இல்லையானுல் இயற்கையாக எரியும் வாயுக்கள் உண்டா?

இந்தனையும் கண்டோம்

அமெரிக்காவில் டெக்சாஸ் (Texas) என்ற இடத்தில் ஃப்ரீ போர்ட் (Free Port) என்ற துறைமுகமே இத்துணைச் சிறப்பும் வாய்ந்ததென நாம் முன் கூறிய நிபுணர்கள் 1940-இல் கண்டார்கள். 30 அடி ஆழத்தில் இருந்து கடல்நீரைப் புறமுக உறிஞ்சு பொறியால் (Centrifugal pump) உறிஞ்சி எடுக்கின்றனர். சிறுகச் சிறுகக் குறைந்து வரும் கண்களுடைய வடிப்பான்களில் (Filters) தண்ணீரை முறையாக விட்டு வடிகட்டுகின்றனர். கசடெல்லாம் இப்படி ஒழிகிறது. 10 அடி கால்வாயில் வடிநீர் பாயும். இதிலிருந்து மறுபடியும் உறிஞ்சி மேல் எடுக்கின்றனர். நிமிஷத்திற்கு 10,000 காலன் இவ்வாறு உறிஞ்சப்பெறும். கிளிஞ்சலை அருகி லிருந்து தோணியில் கொண்டுவருகின்றனர். அதனைக் கழுவக் கடல்நீரே பயன்படுகின்றது. அங்கே கிடைக்கும் இயற்கை வாயு வைக் கொண்டு 300 அடி நீளமுள்ள சுண்ணும்புக் காளவாயில் கிளிஞ்சலைச் சுடுகின்றனர். கிளிஞ்சலோ சுண்ணும்பும், கரியும், ஆக்சிஜன் என்னும் உயிரியமும் சேர்ந்தது. சுட்டதும் சுண்ணும்பும் உயிரியமும் மட்டும்

சேர்ந்த பொருளாக மாறுகிறது. இதில் தண்ணீர்விட்டதும் சுண்ணும்பும், உயிரியமும், ஹைட்ரஜன் என்ற நீரியமும் சேர்ந்த சுண்ணும்பு ஹைட்ராக்ஸைடாகிறது. நீரை விடவிடச் சுண்ணும்புக் குழம்பாகிறது.

கடல் கடைதல்

அடுத்தபடியாக கடலில் வடிகட்டி எடுத்த நீரையும் சுண்ணும்புக் குழம்பையும் கலக்கின்றனர். என்ன நடக்கின்றது? கடலில் உள்ள மக்னீஷியம் களோரைட் என்ற உப்பு மக்னீஷியம் ஹைட்ராக்சைட் என்ற உப்பாக மாறுகிறது. இது தண்ணீரில் கரையாமல் அடியில் நின்றுவிடுகிறது. பிற உப்புகளோ தண்ணீரில் கரைந்துவிடுகின்றன. ஆகையால், தண்ணீரை வடித்து எடுத்துவிட்டால் இந்த வண்டலே எஞ்சி நிற்கும். இதனைப் பாத்தியில் உலர்த்தினுல் வெள்ளைப் பொடியாக மிஞ்சும்.

பொன் பூக்கிறது

மின்வழிப் பிரிமுறைக்குப் பயன்படவேண்டுமானுல் இதனை மறுபடியும் மக்னீஷியம் க்ளோரைட் என்ற உப்பாக்க வேண்டும் என்ருேம். மேலே வந்த வெண் பொடியை மரப்பால் அல்லது ரப்பர் பூசிய எஃகுத் தொட்டியில் ஹைட்ரோ க்ளோரிக் ஆசிட் என்ற காடியோடு ஒன்று சேர்க்கின்றனர். மக்னீஷியம் க்ளோரைட் என்ற உப்பு வருகிறது. இதில் உள்ள உப்புக் கட்டிகளில் தண்ணீரும் சேர்ந்திருக்கும். தண்ணீர் சிறிதும் இல்லாதபடி உலரவைத்தால்தான் இந்த மின்வழிப் பிரிமுறை இங்கே பயன்படும். பிரிந்த பின் மின்கல அடுக்கில் இந்த உப்பை உருக்கியதும் ஒரு முனையில் மக்னீஷியம் என்ற உலோகமும் மற்ற முனையில் க்ளோரின் என்ற பச்சை வாயுவும் திரள்கின்றன. அகப்பையால் மொண்டு மக்னீஷியத்தை கருவில் இட்டுக் குளிர வைத்ததும் மக்னீஷியக் கட்டிகள் கிடைக்கின்றன.

இவ்வளவுதானே!

எல்லாம் செய்து முடித்தபின் திரும்பிப் பார்த்தால் குழந்தை விளையாட்டாகத்தான் தோன்றுகிறது. ஆனுல், இந்த ஆராய்ச்சியாளரின் திறமையே திறமை! நம் நாட்டிலும் கடல்நீர் உண்டு. கிளிஞ்சல் உண்டு. ப்ரீ போர்ட் போன்ற இடம் இங்கே கிடைக்குமா என்று கண்டறிய ஆராய்ச்சியாளர்களே வேண்டும்.

மக்னீஷியப் பொன்

கடலிலிருந்து முதலில் பூத்த பொன் மக்னீஷியம்தான். இந்த அற்புதத்தால் பயன் என்ன? போருக்குப் பயன்படுவது ஒன்றுதானு? இல்லை. நாம் வாழ்வது ஆகாய விமான யுகம். ஆகாய விமானம் காற்றில் பறப்பது. எவ்வளவுக்கு எவ்வளவு இலேசான பொருள் கிடைக்குமோ அவ்வளவுக்கு அவ்வளவு எளிதில் பறக்கலாம். மனிதனுக்கும் பாரம் தூக்குவது அருமை அன்ருே? பொருள்கள் இலேசாகவும் இருக்கவேண்டும். வலிவாகவும் இருக்கவேண்டும். அலுமினியமே, இதுவரையிலும் நாம் அறிந்த உலோகங்களில் மிக இலேசானது. நம் வீடுகளில் எல்லாம் தட்டு முட்டுகள் மிகப் பெரியனவாய் இருந்தாலும் சிறிய குழந்தையும் தூக்கி விடுகிறதன்ருே? ஆனுல், அலுமினியத்தைவிட மக்னீஷியம் மிக மிக இலேசானது. ஓர் அடி அகலம், ஓர் அடி நீளம், ஓர் அடி உயரமுள்ள கட்டி என்ன எடை இருக்கும்? அது :—

காரீயக் கட்டியானுல் 706 இராத்தல் இருக்கும். எஃகுக் கட்டியானுல் 493 இராத்தல் இருக்கும். அலுமினியமானுல் 175 இராத்தல்தான் இருக்கும். மக்னீஷியமானுல் 112 இராத்தலுக்குமேல் இராது. அலுமினியம் மூன்று பங்கு பளுவு என்ருல் மக்னீஷியம் இரண்டு பங்குதான் பளுவு. மக்னீஷியம் துருப்பிடிக்காமல் இருக்கவும், வலிவாக இருக்கவும், பிற உலோ

கங்களோடு கலந்து பயன்படுத்துவர். போர் நின்று நான்கு ஆண்டுகள் ஆகவில்லை. அமைதியான காலத்தில் எந்த எந்த வகையிலோ இது பயன்படவரலாம். அலுமினியத் தட்டு முட்டும் அலுமினிய ஆகாய விமானமும் பார்த்து வியக்கின்ற நாம் மக்னீஷியத் தட்டு முட்டும், மக்னீஷிய ஆகாய விமானமும், வேறு பிறவும் கண்டு வியப்பதோடு அன்றாட வாழ்வில் அதனை அறுபது நாழிகையும் பயன்படுத்தும் காலமும் வரலாம்

காந்தி அடிகள்

ஆழ்ந்த கருத்துக்களைப்பற்றிப் பேசும்போதும் சரி, வேடிக்கையாகப் பேசும்போதும் சரி, காந்தியடிகளின் பேச்சிலிருந்து ஏதேனும் ஒரு புதிய விஷயம் கற்றுக்கொள்ளக்கூடியதா யிருக்கும். ஒரு சமயம் ஒரு பெண் மாலை வேளையில் காற்று வாங்குவதற்காகச் சபர்மதி ஆசிரமத்திற்கு வந்தாள். அவள் அணிந்திருந்த சேலையின் ஒரு பாதியில் மைக்கூடு உடைந்ததன் காரணமாக ‘மை’ நிறையச் சிந்தியிருந்தது. ‘மை’ படிந்த சேலையை மாற்றிக்கொள்ளச் சோம்பல் பட்டுக்கொண்டு அப்படியே வந்திருந்தாள். காந்திஜி அவளைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே “ஓ, கங்கையையும் யமுனையையும் ஒன்றாகக் கொண்டுவந்துவிட்டாயே” என்றாராம். அனைவரும் சிரித்துவிட்டனர். சிறு குழந்தைகள் அதன் பொருள் விளங்காமல் காந்தியடிகளைக் கேட்டார்கள். யமுனையின் தண்ணீர் கங்கையின் தண்ணீரைவிடக் கருமையாகக் காணுவதும், இரண்டும் பிரயாகையில் சங்கமமாகும்போதுங்கூடக் கொஞ்ச தூரத்திற்கு இரண்டின் நீரோட்டங்களும் வேறுவேறாகக் கண்ணுக்குப் புலப்படுவதைப் பற்றியும் அவர் விளக்கிக் கூறினார். இந்தப் பொருள்கொண்ட கேலிப் பேச்சு அவர்களுக்கு அதிக ருசிகரமாக இருந்தது.

— டாக்டர் சுசிலா நாயர்

மக்களினமும் பறவைகளும் பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு ஊர்வனவற்றினின்றும் கிளைத்தவை. ஆனால், இவ்விரு இனங்களிடையேயும் வேற்றுமை மிகுதி. பறவைகளின் செயல்கள் யாவும் இயற்கை இயல்பால் நடைபெறுகின்றன. மக்கள் பகுத்தறிவைக் கொண்டு செயலாற்றுகின்றார்கள். இவ்வுண்மையைப் பல சான்றுகளால் விளக்கிக் கூறுகின்றது இக்கட்டுரை.

பறவையின் இயற்கை இயல்புகள்

திரு. B. R. கிருஷ்ணமூர்த்தி நாயுடு, M. A., L. T.

இப்பரந்த உலகின்கண் பலவகையான உயிர்கள் வாழ்கின்றன. இவற்றுள்ளும் மக்கள் உயிரே சிறந்ததாகக் கருதப்படுகிறது. மக்கட் பிறவியாகிய உயர்நிலையை அடைதற்கு ஏனைய பிறவிகளைப் படிகளாக அறிஞர்கள் முதலில் கருதினர். ஆனால், இக் கருத்து நாளடைவில் கைவிடப்பட்டது. உயிர்களானவை பரிணாம முறையில் வளர்ச்சி அடைகின்றன என்ற உண்மையை அறிஞர்கள் கண்ட பிறகு, உயிர் இடையறாது வளர்ந்துகொண்டே செல்கிறதென்றும், இவ்வுயிராகிய மரத்தின் கிளைகளாகப் பல உயிரினங்களும் விளங்குகின்றன என்றும் ஆய்ந்தறிந்தனர். இம் மரத்தின் உச்சியில் மனிதன் விளங்குகிறான். அவன் இருப்பது உண்மையில் முழு மரத்தின் உச்சியில் அன்று. குறிப்பிட்ட ஒரு கிளையின் உச்சியிலேயே அவன் தோன்றுகிறான். ஒன்றுக் கொன்று வேற்றுமையுள்ள வேறு பல கிளைகளை இம் மரம் கொண்டுள்ளன. இவை யாவும் மனித இனமாகிய கிளையினின்றும் வேறுபட்டவை. இக் கிளைகளை நாம் ஆராய்ந்தால் நம்முடைய இயல்புகள் குறைபாடுடையவை என்பதும், அவைகள் நம்மினும் வேறுபட்ட பல தன்மைகளைக் கொண்டுள்ளன என்பதும் புலனாம்.

எல்லா உயிரினங்களுள்ளும் சிறப்பாகப் பறவையினமும் விலங்கினமும் ஆராய்தற்குரியன. பறவைகள் சுமார் பத்துக்கோடி ஆண்டுகட்கு முன்பு ஊர்வன (Reptiles) வற்றினின்றும் கிளைத்த உயிர்களாகும். இப் பறவைகள் தோன்றுதற்குப் பல காலத்திற்கு முன்னரே நம்முடைய இனமாகிய பாலூட்டிகள் (Mammals) மற்றொரு வகையான ஊர்வனவற்றினின்றும் தோன்றின. பறவைகளுக்குத் தாம் பறப்பதற்கேற்றவாறு உடல் அமையலாயிற்று. அவைகளின் முன்னங்கால்கள் இரண்டும் சிறகுகளாக மாறலாயின. மேலும், அவைகள் கைகளாக மாறுதற்கேற்ற தன்மையைப் பறவைகள் பெறுதற்கில்லாமற் போயிற்று. தம் மூதாதையரான ஊர்வனவற்றிற்குரிய முக்கியமான ஒரு பண்பினைப் பறவைகள் இன்னும் பெற்றிருக்கின்றன. அதாவது முட்டையிடுதல். ஆனால், பாலூட்

டிகள் இவ் வகையில் முன்னேறியிருக் கின்றன. அவைகள் தம் குழவிகளைத் தம் உடலுக்குள்ளேயே வளர்த்து, அவைகள் முழு வளர்ச்சி அடைந்த பிறகு அவற்றை ஈன்றெடுக்கும் ஆற்றல் படைத்திருக்கின்றன. உடலில் நிலையான வெப்பத்தைப் பறவைகளும் பாலூட்டிகளும் பெற்றிருக்கும் காரணத்தால் இவை ஏனைய உயிரினங்களினும் சிறந்து விளங்குகின்றன. உலகின் வெப்ப தட்ப நிலைக்கேற்ப மற்ற உயிரினங்களின் உடலில் வெப்பமும் தட்பமும் பொருந்தியிருக்கும். உடலின் வெப்பநிலை மிகும்போது அவை தம் செயலில் சுறுசுறுப்பாகவும் குளிர்ச்சிநிலை அடையும்போது செயலாற்றல் அதற்கேற்பக் குறைந்தும் இருக்கும். ஆனால், பாலூட்டிகளும் பறவைகளும் உடலில் எப்போதும் தத்தமக்குரிய வெப்பநிலையை நிலையாகப் பெற்றிருப்பதால் எக்காலத்திலும் அவற்றின் செயலில் சோர்வு ஏற்படுவதில்லை.

ஆனால், உயர்நிலை அடைந்திருக்கும் மனித இனம் போன்ற பாலூட்டிகளும் பெறாததொரு தன்மையைப் பறவை பெற்றிருக்கிறது. நிலையான வெப்ப நிலையை எப்போதும் உடையவையேனும், பறவை விண்ணில் மிக உயரத்தில் பறந்து சென்றாலும் அதன் உடலின் வெப்பநிலை குறைவதில்லை.

பறவை உடலின் வெப்ப நிலை நம் முடலின் வெப்ப நிலையை விட மிகுதியாகும். அவற்றின் உடலின் வெப்பம் 105 டிகிரிக்கு மேல் அமைந்திருக்கும். ஆனால், நம்முடல் அத்துணை வெப்பத்தைப் பொறுக்காது. பறவைகள் எப்பொழுதும் சுறு சுறுப்பாக இருப்பதற்கு அவற்றின் உடலின் வெப்ப மிகுதியே காரணமாகும். இவைகள் சுறு சுறுப்பாக இருப்பதனாலேயே இவை மிகவும் அறிவுள்ளவை என்று கொள்வதற் கில்லை. பறவைகளின் உடல்வளர்ச்சி பாலூட்டிகளின் உடல் வளர்ச்சியினும் வேறுபட்டதல்லவா? அது போலவே அவற்றின் உள வளர்ச்சியும் பாலூட்டிகளின் உள வளர்ச்சியினும் வேறுபட்டதாகும். பாலூட்டிகள் தம் அனுபவத்தினின்றும் பலவற்றை அறியும் ஆற்றலைப் பெற்று, அவ்வகையில் நாளடைவில் தம் அறிவை வளர்த்திருக்கின்றன. பாலூட்டிகளுள் ஒன்றான மனித இனமும் இம்முறையில் தன் அறிவை வளர்த்து முடிவில் அது பகுத்தறியும் ஆற்றலையும் தன்னுடைய முன் தலைமுறைகளின் அனுபவத் தன்மைகளையும் பெற்றிருக்கின்றது. இவை மனித இனத்திற்கே உரிய பண்புகளாக விளங்குகின்றன. மனித இனத்தின் பகுத்தறிவு வளர வளர, அதன் இயற்கையாக அறியும் இயல்பு (instinct) குறைந்துவிட்டது. ஆனால், பறவைகள் இயற்கை இயல்பையே தம் முக்கியமான பண்பாகக் கொண்டு விளங்குகின்றன.

பறவைகள் தமக்குரிய செயல்கள் அனைத்தையும் தாம் கற்றுணராமலே செய்துவிடுகின்றன. சில சிக்கலான செயல்களையும் அவை கல்லாமலே செய்து முடிக்கும் ஆற்றலுடையனவாக விளங்குகின்றன. இது பறவைக்குரிய தனித் தன்மையாகும். பறவைக் குஞ்சு முதலில் பறப்பதற்குத் தானே முயலுகிறது. தாய்ப் பறவையோ, பிற பறவைகளோ அதற்கு முதலில் கற்றுக் கொடுப்பதில்லை. பெரும்பாலும் பறவைக் குஞ்சுகள் தம் பெற்றோர்கள் அருகில் இல்லாத நேரத்திலேயே முதலில் பறக்கத் தொடங்குகின்றன. அவை பலமுறை தாமே பயின்று, பிறகு நன்றாகப் பறக்கும் ஆற்றலைப் பெறுகின்றன. தாய்ப்பறவை தம் குஞ்சுகளுக்குப் பறக்கக் கற்றுக்கொடுத்ததாக வழங்கும் பழங்கதைகள் யாவும் பொய்யாகும்,

இதைவிடச் சிறந்தது பிற பறவைகளிட மிருந்து கற்றுக்கொள்ளாமலே தன் கூட்டினைக் கட்டும் ஆற்றல் பெற்றிருப் பதாகும். பறவைகள் குஞ்சுகளாகக் கூட்டினுள் வளரும்போதே

கூட்டின் அமைப்பினைக் கூர்ந்து கவனித்துக்கொள்ளுகின்றன என்றும், பிறகு அவைகள் கண்ட அமைப்புப் படித் தம் காதற் பருவத்தில் கூட்டினைக் கட்டிவிடுகின்றன என்றும் சிலர் கருதுகிறார்கள். இதை உண்மையாகக் கொள்வதற்கில்லை என்று ஜூலியன் ஹக்ஸ்லி கூறுகிறார். குஞ்சுகள் கூட்டினுள் ஒரு சில நாட்களே வளர்கின்றன. குஞ்சுப் பருவத்தில் கூட்டினைக் கூர்ந்து கவனிக்கும் சக்தி அவைகளுக்குக் கிடையாது. மேலும், தம் பெற்றோர்களிடமிருந்து கூடு கட்டுதற்குரிய எவ்விதப் பயிற்சியும் அவை பெறுவதில்லை. எனவே, பறவைகள் தம் இயற்கை இயல்பினாலேயே கூடு கட்ட வல்லமை பெறுகின்றன என்று ஹக்ஸ்லி முடிவு கொள்ளுகின்றார்.

உதாரணமாக, ஆஸ்திரேலியாவிலுள்ள ஒருவகைக் கானங்கோழிகள் (brush-turkeys) உலர்ந்து அழுகிய இலைகளையும் குப்பைகளையும் கொண்டு பெரிய குவியல்களைக் கட்டி, அந்தக் குவியல்களின் நீண்ட துவாரங்களில் முட்டையிடுகின்றன. முட்டையினின்று குஞ்சு வெளிவந்தவுடன் குஞ்சு துவாரத்தை விட்டு வெளியேறுகிறது. அது தன் தாய்ப்பறவையிடமிருந்தோ, தந்தையிடமிருந்தோ கூட்டைப் பற்றி ஒன்றும் கற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால், குஞ்சு முட்டையினின்றும் வெளிவந்த வுடனே பெற்றோர்களாகிய பறவைகள் தம் காரியத்தை முன்னிட்டு வெளிச் சென்றுவிடுகின்றன. குஞ்சு குவியல் கூட்டினிடத்து நெடுங்காலம் தங்குவதும் இல்லை. தங்கியிருக்கும் காலத்திலும் குவியல் கூட்டினைக் கூர்ந்து நோக்கி அதன் அமைப்பை ஆராய்வதில்லை. ஆனால், அது காதற் பருவம் அடைந்தவுடன் தன் பெற்றோர்களும் முன்னோர்களும் கட்டிய குவியல்களைப் போலவே தானும் கட்டுகிறது.

தவிர, மக்களால் செயற்கை முறையில் கூடு அமைத்து வளர்க்கப்பெறும் பறவைப் பார்ப்புகளும் பருவம் அடைந்ததும் தம் இனத்துப் பறவைகள் கட்டும் கூட்டைப் போலவே தாமும் கட்டுகின்றன.

பறவைகளுக்கு அடைகாக்கும் வேட்கை இயற்கையாகத் தோன்றுவதாகும். இவ் வேட்கை உண்டானால் அதை அடக்க அவைகளால் முடியாது. எனவே, உடனே அவை முட்டைகளின் மேல் உட்காரும். முட்டையில்லையானால் முட்டைவடிவமுள்ள வேறு எந்தப் பொருளின் மீதாவது உட்கார்ந்து தம் வேட்கையைத் தணிவித்துக்கொள்ளும். காகங்கள் தம் முட்டைகளுக்குப் பதிலாக கால்ஃப் பந்துகள் (Golf-ball) மீது அமர்ந்து அவற்றை அடைகாப்பதுண்டு. இங்ஙனமே கடற்பறவைகள் (Gulls) புகையிலைத் தகர மூடிகள்மீது உட்கார்ந்து அடைகாக்கும். தென் துருவ நாடுகளில் உள்ள நீர்க்கோழி (Penguin) தன் முட்டையை இழக்குமானால் பனிக்கட்டிகளை முட்டைகளாகக் கொண்டு அவற்றின்மீது அடைகாக்கும். இதனால் அவைகளுக்குப் பகுத்தறியும் ஆற்றல் குறைவு என்பதை உணரலாம்.

பறவைகள் தம் குஞ்சுகளோடு கொள்ளும் தொடர்பு மக்கள் தம் குழந்தைகளிடம் கொள்ளும் தொடர்புக்கு மாறாக இருக்கின்றது. பறவைகள் தம் முட்டைகளிடத்தும் குஞ்சுகளிடத்தும் மக்களைப் போலவே மிக்க கவனம் செலுத்துகின்றன. ஆனால், இப்பண்பு பறவைகளிடத்து இயற்கையாக அமைந்து கிடப்பதாகும். மக்களோ, தம் இயற்கை இயல்போடு பகுத்தறிவு, முன் நிகழ்ச்சிகளின் நினைவு, அன்பு முதலியவைகளையொட்டித் தம் குழந்தைகள்பால் கவனம் செலுத்துகிறார்கள். ஒரு பறவையின் குஞ்சுகளில் இரண்டை நாம் கவர்ந்து கொண்டுவிட்டால் உடனே தாய்ப்பறவை அலமருகின்றது. ஆனால் குஞ்சுகள் கூட்டில் வளரும்போது, அவற்றுள் ஒன்றிரண்டு இறந்து விட்

டால் அதற்காக அவற்றை ஈன்ற பறவைகள் ஒரு சிறிதும் வருந்துவதில்லை. இறந்த குஞ்சுகளை எடுத்து ஒருவித மனக்கவலையுமின்றிச் சிறு குச்சியை எறிவதுபோலக் கூட்டிற்கு வெளியே எறிந்துவிடுகின்றன. தன் குஞ்சு நோய்வாய்ப்பட்டு மெலியுமாயின் தாய்ப் பறவை அதன் நோயைத் தீர்ப்பதற்கு ஒருவித முயற்சியும் எடுத்துக் கொள்வதில்லை. தன் குஞ்சுகள் சுறுசுறுப்பாக இருந்தாலன்றித் தாய்ப் பறவைக்கு அவைகள் மீது அன்பு பிறக்காது போலும்! குஞ்சுகள் வாய்களைத் திறந்து கத்தும்போது தாய்ப் பறவைக்கு அன்பு பிறக்கிறது. உணவு ஊட்டுகிறது; அன்பு பிறப்பதற்கு இது தூண்டுகோலாகிறது. இஃது இல்லாவிடில் தாய்ப்பறவைக்குத் தன் குஞ்சுகள்பால் அன்பு பிறப்பதில்லை.

கயர்டன் (Kearton) என்ற அறிஞர் ஒரு கூட்டினின்றும் சில குஞ்சுகளை எடுத்துக்கொண்டு அவற்றுக்குப் பதிலாகச் சில முட்டைகளை வைத்தார். முட்டை கண்டு திடுக்கிட்டதேனும், பிறகு அதற்காக ஒரு சிறிதும் கவலை கொள்ளாமல் முட்டைகள் மீது அமர்ந்து அடை காத்தது.

மக்கள் உளப் பண்பிற்கும் பறவைகள் உளப் பண்பிற்கும் உள்ள வேறுபாட்டினை மற்றொரு சான்றால் நன்கு உணரலாம். ஒரு குயிலின் முட்டையானது மற்றொரு வகைப் பறவையின் கூட்டினுள் வைக்கப்பட்டது. அக்கூட்டினுள் இருந்த பறவை அம்முட்டையைப் பிற முட்டைகளோடு அடைகாத்து வந்தது. அம் முட்டையிலிருந்து குஞ்சு வெளிவந்ததும் அந்தக் குஞ்சு கூட்டின்கண் இருந்த பிற குஞ்சுகளையும் முட்டைகளையும் வெளியே தள்ளிவிட்டது. தட்டையாகவும் சிறிது பள்ளமாகவும் உள்ள தன் முதுகின் மேல் கூட்டிலிருந்த முட்டைகளையும் குஞ்சுகளையும் ஒவ்வொன்றாக இட்டுப் பின்புறமாகவே நகர்ந்து கூட்டிற்கு வெளியே வந்து எறிந்துவிட்டது. என்ன கொடுமையான செயல்! ஆனால், அக் குஞ்சினிடத்து நாம் தவறு காண்பதற்கில்லை. அது இச்செயலைப் பகுத்தறிந்து செய்வதில்லை. இது அதன் இயற்கையான இயல்பேயாம். இத்தகைய செயல் புரிதற்கேற்ப அதன் உடல் அமைந்திருக்கிறது. சிறிது பள்ளமாகவும் தட்டையாகவும் உள்ள அதன் முதுகு எரிச்சல் தன்மையுடையது. மேலும், மிகுதியான உணர்ச்சித் தன்மையும் கொண்டது. அதன்மேல் ஏதாவதொரு பொருள் படுமானால் அக் குஞ்சு அதைப் பொறுக்கலாற்றாது முன்னும் பின்னும் நடந்து முடிவில் முதுகின்மீ துள்ள பொருளை வெளியே உதறித் தள்ளிவிடுகிறது. எத்தகைய கொடுஞ் செயலை அது செய்கிறது என்பது அதற்குத் தெரியாது. ஏனெனில், முட்டையினின்றும் வெளிவந்து தன் கண்கள் திறப்பதற்கு முன்னம் அது இச்செயலைச் செய்கிறது. அது முட்டையினின்று குஞ்சாக வெளிவருகிறபோது தாய்ப்பறவை அருகில் இல்லாமையால் அதனிடமிருந்து குஞ்சு இச் செயலை கற்றுக்கொள்கிறது என்றும் கொள்வதற்கில்லை. வளர்ப்புப் பறவை இச் செயலை அதற்குக் கற்றுக் கொடுக்காதென்பது திண்ணம். பரம்பரைத்தன்மையால் ஏற்பட்டுள்ள அதன் உடலமைப்பே காரணமாகும். நம்முடைய தும்மலும், இருமலும் எப்படி இயற்கையாக உண்டாகின்றனவோ அதுபோலவே மேற் குறிப்பிட்ட குஞ்சின் செயலும் இயற்கையாகும். வெளியே சென்ற வளர்ப்புப் பறவை கூட்டிற்குத் திரும்பியதும் அங்கே தான் பொரித்த குஞ்சுகளுள் ஒன்றைத் தவிர மற்றக் குஞ்சுகளும் முட்டைகளும் இல்லாமையைக் குறித்து ஒரு சிறிதும் வருந்துவதில்லை. அது உடனே அக்குஞ்சுக்கு உணவு ஊட்டத் தொடங்கிவிடுகிறது. வெளியே தள்ளப்பட்ட தன்னுடைய சொந்தக் குஞ்சுகளில் சில கூட்டிற்கு வெளியே தொங்கிக்கொண்டு கிடந்

தாலும் அவற்றினைத் தாய்ப்பறவை கவனிப்பதில்லை. தன் அன்பைப் பெறுதற்குக் கூட்டிற்குள் குஞ்சு இருக்கும் வரை, வெளியில் இருப்பவை தன் சொந்தக் குஞ்சுகளாயிருந்தாலும் அவற்றை வெளிப்பொருள்களாகவே தாய்ப் பறவை கருதிப் பொருட்படுத்துவதில்லை.

குயில்குஞ்சு நாளடைவில் வளர்ந்து முடிவில் தன்னை வளர்த்தெடுத்த பறவைகளைவிட வடிவில் பெரியதாகிவிடுகிறது. தன் குஞ்சின் பெரிய வடிவத்தைக் கண்டு வளர்ப்புப் பறவைகள் மனங்கலங்குவதில்லை. தம்முடைய கூட்டில் தோன்றிய குஞ்சுகள் எவையாயினும் அவைகளுக்கு உணவு ஊட்டும் செயலைக் கூட்டின் பறவைகள் இயற்கையாகவே செய்கின்றன.

இறுதியாகக் குயில்குஞ்சு பறக்கும் ஆற்றல் பெற்றவுடன் தன் வளர்ப்புப் பறவைகளை விடுத்து வேறிடத்திற்குக் குடியேறிவிடுகிறது. இங்ஙனம் குடியேறுவது குயில்களின் இயற்கையான இயல்பு. மேற்சொன்ன குயில்குஞ்சு வேறொரு வகையான பறவையின் கூட்டில் வளர்ந்தும் அப்பறவையின் பண்புகளை ஒரு சிறிதும் பெறவில்லை; தன்னினப் பறவைகளுக் குரிய இயல்புகளையே பெறுகிறது. வேறு இடத்திற்குக் குடியேறும் வேட்கை இவ்வியல்புகளுள் ஒன்றாகும். இது குயில் முதலிய பறவைகளிடத்தில் இயல்பாக எழுவதேயன்றி அவற்றின் பகுத்தறிவினால் உண்டாவதன்று என்பதை உரோவன் என்ற பேராசிரியர் (Professor Rowan) பல சோதனைகள் வாயிலாக நிலைநாட்டியிருக்கிறார்.

இனி, ஒரு பறவை தன் பார்ப்புக்குப் பிறவற்றால் இடையூறு நேருவதைக் காணுமாயின் அது உடனே ஓர் உபாயம் செய்து விரோதியை வெளியேற்றுகிறது. இயற்கை நூலாசிரியர்கள் சிலர் பறவையினுடைய அறிவுக் கூர்மைக்கு இதனை உதாரணமாக எடுத்து ஓதுகின்றார். ஆனால், பறவை தன் மதியினால் இவ்வுபாயத்தை இயற்றுகின்றது என்று கொள்ளுதற்குத் தக்க சான்றுகள் இல்லை என்பர் ஜூலியன் ஹக்ஸ்லி. அறிவுக் கூர்மையால் பறவை இவ்வுபாயத்தைச் செய்கிறதென்று கொள்வோமாயின் மதியில் வல்ல ஒரு சில பறவைகளே இதனை இயற்றவல்லதாகும். மேலும், ஒரு பறவை செய்யும் முறைக்கும் மற்றொன்று செய்யும் முறைக்கும் வேறுபாடு இருக்கும். அங்ஙனமின்றி இவ்வுபாயத்தை எல்லாப் பறவைகளும் முறை தவறாமல் ஒரு தன்மையாகவே செய்கின்றன. இதனால், பறவை இவ்வுபாயத்தை மதியினால் செய்வதில்லை என்பதும் அதன் இயற்கை இயல்பினாலேயே செய்கிறதென்பதும் தெளிவாகின்றன என்று ஹக்ஸ்லி அறிவுறுத்துகிறார். பறவை, தன் உடலமைப் பின் பயனாக இவ்வியற்கையான இயல்பைப் பெறுவதாகிறது.

பறவைகளின் இயற்கையான இயல்பினாலேயே (instinct) அவற்றின் செயல்கள் யாவும் பெரும்பாலும் நிகழ்வதன்றிப் பகுத்தறிவினால் அன்று என்பதற்கு இன்னும் பல சான்றுகளை ஹக்ஸ்லி எடுத்து ஓதுகின்றார். ஒரு பறவையின் முட்டைகளிடையே வேறொரு புதுமையான முட்டையை வைத்தால் அதை அப்பறவை பகுத்தறிவின்றித் தன் முட்டைகளுள் ஒன்றாக ஏற்றுக்கொள்ளினும் கொள்ளும்; அல்லது தன் இயற்கை இயல்பினாலே அதைத் தன் கூட்டினின்றும் நீக்கினும் நீக்கும். ஆனால், பொதுவாக அம்முட்டையைத் தன் கூட்டினின்றும் நீக்குவதே அதன் இயல்பாகும். அது அம்முட்டையை நீக்குவதோடல்லாமல் தானும் கூட்டைவிட்டு நீங்கிப் போய் விடும். செயின்ட் குவின்டின் (St. Quentin) என்பவரின் பறவை வளர்க்கும் சாலையில் இரண்டு பெட்டை மணற் கோழிகளும் (Sand grouse) ஒரு சேவலும் இருந்தன. பெட்டைக்

கோழி பகலில் முட்டையை அடை காப்பதும் சேவல் இரவில் அடைகாப்பதும் இப்பறவை இனத்தின் இயல்பு. ஓர் ஆண்டு இவ்விரண்டு பெட்டைக் கோழிகளும் ஒரே சமயத்தில் முட்டையிட்டன. இரண்டு முட்டைகளையும இரவில் அடைகாக்க வேண்டியது சேவலின் தொழிலல்லவா? எனவே, இரவின் முற்பகுதி நேரம்வரை ஒரு முட்டைமீ தமர்ந்தும் பிற்பகுதியில் மற்றொரு முட்டைமீ தமர்ந்தும் சேவல் அடைகாத்தது. இவ்வாறு போதுமான அடைகாப்பது இல்லாமையால் முட்டைகள் கெட்டுவிட்டன. அக் கோழிகளுக்குப் பகுத்தறிவு இருந்திருப்பின் இருபத்துநான்கு மணி நேரமும் அவ்விரண்டு முட்டைகளை இடையறாது அடை காப்பதற்கேற்ற முறையை அவை கையாண்டிருக்கலாம். பகலில் பெட்டைக் கோழி அடைகாப்பதும் இரவில் சேவல் அத்தொழிலை மேற்கொள்வதும் ஆகிய இப்பறவை இனத்தின் இயல்பை யொட்டியே மெற் சொன்ன சேவல், எதிர்பாராத நிலை ஏற்பட்டபோதும் நடந்துகொண்டது. எதிர்பாராதது நிகழ்ந்தபோது அதற்கேற்ற முறையை மேற்கொள்ள அதற்குத் தெரியவில்லை. இஃது அப்பறவையின் பகுத்தறிவு இன்மையைத் தெளிவாக்குகின்ற தல்லவா?

பறவைகள் பொதுவாகப் பகுத்தறிவின்றி இயற்கை இயல்பானே செயலாற்றுகின்றனவேனும், அவைகளுக்கு உள்ளுணர்ச்சியும்(emotion) இல்லாமலில்லை. முட்டைகளை அடைகாக்க வேண்டும் என்ற உணர்ச்சியும் குஞ்சுகளுக்கு உணவு ஊட்ட வேண்டுமென்ற உணர்ச்சியும் பறவைகளுக்கு உண்டு. தம்முடைய குஞ்சுகளுக்கு இடையூறு நேருவதா யிருந்தால் அதைக் குறித்து அவைகள் பெரிதும் அஞ்சித் துயருறுகின்றன. இனிய இசைக்கு அவற்றின் உள்ளம் உருகும். அவை காதல் புரியும்போது எவ்வித இன்னலையும் மறந்து உணர்ச்சியிலே ஆழ்ந்து விடுகின்றன. அத்தருணத்தில் பகைவன் அருகில் வந்தாலும் கவனிப்பதில்லை.

பறவைகள் தமக்குள் பொறாமை கொள்வதும் உண்டு. இரண்டு சேவலும் ஒரு பேடும் ஒரு கூண்டினுள் இருந்தன. ஒரு நாள் இரவில் பெட்டையைக் குறித்து இரண்டு சேவலும் போரிட்டு, ஒன்று மற்றொன்றைக் கொன்றுவிட்டது. இதைக் கண்ட பேடு கொன்ற சேவலை எதிர்த்தது. இரண்டையும் உடனே விலக்கியிராவிட்டால் பேடு அச்சேவலைக் கொன்றிருக்கும். கொன்ற சேவலின் மீது தான் பெட்டைக்கு முதலில் அன்பு இருந்தது. ஆனால், அச்சேவல் மற்றொரு சேவலைக் கொன்றதைக் கண்டதும் அதன் அன்பு மாறிவிட்டது.

பறவைகள் விளையாட்டிலும் மிக்க விருப்பங் கொள்ளுகின்றன. இங்ஙனம் அவைகள் பல வகை உணர்ச்சிகளை உடையவையேனும், அவ்வுணர்ச்சிகள் நம் உணர்ச்சியினும் முற்றும் வேறானவை. பறவைகளுக்கு நினைக்கும் ஆற்றல் இல்லாமையால் அவற்றின் உணர்ச்சி இறந்த காலத்தோடும் எதிர்காலத்தோடும் தொடர்புடையதாகாது. அவற்றின் அச்சம் வெறும் அச்சமே யாம். இறப்பைப் பற்றி அச்சமோ எதிர்காலத்தில் நேரப் போகும் இன்னலைப் பற்றிய அச்சமோ அவை கொள்வதில்லை. அவைகள் கவலை கொண்டு தம் மனத்தைப் புண்படுத்திக் கொள்வதும் கிடையாது. அச்சநிலை நீங்கியதும் அவைகளின் அச்சமும் மறைந்து விடுகிறது. நம் தாய் தன் புதல்வன் நோய்வாய்ப்பட் டிருப்பதைக் குறித்து வருந்துவதைப் போல, தாய்ப் பறவை தன் குஞ்சின் கதியைக் கண்டு கலங்குவதில்லை. ஆனால், மக்களின் நினைவு, கற்பனை முதலிய சக்திகள் அனைத்தும் முக்காலத் தொடர்புடையன என்று கூறவேண்டுவதில்லை. இதுகாறும் கூறியவற்றால் பறவைகளுக்கும் மக்களுக்கும் உள்ள வேற்றுமை நன்கு தெளிவாகிற தன்றோ?

●

இந்திய நாட்டுத் தொழில் முயற்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் அரசாங்கத்தாரின் உதவி எவ்வளவு கிடைத்திருக்கிறது என்பதை வரலாற்று முறையில் தெளிவாக இக்கட்டுரை ஆராய்கிறது. கம்பனியார் ஆட்சியிலிருந்து இன்றைய ஆட்சி ஏற்படும் வரை நம் நாடு முன்னேற முடியாமல் தவித்த தவிப்பை அறிஞர் வேலாயுதனார் புலப்படுத்துகிறார். இனி நல்ல காலம் ஏற்படலாம் என்ற நம்பிக்கை தோன்றியிருப்பதைச் சுட்டிக்காட்டி நமக்குள்ள கடமை என்ன என்று குறித்து முடிக்கிறார்.

தொழில் வளர்ச்சியும் அரசாங்க உதவியும்

திரு. சி. வேலாயுதம் M.A., L.T.

★

சமீபத்தில் நம் நாட்டில் அரசாங்கம் விடுத்த ஒரு அறிக்கையில் அது எந்த விதமான கொள்கையைத் தொழில் விஷயங்களில் பின்பற்றப் போகிறது என்று விளக்கியிருந்தது. அவ்வறிக்கையைப் பலர் பலவாறு வரவேற்றனர். முதலாளிகளுக்கு அது கேடாகவும், பொதுமக்களுக்கு நன்மையாகவும் பட்டது. அவ்வறிக்கையினால் ஏற்படக்கூடிய பலாபலன்களை ஆய்வதே இங்குக் கருதிய பொருள். ஆனால், அவ்வித அறிக்கைக்குக் காரணமாக நம் நாட்டுப் பொருளாதார வரலாறு இருந்திருக்கின்றதால், முதலில் அவ்வரலாற்றைக் கொஞ்சம் அறிந்து பின்னர் அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகளை ஆராய்வோம்.

நம் நாட்டு வரலாற்றுப்படி, கிழக்கிந்தியக் கம்பனியார் ஆட்சியிலும் பின்னர் ராணியின் ஆட்சியிலும் எந்த அளவுக்கு அரசாங்கம் தொழில் வளர்ச்சியில் உதவியிருக்கிறது என்பதை அறிவது அவசியம். கிழக்கிந்தியக் கம்பனி ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்த காலத்தில், அது இந்தியத் தொழில்களின் முன்னேற்றத்துக்குத் தடையாக இல்லை. இந்திய அரசரின் அனுமதி பெற்றோ பெறாமலோ நாட்டின் வியாபாரத்தை முற்றிலும் கைப்பற்றிக்கொண்டு, லாபமடைய முயன்றனர். அப்பொருளை யார் உற்பத்தி செய்யினும் அவர்களுக்குக் கவலையில்லை. ஆனால், இங்கிலாந்தில் வியாபாரப் பொருளியல் (Mercantilism) செல்வாக்குப் பெற்றவுடன் இங்கிலாந்தின் பொன்னை இந்தியா கொள்ளை கொள்கிறதே என்று கூப்பாடு எழுந்து, அதன் பயனாய்க் கம்பனியின் நடவடிக்கைகளும் கட்டுப்பாட்டுக்குட்படுத்தப் பட்டன. இந்தியத் துணிகள் இங்கிலாந்தில் புகாதபடி, உபயோகத்தில் இல்லாதபடி தடைகள் விதிக்கப் பட்டன. இந்தியச் சாயத் துணிக்கு 1700—1824க் கிடையில் தடையிருந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில் தொழிற் புரட்சி ஆரம்பமானபோது இந்தியாவின் தொழில்கள் எதுவும் இங்கிலாந்தின் புதுத் தொழில்களுக்கு நேராகவோ மறைமுகமாகவோ எவ்விதக் கெடுதலும் செய்யாதபடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

1769ல் பட்டுத்துணி நெசவு வங்காளத்தில் இல்லாமல் பார்த்துக்கொள்ளும்படிக்கும், பட்டு நூற்பதுவும் கம்பனி நிலையங்களிலேதான் நடைபெற வேண்டுமென்றும், ஆலைகளுக்கு வேண்டிய கச்சாப் பொருள்களை உற்பத்தி செய்து சப்ளை செய்யவே முயல வேண்டும் என்றும் இந்தியக் கம்பனிக்கு விதிக்கப்பட்டது. இப்படி இந்தியக் கைத்தொழிலை நசுக்க எடுத்த நடவடிக்கைகளுடன், மும்முரமாக இங்கிலாந்தின் இயந்திரத் தொழில்களின் பொருள்களை இந்தியாவில் பரப்ப முயற்சிகள் நடந்தன. வெல்லஸ்லி பிரபு செய்த முயற்சி சொல்லும் தரமல்ல. நாளடைவில் நம் கைத்தொழில் பொருள்கள் ஆலைப் பொருள்களோடு போட்டியிட முடியாது மறையலாயின. இவ்விதமாய்க் கம்பனியின் ஆட்சிக் காலத்தில் நம் கைத்தொழில்கள் அழியவே அடிகோலப்பட்டது. ஆக்கத்துக்கு ஒன்றும் செய்யப்படவில்லை.

1858க்குப் பின் ஆட்சி கம்பனியிடமிருந்து, ராணிக்கு மாறியது. இக்காலத்தில் ஆங்கில அரசாங்கத்தின் கொள்கை 'தலையிடாமை' (Laissez-faire) என்பதாகும். அதாவது மக்கள் செயல்களில் அரசாங்கம் தலையிடுவது கூடாது. தன்னலம் உந்தலால் பொருள் துறையில் மக்கள் செய்யும் காரியங்கள் நாட்டுக்குத் தானே நன்மை பயக்கும். ஆகவே, வியாபாரத்திலும், தொழில் நிறுவுவதிலும், நடத்துவதிலும் அரசாங்கம் தலையிடாமல் இருந்து வந்தது. அதே கொள்கையை இந்தியாவிலும் ஆள வந்தார்கள் அமுல் செலுத்தினார்கள். இதன் பயனாய், இந்தியாவின் கைத்தொழில்கள் மாண்டது மட்டுமின்றி, புதுத் தொழில்கள் நவீன முறையில் நிறுவுவதும் கூடாததாயிற்று. ஏனெனில், சென்ற ஒரு நூற்றாண்டாய்ச் சிறப்புற்றிருந்த ஆங்கிலத் தொழிற்சாலைகளின் பொருள்களுடன் போட்டியிடுவதென்றால் இந்தியப் பொருள்களுக்கு இறக்குமதி வரி மூலம் பாதுகாப்பு அவசியம். ஆனால், இங்கிலாந்தில் இருந்த வரிகளை எல்லாம், தடையிலா வர்த்தகம் என்ற கொள்கையின் கீழ், எடுத்துவிட்டார்களாகையால், இந்தியாவில் வேலை பார்த்த நிதி மந்திரிகளும் தம் நாட்டின் "சிறந்த" முறையைப் பின்பற்ற ஆவேசங் கொண்டிருந்தனர். இங்கிலாந்தின் போட்டியிலிருந்து ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் வரிப் பாதுகாப்புகள் மூலம் காப்பாற்றிக்கொண்டு முன்னேறின. ஆனால், இந்தியாவோ- அரசாங்கத்தின் ஆதரவின்றி — அனைத்து விதத் தொழில்களையும் பறிகொடுத்து, மேலும் மேலும் பயிரையே நம்பி மாழ்கியது. அரசாங்கத்தில் இந்தியா பயிர்த் தொழிலுக்கே ஏற்றது என்ற கொள்கையும் இருந்தது. மேலைநாட்டு ஆலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கேற்ற வசதிகளைச் செய்யவே அரசாங்கம் கருதியது.

ஆனால், நாட்டின் செல்வ நிலை மோசமாகிக்கொண்டு வந்ததை அரசாங்கத்துக்கு அறிவுறுத்த ஆட்கள் இல்லாமல் இல்லை. பஞ்ச காலத்தில் மக்கள் வேறு வேலை ஒன்றும் இன்றித் துடியாய்த் துடித்தனர். 1878ல் உண்டான பெரும் பஞ்சத்தினைப் பற்றி விசாரணை செய்த குழுவினர் பயிரையன்றிப் பிற வருவாயறியாத பாமர மக்களின் நிலைமைகண்டிரங்கினர். இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் அரசாங்கம் அவசியம் ஊக்கம் செலுத்த வேண்டும் என்றும், சிறப்பான முறையில் பயிற்சி பெற்ற தொழில் விற்பனரைக் கொண்டு நவீன உற்பத்தி முறைகளைக் கையாளவேண்டும் என்றும், இறக்குமதி செய்யப்படும் அநேக சாமான்களை இந்தியாவே உற்பத்தி செய்ய முடியும் என்றும் எடுத்துக் காட்டினர். அரசாங்கம் தொழிலில் ஈடுபட முன்வருவோர்க்குத் தொழிலைப்

பற்றிய விவரங்கள் அனைத்தும் தரவும், பயிற்சியுள்ள ஆட்களை வரவழைத்துத் தரவும் முன்வர வேண்டும்; அன்றியும் தன் தொழிற்சாலைகளிலேயும் ரயில்வே தொழிற்சாலைகளிலேயும் பயிற்சிக்கு வசதி ஏற்படுத்தலாம் என்றனர். தனக்கு வேண்டிய தேவைகளை அரசாங்கம் இந்தியாவிலேயே வாங்குவது அவசியம் என்று வற்புறுத்தினர். இவ்வகையில் இக்குழுவினர் ஆலோசனை கூறியதின் நோக்கம் இந்திய மக்கள் நிலச்சார்பு குறைந்து, தொழில் வருமானம் மிக்குப் பஞ்சகாலத்திலும் பராமரிப்புக்கு வேண்டிய சக்தியுடன் இருக்கவேண்டும் என்பதே.

இவ்வளவு இரக்கத்தோடு ஏற்ற முறைகளை எடுத்துக் காட்டியும் அரசாங்கம் தன் வழியே சென்றது. இரண்டொரு சில்லறை நடவடிக்கைகளையே நாடு கண்டது. 1883-ல் அரசாங்கத் தேவைகளைக் கூடியமட்டும் இந்தியாவிலேயே வாங்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கண்காட்சிச் சாலைகள் 'ம்யூசியங்கள்' நிறுவப்பட்டன. 1886-ல் லண்டன் பொருட்காட்சியில் இந்தியப் பொருள்கள் காணப்பட்டன. சில மாகாணங்கள் பொருளாதார முன்னேற்றத்துக்கான வசதிகளை ஆராய்ந்தன. இவைகள் அனைத்தும் ஒரு பெரிய நாட்டின் மக்களுக்கு உணவளிக்கும் அளவு தொழில்களை வளர்க்கப் போதுமா? சென்னை மாகாணத்தில்தான் சாட்டர்டன் என்ற ஒரு ஆர்வம்பிடித்த அலுவற்காரர் அரசாங்கத்தைத்தொழிலில் ஈடுபடுத்திவிட்டார். தொழிற்கல்வியை வளர்க்கவும், உள்ள சாதனங்களை ஆராயவும், சில தொழில்களை ஆரம்பிக்கவும் முன்வந்து, அரசாங்கத்தின் சிறு பொருளுதவிகொண்டு அலுமினியச் சாமான் உற்பத்திசாலை ஒன்றை 1898-ல் ஆரம்பித்தார். சித்திரப்பள்ளித் தலைவராயிருந்த அவரை அழைத்துத் தொழில் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் தலைவராக அவரை நிறுவியது அரசாங்கம். கைநெசவு, கிணறுக்காகத் தொளை போடுதல், எண்ணெய் எஞ்சினை உபயோகித்தல், நீர் இறைக்கும் குழாய் அமைத்தல், குரோம் பதனிடல் முதலியன அவர் கவனித்த பல துறைகள். அலுமினிய உற்பத்தி வேலை அரசாங்கத்தினிடமிருந்து தனி முதலாளிக்கு விற்கப்பட்டது.

1858-லிருந்து கர்ஸன் பிரபு இந்தியாவுக்கு வந்தது வரையில் இடைப்பட்ட காலத்திய மேற்கண்ட வரலாறு எப்படி அரசாங்கம் இன்னும் தன் பொறுப்பை உணர்ந்து நடக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

கர்ஸன் பிரபு காலத்தில்தான், பயிர்த் தொழில் துறையில் சில முக்கியமான முன்னேற்ற நடவடிக்கைகள் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதேபோல் தொழிலபிவிருத்தியிலும் இப்போதுதான் அரசாங்கம் சற்றுப் பொறுப்புணர்ந்தமாதிரி நடந்துகொண்டது; 1903-ல் ஜான் ஹூவிட் என்பவர் தலைமையில், வாணிபம் — தொழில் இலாகா ஒன்று அமைக்கப்பட்டது. அதன்வேலை மாகாண அரசாங்கங்களின் தொழில்வளர்ச்சிபற்றிய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவது. 1907-ல் நைனிடாலில் ஒரு மகாநாடு கூடி, மாகாணத்துக்கொரு டைரக்டரையும் ஒரு தொழிலியல் பள்ளியையும் (Techinical Institute), ஒரு ஆலோசனைச் சபையையும் நிறுவ முடிவு செய்யப்பட்டது.

1906லேயே சென்னையில் ஒரு இலாகா ஏற்பட்டதுடன் அதற்குச் சாட்டர் டைரக்டராகவும் நியமிக்கப்பட்டார். 1908-ல் உதகமண்டலத்தில் ஒரு தொழில் மாநாடு கூடியது. அதன் விளைவாய் அரசாங்கம் தொழில் வளர்ச்சியில் முனைந்து ஈடுபடப் போகிறது என்று எதிர்பார்த்தனர் மக்கள். மாநாட்டின் பொதுவான முடிவு அரசாங்கம் இன்னும் அதிகமாகத் தொழில் வளர்ச்சியில் ஈடுபடவேண்டுமென்பதே.

ஆனால், ஒரு ஆலோசனைச் சபையின் கருத்தை அறிந்து, தனி முதலாளிகள் முன்வராத பட்சத்தில்தான், அரசாங்கம் ஒரு தொழில் ஆரம்பிக்கலாம். அதன் வரவுசெலவுகள் பகிரங்கமாக இருக்கவேண்டும். வெற்றி கண்ட உடனே முதலாளிகளுக்கு விற்றுவிடப்படவேண்டும். இப்படிப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டுத் தொழில்களைப் பரீட்சார்த்தமாக ஆரம்பிப்பதைக்கூடச் சென்னை மாகாண ஐரோப்பியர் எதிர்த்தனர். குரோம் தோல் உற்பத்தியில் அரசாங்கம் கண்ட வெற்றி அவர்களுக்குக் கண்ணுறுத்தலாயிருந்தது. முதலாளிகளுடன் அரசாங்கம் போட்டியிடுகிறது என்றும் நேர்மையற்ற நடவடிக்கை என்றும் தூற்றினர். ஆயினும் சென்னை அரசாங்கம் மாநாட்டின் முடிவை ஏற்றுக்கொண்டு, தன் தொழில் இலாகாவை சாஸ்வதமாக்க அனுமதி கோரி இந்தியா மந்திரிக்கு எழுதியது. ஐரோப்பியர் அங்கலாய்த்தபடி மந்திரி மார்லியும் அங்கலாய்த்து, அரசாங்கம் பரீட்சார்த்தமாகவும் தலையிடுவதால் யாதொரு நன்மையும் தொழிற்கு உண்டாகாதென்றும் தாம் கருதுவதாயும், தொழிற் கல்விக்கு வசதி அளிப்பது மாத்திரமே அரசாங்கம் செய்யக்கூடியதென்றும், சென்னையில் தனித்தொழில் இலாகா வேண்டியதில்லை என்றும் தெரிவித்தார். உடனே தொழில் இலாகா கலைக்கப்பட்டது. சாட்டர்டன் கல்வியிலாகாவின்கீழ் வேலை பார்க்கும்படி ஆயிற்று. ஐரோப்பியருக்குக் கண்ணுறுத்தலாயிருந்த குரோம் தொழிற்சாலை விற்கப்பட்டது. பரீட்சார்த்த நெசவுச் சாலைகள் மூடப்பட்டன. பின்னர்ச் சாட்டர்டனும் மைசூர் அரசாங்கத்தில் வேலை ஏற்றுப் போய்விட்டார். இதுபோலவே இதர மாகாணங்களிலும் அரசாங்கத் தொழில்களுக்கு முடிவுகட்டப்பட்டது.

1912-ல் இருந்த குரு என்ற இந்தியா மந்திரியிடம் ஷை 1910 ஆண்டின் உத்தரவைப் புனராலோசனை செய்யுமாறு வேண்டிக்கொண்டது சென்னை அரசாங்கம். அவர் சற்றுத் தயக்க மனத்துடன், 1910 ஆண்டு உத்தரவைச்சென்னை அநர்த்தம் செய்துகொண்டதாகவும், அது அவ்வளவு தடையிடும் நோக்கத்தோடு அனுப்பப்படவில்லை என்றும், மாகாணம் இன்னும் சற்றுத் தைரியமாக முன்போவதைத் தாம் அநுமதிப்பதாகவும், ஆனால் இந்திய அரசாங்கமே இன்னும் தன் மனத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை என்றும் விளக்கினார். இதன் மேல், மாகாணங்களில் கைத்தொழில் டைரக்டர்களை நிறுவ உத்தரவாயிற்று. ஆனால், தனி இலாகா ஏற்படுத்த உத்தரவில்லை. டைரக்டர் வேலைகள் தொழில்பற்றிய செய்திகளைத் திரட்டி வழங்குவதும், ஆராய்ச்சி, பரீட்சார்த்த வேலைகளை நடத்துவதும், தொழிற்பயிற்சியை மேற்பார்வை செய்தலும், பொதுவில் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதும் ஆக வரையறுக்கப்பட்டது. ஆனால், மார்லியின் உத்திரவினும் மனம் புழுங்கிய சென்னை அரசாங்கம் ஒரு தனித்தொழில் இலாகாவை நிறுவியது. அது இன்றுவரை இருந்துவருகிறது. பிற மாகாணங்கள் டைரக்டரை மட்டுமே நியமித்தன; நெடுநாள் சென்றுதான் தனி இலாக்காக்கள் அமைக்கப்பட்டன.

கர்ஸன் காலத்தில்தான் தொழிற் கல்வியிலும் கொஞ்சம் ஊக்கம் பிறந்தது. 1901-ல் அவரது தலைமையில் சிம்லாவில் ஒரு கல்வி மாநாடு கூடியது. அது, தற்காலக் கல்வி வெறும் நூலறிவையே தருவதாயும் தொழிற்பயிற்சிக்கு வசதி ஏற்படுத்துவது அவசியம் என்றும் வற்புறுத்தியது. 1903 வெளிநாட்டில் தொழிற்பயிற்சி பெறச் செல்லுவோருக்குப் பொருளுதவி (scholarship) தர முன்வந்தது அரசாங்கம். அநேக தொழிலியல் பள்ளிகள் துவக்கப்பட்டன. பங்களூரில் டாட்டா குடும்பத்தார் நிறு

தமிழ்நாடு ஆவணக காப்பக நூலகம்

விய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்துக்கு அரசாங்கம் உதவியது. ஆனால், பலன் கல்வித் துறையிலும் எதிர்பார்த்த அளவில்லை.

முதல் யுத்தத்துக்கு முன், இவ்வகையில் யாதொன்றும் உருப்படியாக அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்குச் செய்துவிடவில்லை.

யுத்தம் வந்ததும் யுத்த சேவைக்காக அரசாங்கம் பல தொழில் துறைகளில் தலையிட வேண்டியதாயிற்று. யுத்த தளவாடச் சபையின் மூலம் இந்தியாவிலுள்ள சாதனங்களைப் பயன்படுத்த முயற்சி நடந்தது. ஒவ்வொரு மாகாணத்திலும் அதன் கிளை ஸ்தாபனம் நிறுவப்பட்டது. யுத்தத்தால் பம்பாயும், வங்காளமும் மிக லாபமடைந்தன. தொழில்கள் வளர்ந்தன. ஆனால், இயந்திர சாதனங்கள் இல்லாமையாலும், இறக்குமதி செய்யவும் முடியாமையாலும், சந்தர்ப்பத்தை முழுதும் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யமுடியாத பொருள்களை விற்க ஜப்பானும் அமெரிக்காவும் இந்தியாவுள் புகுந்தன. இந்தக் காலத்தில் அரசாங்கம் செய்தது யுத்த தளவாடச் சபையை நிறுவியதும், கைத்தொழில் விசாரணைக் குழுவை நியமித்ததும் தான்.

இத்தொழில் விசாரணைக் குழுவின் அறிக்கையில் இந்தியா தன் இயந்திரத் தேவைகளையும் தொழில் விற்பனர் தேவையையும் விரைவில் பூர்த்தி செய்ய வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டது. யுத்தத்தின்போது எப்படிப் பல வகையான முக்கியத் தொழில்கள் இல்லாது நாடு கஷ்டப்படுகிறது என்பது புலனாயிற்று. ஆகவே இவ்வறிக்கை இந்தியாவின் தொழிற் குறைபாடுகளை விளக்கி, எதிர்காலத் திட்டமிருக்க வேண்டிய வகையையும் வகுத்தது. தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் தரவும் தொழில்களைத் தணிக்கை செய்யவும் அரசாங்கத்தில் சில அங்கங்கள் அமைக்கப்படவேண்டும் என்பதும், மாகாணங்களிலும் இலாகாக்கள் இருப்பது அவசியம் என்பதும், அரசாங்கத் தேவைகளை ஒழுங்குடன் விளக்குவதற்குத் தனி அலுவலகம் மத்திய அரசாங்கத்திலும் இருக்க வேண்டும் என்பதும் தொழிற் கல்வி பயிற்சி முதலியவைகளைப் பற்றியும், பண உதவியைப்பற்றியும் அநேக யோசனைகளும் கூறப்பட்டன. அரசாங்கமும் பொதுவாக முடிவுகளை ஒப்புக் கொண்டது. ஆனால், நடவடிக்கையில் ஒன்றும் மும்முரமாக இல்லை. 1921-ல் ஒரு தொழில் இலாகா மத்திய அரசாங்கத்தில் நிறுவப்பட்டது. மாகாண இலாகாக்கள் தங்கள் தொழில் வளர்ச்சி வேலைகளை நடத்திவந்தன. ஏற்கெனவே நிறுவப்பட்ட தொழில்களுக்குப் பண உதவி, தொழிலியல் விளக்கம் தருதல், ஆராய்ச்சி, புதுத்தொழில்களை நிறுவுவது, தொழிற்பயிற்சிக்குதவுதல், விற்பனை வசதிகள் செய்து தருதல், பயிர்த் தொழிலுக் கேற்பக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல், மக்கள் நலத்தில் ஈடுபடப் பிற தொழில்களில் ஒத்துழைத்தல் ஆகியவையே முக்கியமாக இலாகாக்கள் கவனித்த விஷயங்கள். ஆனால், செயலளவில் குடிசைத் தொழில் முன்னேற்றமே மாகாணங்களின் சிறந்த தொண்டாக இருந்தது. தொழிற் கமிஷன் எதிர்பார்த்த நவீனத் தொழில் வளர்ச்சியில் அவை ஏதும் செய்ய இயலவில்லை. 1919க்குப் பின் தொழில் விஷயங்கள் மாகாண அரசாங்கங்களின் பொறுப்பானபடியால், பல மாகாணங்களில் பல அளவில்முன்னேற்றம் காணப்பட்டது. அவைகளின் போக்கை இணைப்பதற்கு ஆண்டுதோறும் கூடிய இந்தியத் தொழில் மகாநாடு ஒன்றேதான் இருந்தது. ஆனால், சென்னை பல துறையில் பிறருக்கு வழிகாட்டியாய் இருந்தது. பல மாகாணங்களில் தொழில்களுக்குப் பணவுதவி செய்வதற்காகத் தொழிலுதவிச் சங்கம் ஒன்று அமுலுக்கு வந்தது.

யுத்தத்துக்குப் பின் இங்கிலாந்திலேயே கொஞ்சம் கொஞ்சமாய்த் தடை

யிலா வியாபாரக் கொள்கை கைவிடப்பட்டது. யுத்தகாலத்தில் தோன்றிய பல தொழில்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டியது அங்கு அவசியமானது போல் இங்கும் அவசியம் என்று தோன்றியதால், இறக்குமதி வரி விதிக்கும் விஷயமாக ஒரு விசாரணைக் கமிஷன் 1921-ல் ஆராய்ச்சி செய்தது. அது சொன்னபடி ஒரு சுங்கச் சபை நிறுவப்பட்டது. அதன் ஆலோசனையின் பேரில் பருத்தித்துணி, எஃகு, சர்க்கரை, தீப்பெட்டி, தோல், சில இரசாயனப் பொருள்கள்; காகிதம் முதலியவற்றின் உற்பத்தியை இந்தியாவில் வளர்க்குமாறு வரிப் பாதுகாப்புத் தரப்பட்டது.

இப்படியாக மத்திய அரசாங்கம் கையாண்ட தலையிடாக் கொள்கை கைவிடப்பட்டதும், பிற நாடுகளில் அரசாங்கங்கள் தொழில் வளர்ச்சிக்கு எடுத்துக்கொண்டுள்ள வகைகளையும் ஏன் கையாளக்கூடாது என்ற வினாவை மக்கள் எழுப்பலாயினர். 1935ம் வருஷத்திய புதிய அரசியலின்கீழ், இந்தியாவை விரைவில் தொழில் வளர்ச்சியுள்ள நாடாக்க, அரசியலுரிமை உண்டென மக்கள் எதிர்பார்த்தனர். காங்கிரஸ் மகா சபையும் ஊக்கம் காட்ட வாரம்பித்தது. காங்கிரஸ் கட்சி அரசுக்கு வந்ததும் கனவு நனவாகும் காலம் வந்ததெனப் பூரிப்புண்டாயிற்று. 1938ல் காங்கிரஸ் மந்திரிகள் டெல்லியில் கூடிப் பேசினர். அதன் பயனாய்த் தேசியப் பொருளாதாரத் திட்டம் தயாரிக்கப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. பல தொழில்களையும் ஆராய்ந்த இதன் உறுப்பினவாகிய கமிட்டிகள் பல எதிர்காலத் திட்டங்களை வகுத்தன.

அதற்குள் சமீப உலக யுத்தம் வந்தது. காங்கிரஸ் ஆட்சியைத் துறந்தது. ஆயினும் மக்களின் மனத்தில் சென்ற யுத்த காலத்தை விட இந்த யுத்தத்தின் போதாகிலும் நாடு தொழிலில் முன்னேறலாம் என்ற நம்பிக்கை உண்டாயிற்று. கிழக்கு யுத்தப் பிராந்தியத்துக்கு சப்ளை செய்யும் முக்கியப் பொறுப்பு இந்தியாவுக்கு ஏற்பட்டதாலும், யுத்த காலத்தில் தோன்றும் தொழில்களுக்குச் சுங்கக் காப்புத் தருவதாக அரசாங்கம் வாக்குக் கொடுத்ததாலும், அநேக தொழில் விற்பனக் கமிஷன்கள் விசாரணை செய்து தூண்டியதாலும், யுத்தகாலத் தொழில் விற்பனர் பயிற்சித் திட்டமும் பெவின் பயிற்சித் திட்டமும் ஏற்பட்டதாலும், தொழில் திறத்திலும் தொழில் நிறுவுவதிலும் நாடு கொஞ்சம் முன்னேறியது. பலவகை எஃகுக் கலவைப் பொருள்களும் முதல் முதலாக உற்பத்தியாயின. அவசியமில்லாத உலோக இனத்தில் அலுமினியம் ஒன்றே பெருவளர்ச்சி பெற்றது. செம்பு, காரீயம், தாமிரம் முதலியவை சம்பந்தமான தொழில் இன்றும் அற்ப நிலையிலேயே உள்ளது. ஆனால், எஞ்சினீரிங் தொழில் மிக வளர்ந்தது. முக்கியமாக இயந்திரமாக்கும் ஆயுத உற்பத்தி பெருகிற்று. ஆனால், இயந்திரங்களைச் செய்வது அவ்வளவு வளரவில்லை. துணி ஆலை இயந்திரங்களை உற்பத்தி செய்ய ஒரு கம்பனி நிறுவப்பட்டது ஒரு குறிப்பிடத்தக்க விஷயம். மின்சார விளக்கு, விசிறிகளின் உற்பத்தி பெருகியது. கப்பல் கட்டுதல் ஏரோப்ளேன் செய்தல் துவங்கியபோதிலும் பழுது பார்ப்பது (ரிப்பேர் செய்வது) தவிர வேறு வழியில் முன்னேறவில்லை. இரசாயனப் பொருள்களில் காடி (acid) வகைகளின் உற்பத்தி வளர்ந்தது. முன்பு காணக்கிடையாத கார (alkali) இரசாயனப் பொருள்கள் பல-எரிசோடா, சலவைத்தூள், குளோரின் முதலியவை உற்பத்தியாகத் தொடங்கின. இரசாயன எரு உண்டாக்கத் திட்டமிடப்பட்டு, திருவாங்கூரும் ஆலை நிறுவியது. பாரசூட்டுப் பட்டு, நார்ப் பட்டு முதலியவைகளிலும் அதிக முன்னேற்றம் உண்டாயிற்று.

யுத்த தேவையைப் பூர்த்தி செய்யும் வழியில் இவ்வித முன்னேற்றங்கள்

ஏற்பட்டன. முன்னேற்றத்தை யுத்தத் தற்குப்பின் இழக்கக்கூடா தென்ற எண்ணத்தோடு, புனர் நிர்மாணத் திட்டங்கள் அரசாங்கத்தவரும் பிறரும் தயாரிக்கலாயினர். 1941 லேயே அரசாங்கம் ஒரு கமிட்டியை ஏற்படுத்திற்று. பின் பொருளாதார நிபுணர் ஆலோசனைக் கமிட்டி ஒன்று நிறுவியது. பம்பாய்த் திட்டம், மக்கள் திட்டம், காந்தியத் திட்டம் என்பனவும் வெளிவந்தன. இந்தத் திட்டங்கள் எல்லாம், பொருள் உற்பத்தியைப் பெருக்குவதை மாத்திரம் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. உற்பத்திப் பெருக்கத்தால் மக்கள் நலம்பெற வேண்டும் என்றதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டன.

மக்கள் நலம் எவ்வகைப் பொருளாக்கத் திட்டத்தால் அதிகமாகும் என்ற வினு எழுந்தது. முக்கியமாய் முதலாளிகளிடம் தொழில் நிறுவும் பொறுப்பை இதுவரையுப்போல் விட்டு அதன் வழி, தேசப் பொருளாதார முன்னேற்றம் வருமென இருப்பதா அல்லது அரசாங்கம் தொழில்களை மேற்கொள்வதா என்பதே. மேலைநாடுகளில் முதலாளித்துவ முறையிலே தொழிற் புரட்சியும் வளர்ச்சியும் சென்ற நூற்றுண்டில் ஏற்பட்டபோதிலும், சமதர்மக் கொள்கை பரவிய காரணத்தால், அங்கே தேச வருமானம் எல்லா மக்களுக்கும் சமமாக விநியோகப்படும் முறைகள் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையும் இந்த நூற்றுண்டில் வலுப்பெற ஆரம்பித்தது. முதலாளித்துவத்தின் முக்கியச் சிறப்பு லாபத்துக்காகவேனும் முதலாளி உற்பத்தியைப் பெருக்குவதே. ஆனல், குறைகள் பல. லாபத்தைக் கருதித் தொழில்கள் தோன்றினவே ஒழிய மக்கள் நலத்தைக் கருதியல்ல. பொதுமக்களுக்குத் தேவையானவை உற்பத்தி செய்யப்படாது, செல்வர் வேண்டியனவே உற்பத்தியாயின. லாப முதலாளிகள் மேலும்மேலும் செல்வராயினர். தேசத்தில் கிடைக்கும் மூலசாதனங்கள் பயன்படுத்தாது இருந்தன. நாட்டின் தற்காப்பு முதலியவற்றுக்கு வேண்டியவற்றை, லாபமற்றன என்ற காரணத்தால், முதலாளிகள் உற்பத்தி செய்யாது விட்டனர். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடைவிடாத போர் நடந்துகொண்டே இருந்தது. இத்தியாதி காரணங்களால் முதலாளிகள் தலையிடத் தயங்கிய தொழில்களையும், யுத்த தளவாடத் தொழில்களையும், போட்டிக்குப் பயந்து முதலாளி விடுத்த பல தொழில்களையுமாவது நடத்த அரசாங்கம் முன்வரவேண்டிய தாயிற்று.

இந்தக் கொள்கையை அனுசரித்தே மேற்சொன்ன பம்பாய்த் திட்டம், மக்கள் திட்டம், காந்தியத் திட்டம் என்பன சில தொழில்களை அரசாங்கம் நடத்தவேண்டியதாயும் பிற முதலாளித்துவ முறையில் நடத்தவேண்டியதாயும் ஆலோசனை கூறின. அரசாங்கமும் யுத்தகாலத் தொழில் முன்னேற்றத்தை வீணுக்காது, தொடர்ந்து சிறக்கச் செய்ய எண்ணித் தன் கருத்தை வெளியிட வேண்டிய தாயிற்று. முதலாளிகள் பல திட்டங்களுக்கிடையே தங்களுக்கு என்ன நிலை என்பதை அறியவேண்டி வற்புறுத்தினர்கள். 1945 ஏப்ரல் மாதத்தில் அரசாங்கத்தின் கொள்கை ஒரு அறிக்கையாக வெளியிடப்பட்டது. தனது நோக்கம் உள்ள சாதனங்களைக் கொண்டே தேச வருமானத்தை உயர்த்துவதும், தேசத் தற்காப்புக்கு அவசியமானவற்றைத் தயாரிப்பதும், எல்லோருக்கும் நிரந்தர வேலை தேடுவதும் என்று கூறப்பட்டது. இரும்பு, எஃகு, சக்தி, மோட்டார், டிராக்டர் (tractor), கப்பல் முதலியன சம்பந்தமான தொழில்களையும், வரியாகப் பாவிக்கும் உப்பு உற்பத்தி முதலிய தொழில்களையும் அரசாங்கம் நடத்தப் போகும் தொழில்கள் என்றும், பிற

தொழில்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக் குட்பட்டு முதலாளித்துவ முறையில் பிறரிடம் விடப்படும் என்றும் கூறப்பட்டது. மக்கள் நுகர்ச்சிப் பொருள்களைப் பெருக்க முயலப்போவதாயும், ஆராய்ச்சிக்கு உதவுவதாயும், முதல் காண உதவுவதாகவும் இந்தியப் பொருள்களையே கூடியமட்டும் வாங்குவதாகவும், இயந்திரங்களையும் தந்து, புறக்கணித்த பிரதேசங்களின் முன்னேற்றங் கருதி எதிர்காலத்தில் தொழில் நிறுவுவதைக் கட்டுப்பாடு செய்யப்போவதாயும், எத்தொழிலிலும் மூதலீட்டுக் குறைவில்லாமல் பார்த்துக்கொள்ளப் போவதாயும், போட்டியில்லாத் துறைகளில் வரும் கொள்ளை லாபத்தை அடக்கப் போவதாயும், பங்கு முடங்குவதைத் தடுக்கப்போவதாயும் முதலாளித்துவக் குறைகளை நீக்க முயலும் பாணியில் கூறப்பட்டது. தொழிலாளிகளின் நலங்கருதிச் சட்டம் செய்யப்படும் என்றும் உறுதி கூறப்பட்டது.

இந்த அறிக்கை பழைய போக்கில் அமைந்திருந்ததே ஒழிய முன்னேற்றம் விரைவில் காணும் வகையில் இல்லை. சுதந்திர அரசாங்கம் நிறுவப்பட்ட பின்னரே சென்ற 1948 ஏப்ரல் மாதத்தில் விவரமான அறிக்கை வெளிவந்தது. அதில் அரசாங்கத்தின் எதிர்காலத் தொழில் வளர்ச்சி பற்றிய கொள்கைகள் விளக்கமாகக் கூறப்பட்டன. இதுகாறும் ஏற்படுத்தப்பட்ட பல வித விசாரணைக் குழுவினரின் முடிவையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மக்களின் பொருளாதார முன்னேற்றமே முதல் குறிக்கோள். ஆனால், அதற்கு இன்னும் அதிகப்படியான பொருளாக்கம் வேண்டும். இப்போதைய நிலையில் இப்பெருக்கத்தைப் பெற, தனிமுறை முதலாளித்துவத்தை முழுதும் நீக்குவது சாத்தியமில்லை. ஏனெனில் விரும்பும் அளவில் தொழில்கள் அனைத்தையும், மேற்கொண்டு அரசாங்கம் நடத்துவதற்குத்தற்போது ஆளோ தனமோ இல்லை. தன் கையிலுள்ளவற்றை வளர்த்தலிலும், பிற துறைகளில் புது உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்துவதிலும் ஊக்கம் செலுத்துவதே போதுமானது. ஆகையால் யுத்த தளவாடங்கள், அணுச்சக்தி, ரயில், இன்னும் தேச பாதுகாப்புக்கு அவசியமான பொருள்கள் சம்பந்தமானவை அனைத்தும் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையில் நடக்கும் தொழில்களாகும்.

இன்னொரு பகுதியில் அரசாங்கம் ஏகபோக உரிமை நாடாது. ஆனால், இனிமேல் துவக்கும் தொழில்கள் அரசாங்கத்தைச் சார்ந்தனவாகவே இருக்கும். ஆனால், அவசியமானால் தக்க கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி, தனிமுறை முதலாளித்துவ முறையால் நிறுவப்படவும் அனுமதிக்கலாம். இவ்வகையைச் சார்ந்தது நிலக்கரி, இரும்பு, எஃகு, ஆகாய விமானம், கப்பல் கட்டல், டெலிபோன், தந்தி, வைர்லெஸ், நில எண்ணெய்கள் முதலியவற்றின் உற்பத்தி. இத்துறையில் ஏற்கனவே உள்ளவர்கள் 10ஆண்டுகளுக்குத்தடையின்றி நடத்திவரலாம். ஆராய்ந்து, அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமானால் தக்க நஷ்டஈடு கொடுத்து மேற்கொள்ளப்படும்.

மூன்றாவதாக, தனிமுறை முதலாளிகள் நடத்த அனுமதிக்கப்படும் தொழில்கள். மேற்கண்ட இருவகை தவிர மற்றவை முதலாளித்துவத்துக்கு விடப்பட் டுள்ளன. இத்துறையிலும் மேலும் மேலும் அரசாங்கம் மேற்கொள்ளவே உத்தேசம். ஒழுங்காக நடவாத தனிமுறைத் தொழிலிலும் தலையிட வேண்டிவரும்.

சில அடிப்படையான தொழில்களின் அமைப்பிலும் தலையிட வேண்டிவரும். தேசநலங் கருதிக் குறிப்பிட்ட இடங்களில் ஸ்தாபிக்க வேண்டியவை சில. சில மிக்க மூலதனம் வேண்டுபவை அல்லது திறம்பட்ட நிபுணர் வேண்டு

பவை. இவை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக் குட்பட்டு நிறுவவோ நடத்தவோ வேண்டியிருக்கும். இவ் வகையில் 20 வகைத் தொழில்கள் காணப் படுகின்றன.

தொழில் வளர்ச்சியில் வெளிநாட்டாரது முதலும் அறிவும் அநுபவமும் நமக்கு வேண்டும். ஆனால், சில நிபந்தனைகளுக் குட்படுத்தியே அவைகளை ஏற்கவேண்டும். (1) முதலும் ஆட்சியும் பெரும்பான்மையும் இந்தியர் வசமாக இருக்க வேண்டும். (2) இந்தியர் தொழிற்பயிற்சிக்கு அவை உதவ வேண்டும்.

தனிப்பட்ட முதலாளிகள் தொழிலை விருத்தி செய்வதற்கு வேண்டிய உதவி தரப்படும். போக்குவரத்துச் சாதனங்களா லுண்டாகும் இடைஞ்சலை நீக்கவும் வேண்டிய மூலப் பொருள்களை இறக்குமதி செய்தலும் கவனிக்கப் படும்.

நாட்டின் மூலப்பொருள் அனைத்தும் பயன்படும் அளவு தொழில் வளரும் வரையில் வெளிநாட்டுப் பொருள்களின் போட்டி இல்லாமல் காப்புச் சுங்கவரி விதிக்கப்படும்.

நாட்டின் வரி முறையும் ஆராயப் பட்டு, தொழில்களில் முதலீடு பெருகுமாறும், சிறுபான்மையோரிடமே செல்வம் தேங்காதபடிக்கும் மாற்றி அமைக்கப்படும்.

இந்த அறிக்கையின் மிக முக்கிய அங்கமாக விளங்குவது தொழிலாளி—முதலாளி சம்பந்தத்தைப் பற்றியதாகும். சுதந்திரம் பெற்ற நாளாய் நமக்குள்ள ஒரு பெரும் தலைவலி பல் லிடங்களிலும் நடக்கும் வேலை நிறுத்தமாகும். டெல்லியில் நடந்த தொழில் மாநாட்டில் இரு தரத்தாருக்கும் சமாதான ஒப்பந்தம் உண்டாக ஒரு தீர்மானம் நிறைவேறியது. அத் தீர்மானம் கூறியபடி, மிச்ச லாபத்தில் உற்பத்திப் பெருக்கத்துக்கு ஏற்றவாறு, தொழிலாளிகளுக்கும் பங்கு கொடுக்கவேண்டும் என்பதை இந்த அறிக்கை ஏற்றுக்கொண்டது. தொழிலாளி முதலாளி இவர்களது சம்பந்தத்தையும் கூலியையும் பங்கையும் பற்றிய பிரச்னையைத் தீர்க்கத் தேச முழுதுக்கும், தொழில்தோறும், மாகாணம் தோறும் பல கமிட்டிகள் நிறுவ உத்தேசமாகி இருக்கிறது. எல்லாவற்றிலும் தொழிலாளர்க்கு இடமுண்டு. தொழிலாளர் வீட்டு வசதியையும் அரசாங்கம் கவனிக்க முனைந்து 10 லட்சம் வீடுகள் 10 வருஷத்தில் கட்ட முடிவு செய்திருக்கிறது.

இந்த அறிக்கையைப் பொதுவாக இந்தியத் தொழிலாளிகள் நன்கு ஏற்றனர் என்றே கூறவேண்டும். தொழில் நிறுவும் பொறுப்புள்ள முதலாளிகளுக்கு முதல் தடவையாக அரசாங்கத்தின் நிரந்தரக் கொள்கை என்ன என்று விளங்கிற்று. அரசாங்கம் தன்கீழ் ஏகபோகமாக வைத்துக் கொள்ளப்போகும் தொழில்கள் எல்லா நாட்டிலும் அரசாங்கங்கள் வைத்திருக்கும் தொழில்களே. தற்போது முதலாளிகளிடம் உள்ள தொழில் வகைகளிலும் அரசாங்கம் புது ஆலைகளை நிறுவ யாரும் தடைகூற முடியாது. பத்து வருஷத்துக்குப் பின் அரசாங்கம் யாவற்றை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளும் என்றதையே குறைகூறலாம். இந்தக் கால அளவு குறுகிய தென்றும் இதன் பயத்தால் முதலாளிகள் தொழிலை வளர்க்கவோ நிறுவவோ தயங்குவார்கள் என்றும் சிலர் கூறினார்கள். ஆனால், அரசாங்கம் ஆராய்ச்சி செய்தே மேற்கொள்ளுமாகையால், தக்க காரணமின்றி ஏன் தலையிடப் போகிறது? தலையிட்டாலும் தக்க நஷ்ட ஈடு தரப்போகிறது. பிற துறையிலும் வேண்டுமானால் மேற்கொள்வேன் என்று கூறுகிறதே எனில், அது நடப்பது முதலாளிகள் தொழிலைச் செம்மையாக நடத்தாத போதுதான்.

ஆகையால், முதலாளிகள் முதலிட அச்சப்பட வேண்டியதே இல்லை. தவிர

அவர்களுக்குத் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய உதவி அனைத்தும் தர அரசாங்கம் வாக்குறுதி செய்திருக்கிறது. போக்குவரவுச் சாதனங்களால் உண்டாகும் தடைகளை நீக்குவதும், மூலப் பொருள் இறக்குமதி செய்வதற்கு உதவுவதும் அது தன் வேலையாக ஒப்புக்கொண்டுள்ளது. வெளிநாட்டுப் பொருள்களின் போட்டியி லிருந்து காப்பாற்றுவதற்குச் சுங்கச் சபை இருக்கிறது. யுத்தத்துக்குப் பின் தாராளமாய் அநேக தொழில்களுக்கு உதவி செய்திருக்கிறது. ஸ்டர்லிங் நிதி வழியும் வெளி நாட்டு வர்த்தகத்தில் வரும் லாபத்தாலும் முக்கிய சாதனங்களை இறக்குமதி செய்ய முயற்சி செய்ய வேண்டும். நுகர்ச்சிப் பொருள் இறக்குமதியில் நமக்குக் கிடைக்கும் வெளி நாட்டு நாணயம் வீணாகக் கூடாது. இறக்குமதி விஷயமாகச் சமீபத்தில் அரசாங்கம் சற்றுத் தாராளமாக இருக்க முயன்றிருக்கிறது. ஆனால், சுங்கச் சபையின் ஆலோசனையை நன்கு அறிந்தே இறக்குமதிகளை அனுமதிக்க வேண்டும். சுங்கச் சபை ஒரு நிரந்தர சபையாகி, அதற்குத் தக்க அலுவலக வசதிகள் இருத்தல் அவசியம்.

வரித் திட்டத்தை மாற்றி அமைக்கப் போவதாக அரசாங்கம் கூறுகிறது. நம் நாட்டில் செல்வர் தகுந்த அளவு வரி செலுத்த வில்லை என்பது பழைய குறை. ஆனால், தொழில் வளர்ச்சியைக் கருதும்போது கூடியமட்டும் முதலாளிகளைப் பயப்படுத்தாதபடி வருமான வரி அமையவேண்டும். அரசாங்கத்தை நடத்தப் பணம் வேண்டியது அவசியமாயினும், தொழில் வளர்ச்சியைத் தடைப்படுத்தாதபடி வரிகள் இருக்கவேண்டு மென்றே இவ்வாண்டும் பலவழிகளில் மத்திய அரசாங்கம் வரிகளைக் குறைத்துள்ளது. ஆனால், முதலாளிகளும் பொறுப்புடன் கொள்ளை லாபத்தால் மக்களை வறியராக்காது, சூதின்றி வரிசெலுத்தியும், தொழிலாளிக்கு லாபத்தில் பங்கு கொடுத்தும், எஞ்சியவற்றை நாட்டுக்கு நலந்தரும் தொழில்களில் இட்டும் நாட்டு முன்னேற்றத்துக்கு உதவ வேண்டும். அரசாங்கத்தின் குறிக்கோள்கள் மந்திரத்தால் எய்தக் கூடியன வல்ல. மக்களின் ஒத்துழைப்பு வேண்டும். முதலாளிகளும் தொழிலாளிகளும் பொறுப்புணர்ந்து, தேச நலத்தை நினைந்து, சுயநலத்தை மறந்து, பொருளாக்கத்தில் ஈடுபடுவார்களானால் நம் நாடு பொன்னாடு ஆகுமென்பதில் சந்தேகமில்லை. இயற்கையில் மூலப் பொருள்கள் உண்டு, மக்கள் உண்டு, நம் அரசாங்கத்தின் உதவியும் உண்டு. வேண்டுவது ஊக்கமும் உழைப்புமே.

'கலைக்கதிர்'

ஆண்டுச் சந்தா ரூ. 6.

கலையின் களஞ்சியம் சிந்தனைச் செல்வம்

என் உதவி?

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்

●

"மாமா, எனுக்கு ஓது காசு குது..." என்று மழலை மொழியால் கெஞ்சினன் மணி. அந்தப் பசுந் தளிர்க் கரத்திலே எட்டணு வெள்ளிப் பணத்தை வைத்து "மூடிக்கொள்" என்றேன். மணியின் விழிகள் மகிழ்ச்சியினல் மின்னின.

"இந்தக் காசுக்கு நீ என்ன வாங்குவாய்?" என்று கேட்டேன். குழந்தையின் மனேதத்துவத்தை ஆராய்வதில் எனக்குக் கொஞ்சம் பைத்தியம்.

"பப்பர்முட்டு..."

இதைச் சொல்லும் போதே மணியின் நாக்கு ஒரு முறை சப்புக் கொட்டியது. இதற்குள் அவனுடைய தாய் அங்கு வந்துவிட்டாள். "என்னடா கண்ணு, பணமா கையிலே? சிச்சி! திருப்பிக் கொடுத்து'டு. மாமாகிட்டே வாங்கலாமா?" என்ருள் புஷ்பா.

பணத்தைக் கொடுக்கவும் மனமில்லை; தாயின் சொல்லை மீறவும் துணிவில்லை — மணி தயங்கினுன். அவனது மலர் முகம் சற்றே குவிந்தது. பணத்தை வாங்கி என்னிடம் கொடுத்துவிட்டு "இப்போதே ஏனடா உனக்குப் பண ஆசை?" என்று விளையாட்டாகக் கூறிக்கொண்டே குழந்தையைத் தூக்கி அணைத்தாள்.

என் பாடு பெரும் சங்கடமாகி விட்டது. ஆயினும் சமாளித்துக் கொண்டு "உனக்குப் பெப்பர் மெண்டுதானே வேணும்? நானே வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று மணிக்கு ஆறுதல் கூறினேன்.

புஷ்பா ஆவலுடன் "நீங்கள் இப்போது கடைத் தெருவுக்குப் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஆமாம். உனக்கும் பெப்பர்மெண்டு வேண்டுமோ?" என்றேன் வேடிக்கையாய். நான் எதிர்பார்த்தபடி புஷ்பா சிரிக்கவில்லை. அதற்குப் பதிலாக அவள் முகம் சட்டென்று வாடியது. கம்மிய குரலில், "இல்லை, அப்படியே 'அவரை'ப் பார்த்து அழைத்துக்கொண்டு வருகிறீர்களா?" என்ருள்.

புஷ்பாவின் கவலைக்குக் காரணம் எனக்கு விளங்கிவிட்டது. அவள் கணவன், வெளியில் சென்று இரண்டு நாளாகிறதாம்; வீட்டையே மறந்தவன்போல் எங்கோ சுற்றிக்கொண்டிருக்கிருன்!

இந்த நேரத்திலே இனிப்பான தின்பண்டத்தை விரும்பும் அந்தக் குழந்தையின் நெஞ்சைவிட, கணவனின் வருகையை எதிர்பார்க்கும் புஷ்பாவின் உள்ளம் அதிக ஏக்கத்துடனிருக்கிறது என்பதை உணர்ந்தேன். வரதன்மீது எனக்கு ஆத்திரம் மூண்டது. அவனுடைய பழங் காலச் செயல்களின் ஒவ்வொரு நினைவும், என் மனக் கண்முன் படம் விரிக்கத் தொடங்கியது...

* ● *

சென்ற ஆண்டு திருப்பாப்புலியூரி லிருக்கும் ஒரு வாசகசாலையின் ஆண்டு விழாவில் பேசுவதற்காக என்னை அழைத்திருந்தார்கள். நான் அங்கே போய்ச் சேர்ந்த அன்று மாலை எதிர்பாராதவிதமாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

கடைத் தெரு வழியாக நான் சென்றுகொண் டிருக்கையில், "அடே, இங்கே வா'ப்பா" என்ற குரல் பின் புறத்தில் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினேன். அங்கே ஒரு காப்பிக் கடை வாசலில் நின்ற ஒரு போலீஸ்காரன் என்னைக் கைகாட்டி அழைத்தான்! ஆச்சரியமாக இருந்தது எனக்கு. வீதியில் சென்றவர்களெல்லாம் என்னைச் சந்தேகத்துடனும், அனுதாபமாகவும் பார்த்தனர்.

நமது நாட்டில் ஆங்கிலேயரின் ஆதிக்க மிருந்த காலத்தில்தான் இம்மாதிரி, போலீஸார் என்னை மரியாதைக் குறைவாக நடத்துவது பழக்கமாக இருந்தது. நான் ஒரு தேசியவாதி என்பதனால், அவர்களுடைய குண்டாந்தடியின் பலத்தைத் தாங்கித் தீர வேண்டிய 'விதி' யும் என் மண்டைக்கு இருந்தது. இப்பொழுது 'சுதந்தர' ஆட்சி வந்த பிறகும் அந்தத் தொல்லைகள் என்னைத் தொடர வேண்டுமா? தயங்கிக்கொண்டே திரும்பி வந்தேன்.

"வா'ப்பா, என்ன சேதி? சுகந்தானா? எத்தனையோ நாளாச்சே உன்னைப் பார்த்து..." என்று அன்போடு என்னைத் தழுவிக்கொண்டான் அந்தப் போலீஸ் வீரன்.

அப்பாடா! என் அச்சம் தீர்ந்தது. ஆயினும், அவன் யார்?... கூர்ந்து கவனித்த பிறகுதான், எனது பள்ளித் தோழன் வரதன் என்பது தெரிந்தது. "அடே, வரதா! நீ கடைசியில் போலீஸ் வேலைக்கா வந்துவிட்டாய்? இந்த ஊரில்தான் இருக்கிறாயா?" என்று என் வியப்பைப் புலப்படுத்தினேன்.

"சரி, வா, காப்பி சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்" என்று இழுத்துச் சென்றான்.

"நல்ல வேளை! கதர்ச் சட்டைக்காரர்களுக்கு, முன்பு தடியடி கொடுத்தது போலில்லாமல், இப்போது போலீஸ்காரர்கள் காப்பி வாங்கிக்கொடுப்பவர்களா யிருக்கிறீர்களே! இனி, பரவாயில்லை" என்றேன்.

வரதன் என்னை ஆச்சரியமாகப் பார்த்து "என்ன'ப்பா, நீ இப்போது அரசியல்வாதியாய் விட்டாயோ? பெரிய 'வாயாடி'யாய்ப் பேசுகிறாயே!" என்றான்.

"ஆமாம், இந்த ஊருக்குக்கூட ஒரு கூட்டத்துக்குத்தான் வந்திருக்கிறேன். முன்னைப்போல் என்னை நினைக்காதே யப்பா! இப்போது நான் பிரபல எழுத்தாளன். சென்ற நான்கு வருஷத்திற்குள் ஏழு அற்பாயுசுப் பத்திரிகைகளுக்கு அடுத்தடுத்து ஆசிரியரா யிருந்து 'மூடு விழா' நடத்தி யிருக்கிறேன்! இனிமேல் நீகூட என்னிடம் மரியாதையாகத்தான் பேச வேண்டும்..."

இதற்குள் அவன் குறுக்கிட்டு "ப்பூ! நீ எந்தக் கொம்பனாயிருந்தால் தான் என்ன! சும்மா வா'ப்பா, சரி தான்..." என்று பழைய தோரணையிலேயே அடித்துப் பேசினான்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு இருவரும் அவன் வீட்டுக்குச் சென்றோம். கையில் மூன்று வயதுக் குழந்தையுடன் எதிர் நின்று வரவேற்றாள் ஒரு பெண். அந்தக் குழந்தையை வரதனிடம் கொடுத்துவிட்டு அவள் பளிச் சென்று உள்ளே போய்விட்டாள்.

"ஓகோ, இப்போது நீ ஒரு குடும்பஸ்தனோ! ஏன் எனக்குத் திருமண அழைப்பு அனுப்பவில்லை?" என்று கேட்டேன்.

"அதெல்லாம் அப்புறம் சொல்கிறேன். முதலில் இந்தப் பெண் யார் தெரிகிறதா உனக்கு?" என்ற கேள்வியை வீசினன் அவன். அப்பொழுதுதான் எனக்கு அந்த முகம் சற்று நினைவுக்கு வந்தது. நானும் வரதனும் எங்கள் சொந்த ஊராகிய கோவையில் படிக்கும்போது, அதே உயர்நிலைப் பள்ளியில் இவளும் படிக்க வருவதைச் சில சமயங்களில் பார்த்திருக்கிறேன். சட்டென்று, "ஆம், புஷ்பா தானே இது? ஆனல் ..." என்று இழுத்தேன்.

"ஆனல்—என்ன? இவள் கிறிஸ்தவப் பெண்ணாயிற்றே என்று யோசிக்கிருயா? இருந்தாலும் பெண்தானே! அதனல் நான் பதிவு மணம் செய்து கொண்டேன்" என்று கூறிச் சிரித்தான் வரதன்.

கலப்பு மணத்தை வெறும் கற்பனைக் கதைகளிலேயே கண்டுகொண்டிருந்த எனக்கு இந்த உண்மையான காதல் வரலாறு பெருமகிழ்ச்சி யளித்தது.

"நல்ல காரியந்தான். இதற்கு உன் அம்மா அப்பா சம்மதித்தார்களோ?"

"அடேயப்பா! அவர்கள் ஒரே பிடிவாதமாய்த் தடுத்தார்கள்; இவளைக் கல்யாணம் செய்வதென்ருல், குடும்பத்தை அடியோடு மறந்துவிட வேண்டுமென்ருர்கள்."

"அப்புறம்?"

"குடும்பத்தை மாத்திரமல்ல, அந்த ஊரையே மறந்துவிட்டு இங்கே வந்துவிட்டேன். போதாக் குறைக்கு, புஷ்பாவின் தாய் தகப்பனும் இவள் என்னை மணக்கக்கூடாதென்று தடை செய்தார்கள்."

"அப்படியானல், அவளும் தன் பெற்ருேரைத் துறந்துவிட்டாளோ?" என்று இடைமறித்துக் கேட்டேன்.

"பெற்ருேரை மட்டுமா? அவர்களிடமிருக்கும் ஏராளமான சொத்துக்களையுங்கூட எனக்காகத் 'தியாகம்' செய்துவிட்டாள்" என்று கூறும்போது வரதனின் முகத்தில் பெருமை ஒளிவீசியது.

அவன் அப்படியொன்றும் பிரமாத அழகனல்ல. ஆனல், அழகைச் சுவைக்கும் உள்ளம் படைத்தவன். இசை, ஓவியம், நடனம் முதலிய அனுபவங்களில் ஒரே கிறுக்கு. இம்மாதிரி 'ரசிக'த் தன்மையால் அவன் எஸ். எஸ். எல். ஸி. பரிட்சையில் இரண்டுமுறை தோற்ருலும், புஷ்பாவிடம் 'காதல் பரீட்சை'யில் முழுவெற்றி யடைந்துவிட்டான்!

அந்தத் தடவை என்னை அங்கேயே இரண்டு நாள் வரையில் அன்புச் சிறைப்படுத்தி விட்டான். ஆடம்பரமான விருந்துகள் அளித்தான். புஷ்பாவும் என்னை முழுமனத்தோடு உபசரித்தாள்.

இளம் வயதுள்ள ஆண் பெண் இருவரிடையே காதல் ஒன்றுதான் ஆதிக்கம் பெறமுடியும் என்று பெரும்பாலோர் முடிவு கட்டிவிடுவர். நானுங்கூட அப்படித்தான் முன்பு நினைத்திருந்தேன். ஆனல், புஷ்பாவிடம் எனக்கு அறிமுகம் ஏற்பட்டவுடன் அந்த எண்ணம் புதைபட்டுவிட்டது. காதலர்களுக்குள் ஏற்படும் உடலின் பத்தோடுகூடிய பற்றுதலைவிட, சகோதரத்துவத்தின் தூய்மையான அன்பு மிக உயரியது—அதிக வலிவுள்ளது—என்பதை உணர்ந்தேன்.

பிறவியில் நான் ஒரு தனி மரம், உடன்பிறப்பு என்ற பெயருக்குக்கூட ஒருவரும் என்னுடன் பிறக்கவில்லை. அந்தக் குறையினல்தானே என்னவோ, மிக விரைவில் புஷ்பாவிடம் எனக்கு உண்மையான சகோதர பாசம் ஏற்பட்டுவிட்டது. ஆம், ஆண்டவனை நேரில் காணமுடியாத மனிதன் சிலையையும், சித்திரத்தையுமே தெய்வமாகக்கொண்டு திருப்தி யடைவது போல், புஷ்பாவையே என் தங்கையாகக் கருதி மகிழ்வுற்றேன்.

இதையெல்லாம்விட, எனக்குப் பேரின்ப மளித்தது, அவர்களுடைய காதற்கனியான மணியின் மழலை மொழிதான். அந்தப் பச்சிளங் குழந்தையின் பாசம் என் நெஞ்சை முற்றிலும் கவர்ந்துவிட்டது.

அதற்குப் பிறகு நான் அடிக்கடி அவர்கள் வீட்டுக்குப் போய்வரத் தொடங்கினேன். கோவையைப் போல் நெடுந்தூரத்தில் இல்லாமல், சென்னைக்கு ஓரளவு சமீபத்திலேயே திருப்பாப்புலியூர் இருந்ததால் சுலபமாகவும் இருந்தது.

என்னைக் கண்டவுடன் புஷ்பா, தன் குடும்பத்தினர் யாவருமே வந்துவிட்டதுபோல் களிப்படைவாள். அவர்களுடைய வீட்டு விவகாரங்களையெல்லாம் என்னிடம் மனங்கலந்து பேசுவாள். குழந்தை மணியும் "மாமா" என்று என்னிடம் ஒட்டிக்கொள்வான். இதையெல்லாம் காணும் போது வரதன் "எங்கள் குடும்பத்தாரெல்லாம் பிரிந்துபோனாலும், உன் உறவுமட்டுமாவது எங்களுக்குக் கிடைத்ததே போதுமப்பா" என்று வாய்விட்டுச் சிரிப்பான்.

ஆனால், கடைசித்தடவையாக இரண்டு மாதங்களுக்குமுன் நான் திருப்பாப் புலியூருக்குச் சென்ற பொழுதுதான், வரதனின் போக்கு விபரீதமாக இருப்பதை நான் அறிய முடிந்தது. இரண்டு நாள்வரையிலும் வரதன், வீட்டுக்கு வரவே இல்லை.

அன்று புஷ்பா, தன் குறைகளையெல்லாம் எனக்குத் தெரிவித்தாள். ஆஸ்பத்திரி நர்ஸ் ஒருத்தியிடம் வரதனுக்கு 'நட்பு' ஏற்பட்டிருப்பதாகவும், சென்ற சில நாட்களாக அவன் குடும்பத்தைக் கவனிப்பதேஇல்லை என்றும், இதுபற்றி அவனிடம் கேட்டதற்கு "இஷ்டமிருந்தால் இங்கே இருக்கலாம்; இல்லாவிடில் விவாகரத்துச் செய்துகொள்ளலாம்" என்று அவன் கூறிவிட்டதாகவும் சொல்லிப் புஷ்பா கண்ணீர் வடித்தாள்.

அவளுக்கு ஒருவாறு ஆறுதல் சொல்லிவிட்டு நான் சென்னைக்குத் திரும்பினேன். இங்கு வந்த மறுநாளே வரதனுக்கு அறிவுரை கூறி நீண்ட கடிதமொன்று எழுதினேன். ஆனால், பதிலே வரவில்லை!

மறுபடியும் நான் திருப்பாப்புலியூருக்குச் செல்லச் சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை. நாளடைவில் அரசியல் வாழ்வில் நான் அதிகமாய் ஈடுபட்டதால், சென்னையிலேயே முடங்க நேர்ந்தது. பேச்சுத் துறையில் எனக்குப் பெரும் புகழ் கிடைத்தது. மக்களிடையே என் செல்வாக்கு எல்லை கடந்து பரவியது.

நேற்று மாலை ஆறு மணிக்கு ராபின்ஸன் பார்க்கில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு நான் தலைமை தாங்க ஏற்பாடு. சரியாக ஐந்து மணிக்கே என்னை அழைப்பதற்காகக் காருடன் வந்துவிட்டார் (மாஜி) திவான் பகதூர் திருவேங்கடம்.

ஆயினும் குறிப்பிட்ட காலம் தவறிச் சிறிது தாமதமாகச் சென்றால்தானே பேச்சாளிக்குப் பெருமை! எனவே, ஆறரை மணிக்குத்தான், காந்திக் குல்லா, கதர் ஜிப்பா, ஜரிகைச் சால்வை முதலிய அலங்காரங்களுடன் நான் புறப்பட்டேன். புத்தம் புதிய 'பியூக்' கார் தெற்கு நோக்கிப் பறந்தது.

மவுண்ட் ரோட்டிலுள்ள ஒரு காப்பிக் கடையருகே இறங்கிக் 'கொஞ்சம் காப்பி' சாப்பிடுவதற்கு வற்புறுத்தியழைத்தார் நண்பர் திருவேங்கடம். உள்ளே நுழைந்தோம். ஆளுக்கு ஒரு "டில்லி பாதுஷாவை" விழுங்கி விட்டுக் காப்பியினால் தொண்டையைக் கழுவிக் கொண்டோம். 'சூடான' உற்சாகத்தினால் சுதந்திரத்தைப் பற்றி எங்கள் பேச்சுத் திரும்பியது.

இந்தியாவின் மாண்பைப் புகழ்ந்து கொண்டே வெளியில் வந்தோம். காருக்குள் ஏறி உட்கார்ந்து கதவை மூடும் சமயத்திலே, அந்த ஓரத்திற்

வந்தாள் ஒரு பிச்சைக்காரி. அவளுடைய மெலிந்த கைகள், ஒரு நோஞ்சல் குழந்தையை அணைத்துக் கொண்டிருந்தன.

பேச்சுப் பராக்கில் அலட்சியமாக அந்தப் பக்கம் பார்த்துக்கொண்டே ஒரு அரையணவை எடுத்து அவளிடம் வீசினேன். அந்த முகத்திலே திடீரென்று ஒரு மாறுதல்! கனவில் கண்டதுபோன்ற ஒரு சாயல்!

இதற்குள் கார் ஓட ஆரம்பித்து விட்டது. அவளைச் சற்றுக் கவனித்துப் பார்க்க வேண்டும்போ லிருந்தது எனக்கு. "கொஞ்சம் நிறுத்து" என்று டிரைவரிடம் கூற வாய் திறந்தேன். அதே விநாடியில் "உங்கள் வாய்ப் பேச்சு என்ன சார்... தேனு, கள்ளா? மக்கள் ஈ மாதிரி வந்து குவிகிறார்களே! இன்று சுமார் பத்தாயிரம் பேர் காத்திருக்கிறார்கள் ...." என்று பொழிந்தார் நண்பர் திருவேங்கடம். அந்தப் புகழ் மொழிகள் என்னையே சற்று மயக்கிவிட்டன. பிச்சைக் காரியைப் பற்றிய நினைவு, பின் தங்கி விட்டது. ஆம், நான் தற்புகழ்ச்சிக் காரனல்ல; ஆனால், மற்றவர்கள் தாமாகவே வந்து புகழ்வ தென்றால், அதை எல்லோருமே விரும்பத்தானே செய்கிறோம்!

கார் ஓடிக்கொண்டே இருந்தது;... கூவம் நதிப் பாலத்தைத் தாண்டி விட்டது.

பளிச்சென்று ஒரு நினைவு என் மூளையில்.........!

'சற்று முன் காப்பிக்கடை வாசலில் நின்றாளே, ஒரு பிச்சைக்காரி... அவளிடமிருந்த குழந்தை...... அந்தச் சாம்பிய முகங்கள்........ அது யார்? என் விழிகள் நிமிர்ந்து பார்த்தபோது அவள் முகத்தில் குபீரென்று கப்பிய சோகம்...அந்தக் குழந்தையின் கண்களை நான் போன ஜன்மத்தில் பார்த்திருப்பேனோ?..அது தன் கைகளை என்னிடம் ஏந்திக் கொண் டிருந்ததா?... இப்படி யெல்லாம் என் நினைவு சுழன்றது.

"மாமா எனக்கு ஒது காசு குது"... அந்தக் காட்சி என் அகக்கண் ணெதிரே மின்னல்போல் பறந்தது! நான் வீற்றிருந்த புகழுலக ஆசனம் 'சரசர' வென்று கீழே நழுவி இறங்குவதுபோல் தோன்றியது. இதயத்தின் ஆழத்திலே அமுங்கிக் கிடந்த ஒரு நினைவு 'குபுக்' கென்று மேலே கிளம்புவதுபோலு மிருந்தது!

"புஷ்பா!...மணி!"

'பிச்சைக்காரி!...குழந்தை!"

ஐயோ, அவர்கள் தான் இவர்களா? ... அப்படியானல், அவன்–வரதன்— எங்கே? ஆஸ்பத்திரி நர்ஸுக்குக் காதல் பிணைப்பைக்கூட 'ஆபரேஷன்' செய்யத் தெரியுமோ?..."

கார் ஓடிக்கொண்டே இருந்தது. அதைவிடக் கடும்வேகத்தில் சுழன்றது என் சிந்தனை. திருவேங்கடம் எதையுமே கவனிக்க வில்லை. விடுதலை பெற்றதனால் நமது நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் மகத்தான கௌரவத்தைப் பரவசமாகப் பேசிக்கொண் டிருந்தார். ஆனால்,—

'ஹோட்டல் வாசலிலே பிச்சை எடுக்கும் அந்தப் பெண் என் அன்புச் சகோதரி புஷ்பாதான்! ஆம், அந்தப் பார்வை ... ஐயோ, நான் என் அந்தக் கணமே பாய்ந்து கீழே குதிக்காமல் வந்தேன்? என்னைப் பற்றி அவள் என்ன நினைத்திருப்பாள்? ... பாழும் கௌரவந்தான் கண்களை மறைத்ததோ?...

கார் சென்ட்ரல் நிலையத்தையும் கடந்துவிட்டது. நண்பர் சொல்லிக் கொண்டிருந்தார்: "காங்கிரஸ்காரர்கள் பட்ட துன்பத்திற்கு இப்பொழுது தான் பலன் கிடைத்தது. அன்று சிறையில் வாடியவர்கள் இன்று ஆட்சி பீடத்தில்....."

என் எண்ணம் உருண்டது: "அன்று அரை ரூபாயைத் திருப்பிக்

கொடுத்துவிடும்படி குழந்தைக்குக் கூறிய புஷ்பாதான், இன்று அரையணு வுக்காக அலைந்து திரிகிருள்! சிச்சி, வெட்கக் கேடு! என் அன்புத் தங்கை — புஷ்பா— அங்கே சந்தியில் நிற்கிருள்; நான் காரில் உல்லாசமாக......ஹ்ம், இதுதானு என்பெருமை-என் பாசம்? ...'' என்னை நானே நொந்துகொண் டேன்.

"டிரைவர், நிறுத்து!'' என்று கூறி னேன். பக்கத்தி லிருந்த நண்பர் திரு வேங்கடம் "என்சார்? எதற்கு?'' என்று வினவினர்.

"நான் மவுண்ட் ரோடுக்குப்போக வேண்டும்.''

"அதற்கென்ன அவசரம்? பொதுக் கூட்டம் முடிந்தவுடன் நானே கொண்டு வந்து விடச் சொல்கிறேன்.''

அவருடைய சாவதானமான பேச்சு எனக்கு ஆத்திரமூட்டியது. "இல்லை, நான் இப்போதே போகவேண்டும்— இந்த விநாடியே அங்கே போய்த் தீரவேண்டும்'' என்று சீறினேன்.

என்னுடைய திடீர் மாறுதலைக் கண்டு அவர் திகைப்புற்ருர். "சார், அங்கே... காத்திருப்பார்களே!... நேரம் ஆகி விட்டதே...'' என்று மெதுவாக முன கினர்.

"அடே! இப்போது காரை நிறுத்து கிறீர்களா, இல்லையா? '' என்று வெறி கொண்டவன்போல் கத்தினேன்.

டிரைவர் திடுக்கிட்டுப்போனுன். "கிறீச்'' என்ற அலறலுடன் கார் நின் றது. சட்டென்று இறங்கி மவுண்ட் ரோட்டை நோக்கி விரைந்தேன். பின் னல், நண்பர் திருவேங்கடம் என் னவோ கூறும் குரல் அரைகுறையாகக் காதில் விழுந்தது. நான் திரும்பிப் பார்க்கவே இல்லை.

அந்த வாசலில் அவளைக் காண வில்லை! நாலா புறங்களிலும் பார்வை யைச் சுழற்றினேன்; அங்கு மிங்கும் ஓடித் தேடினேன். தேவையற்ற மனி தர்கள் யார்யாரோ நின்றனர். ஆனுல், புஷ்பாவைக் காணேம்!

* * * *

இன்று காலை எனக்கு ஒரு கட்டுக் கடிதங்கள் வழக்கம் போல் வந்து சேர்ந்தன. அவற்றில் ஒரு தபால் கார்டு.....மிளகு கோத்ததுபோல் நெருக்கமான—அழகிய எழுத்துக்கள். என் கருத்தைக் கவர்ந்த அக்கடிதத்தை எடுத்து முதலில் படித்தேன்:

அன்புள்ள அண்ணு,

வணக்கம்.

நான் அநாதையாகிவிட்டேன். காத லுக்காக என் தந்தை, தாய், செல்வம் முதலிய அனைத்தையும் தியாகம் செய்த நான், கடைசியில் அநியாயமான பழிச் சொல்லையே பரிசாகப் பெற்றேன். ஆம், தங்களிடம் நான் கொண்ட அன்பை, என் கணவர் தவறுகக் கருதி விட்டார்! அதனுல், என்னைக் கை விட்டு, அந்த நர்ஸை அவர் ஏற்றுக் கொண்டார்.

குழந்தையும் நானும் பல நாள் பட்டி னியால் வாடினேம். இறுதியில், தாங் களாவது ஏதேனும் உதவிபுரிவீர்க ளென்று நம்பியே இங்கு வந்தேன். ஆனுல், என்னை ஒரு பிச்சைக்காரியா கப் பாவித்து தாங்கள் அரையணுவை வீசியதும் ஒரு பேருதவிதான்! அவ்வுத வியினுல்தான் கடைசியாக இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

பெருமைமிக்க அண்ணு! தாங்கள் கணணியமாகப் போய்கொண்டிருக்கை யில், கேவலப் பிறவியாகிய நான் வந்து குறுக்கிட்டது தவறுதான். அதனுல் தங்கள் மதிப்புக்குக் குறையேற்படுமென் பதை நான் முன்பே உணரவில்லை! மன்னியுங்கள்.

எனக்கும் குழந்தைக்கும் இனி இந்த உலகத்தில் புகலிடமே இல்லை. இறுதி விடை பெற்றுக்கொள்கிறேன்.

அபாக்கியவதி,

புஷ்பா.

என் கையிலிருந்து கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. கண்களி லிருந்து நீர்த் துளிகளும் வழிந்து சிறிதன.

பரந்து விரிந்து, பல்வேறு இனங்களுக்குத் தாயகமாக உள்ள ஓர் உபகண்டம் ஒரு சின்னஞ் சிறிய இனத்தின் அரசியல் சூழ்ச்சிக்கு இரையாகி அல்லலுழந்தால்—அல்லலைப் போக்கி அமைதியான இன்ப வாழ்வினை மீட்டும் தருவதற்கு ஒரு பெரும் படை வேண்டுமல்லவா ? கருவிகளாலும் அரசியல் ஆதிக்கத்தாலும் மிக்க வல்லமை வாய்ந்த ஓர் அரசாங்கத்தின் இரும்புப் பிடியினின்றும் கீறல், காயம் ஒன்றுமே இல்லாமல் இந்தியாவை விடுவிக்கக் கருவி வலிமை இல்லாத—அறத்தை மட்டுமே நம்பிய—ஒரு படை அறுபது ஆண்டுகள் போராடிற்று; வெற்றியும் கண்டது.

●

அந்த வீரப் படையின் முன்னணியில்—தூசிப் படையில்—நின்று போராடிய பெரு வீராங்கனையாகிய சரோஜினி அம்மையாரின் நிலவுலக வாழ்வு அண்மையில் முடிந்துவிட்டது. 'வந்த வேலை முடிந்தது; போய்வருகிறேன்' என்று சொல்வது போல் போய்விட்டார்.

●

வீராங்கனை சரோஜினி அம்மையார் சிறந்த கவியரசியுமாக இருந்தார். உரிமைப் போரில் பங்கு பெற்றதோடு கலைத்துறையிலும் ஈடுபட்டவர். அவர் கவிதை நோக்கு எல்லாத் துறைகளிலும் பரந்து சென்றது. காதல், காலம், தத்துவம்...... என்று உயர்ந்து செல்லும் கவிதையின் வேகம் பல்லக்குத் தூக்குவோரையும், அலைகடற் செம்படவரையும் மறந்ததில்லை. இதோ ஒரு சிறு பகுதி :

காலைக் கதிரொளிக்குக் கண்விழிக்கும் விண்ணிடந்தான்
கோலத் திருவணக்கம் கொடுக்கின்ற நேரமிது
ஓலக் குரலெடுத்தே ஓயாமல் இரவெல்லாம்
சால அழுதோய்ந்த சேயைப்போல் இந்நேரம்

காலைக் கதிரொளியின் கரந்தூங்கும் காற்றெல்லாம்
நீலத் திரைதாவும் நீள்செல்வம் கைப்பற்ற
வேலைக் கடல்மைந்தீர்! சோதரரே! வலையெடுத்தே
ஆளும் கடலோடும் கட்டைமரம் கட்டிடுவோம்!

(சோழமண்டலச் செம்படவர்)

●

வங்க நாட்டு அந்தணர் குடியிற் பிறந்த அம்மையார் சீர்திருத்தம் என்ற சொல்லைச் சொல்லவும் அஞ்சிய அந்தக் காலத்திலேயே ஐதராபாத் தனியரசைச் சேர்ந்த நாயுடு குலத்தவர் ஒருவரை மணந்து, தம் துணிவை நிலைநாட்டினார். இவ்வாறு பலவகையிலும் நாட்டின் நல்வாழ்வுக்கும் நல்லமைப்புக்கும் காரணமாக இருந்த வீராங்கனை — கவியரசி சரோஜினி அம்மையாருக்குக் 'கலைக் கதிர்' தன் வணக்கத்தைச் செலுத்திக்கொள்கிறது.

●

"இறப்பென்ற ஒன்று இன்றும் இல்லை;
இனி என்றுமே இல்லை"

—சரோஜினி அம்மையார்,

Grams: 'RENGSONS' Post Box No. 197.

R. Ramalingaier & Bros.,

DIRECT IMPORTERS OF PAPER & BOARDS

Distributors:
For THE MYSORE PAPER MILLS, LIMITED,
22/55 RAJA STREET, COIMBATORE.

★ ALL VARIETIES PAPERS, CARD BOARDS AND STRAW BOARDS AVAILABLE. ★

A TRAIL SOLICITED.

ஸ்ரீ சாரதா மில்ஸ் லிமிடெட்,

லோகநாதபுரம், போத்தனூர்.

முதன் முதலாக செங்குந்தர்களால் நிறுவப்பட்ட மில்.

கோயமுத்தூரில் பெயர் பெற்ற மில்களின் வரிசையில் சேர்ந்த இந்த மில் தக்க அனுபவஸ்தர்களால் நிர்வகிக்கப்பெற்று வருகிறது.

இந்த மில்லில் உயர்தரமான நூல்களும், பலரகமான துணிகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

14784 கதிர்களும், 176 தறிகளும் வேலை செய்து கொண்டிருக்கின்றன.

ஆரம்பித்த நாள் முதல் இன்று வரையிலும் பங்குதாரர்களுக்கு நல்ல டிவிடெண்டு தரப்பட்டு வந்துள்ளது.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடெரீஸ்

V. S. செங்கோட்டையா & பிரதர்ஸ்,

பக்தி விலாஸ், ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

Grams: TEXRAJ.

SUNDARRAJ TEXTILES,

Factory: KALAPPATTI, P.O.,
(Via) COIMBATORE.

Office: 4/21, Race Course Road, COIMBATORE.

Manufacturers of:

Fine Cotton Piece Goods of 28s, 36s and 60s.

Prop: R. Balakrishnan, B.A., B.L.

புது வருஷத்தில்

பொது மக்களுக்கோர்

நற்செய்தி

உங்களுக்குத் தேவையான ஜவுளி
வகையருக்கள் எல்லா (பிரைமரி) கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும்
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

பலரக வாயில்கள், காடா, மல்,
லாங்கிளாத், ஷர்டிங், கோட்டிங் தினுசுகள்,
வேஷ்டிகள், புடவைகள், சீட்டி ரகங்கள் முதலியவை
கண்ட்ரோல் விலையில் எல்லா பொது மக்களும் எந்த (பிரைமரி)
கோவாபரேடிவ் ஸ்டோரிலும் வாங்கிக்கொள்ளலாம்.
(பிரைமரி) ஸ்டோரில் மெம்பராயிருக்க
வேண்டுமென்ற அவசியமில்லை.

—: INSERTED BY :—

சென்ட்ரல் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ்

கோயமுத்தூர்.

தந்தி: "சுப்ரமணியா" டெலிபோன் { ஆபீஸ் 176, பங்களா 146 }

ஸ்ரீ பாலசுப்பிரமணிய மில்ஸ் லிமிடெட்,

சிங்காநல்லூர், கோயமுத்தூர்.

(ஸ்தாபிதம் 1934)

★

- பிரக்யாதி பெற்ற மில்களில் உத்தமமானது இதுவும் ஒன்று
- இந்த மில்லில் குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே நிர்வாகஸ்தர்களது நோக்கம் - -
- இந்த மில்லில் கைத்தறிகளுக்கும் பவர் தறிகளுக்கும் உகந்த 30-நெ. முதல் 60-நெ. வரை ஒற்றை முறுக்கு நூல் தயாரிக்கப்பட்டு வருகின்றன - -

12,096 கதிர்கள் தொழில் செய்கின்றன.

★

தேசிய மூலதனம்
தேசிய தொழிலாளர்
தேசிய மேனேஜ்மெண்டு

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

தேசிய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரையிலும் பங்குதாரர்கட்கு நல்ல டிவிடெண்டு தரப்பட்டு வந்துள்ளது.

Sri Balasubramania Mills Limited,

Singanallur, Coimbatore.

Managing Agents & Secretaries:

K. Krishnaswamy Naidu & Brother.

கோயமுத்தூர்

பிரிமியர் கார்பொரேஷன் லிமிடெட்

8/2 மால் மில் ரோடு. P. B. 210. கோயமுத்தூர்



எங்களிடம்
இங்கிலீஷ் பம்பு
செட்டுகள், DPF பம்பு செட்டு
கள், GEC, BTH, AEI, BBC,
புரூக், கிராம்டன் மோட்
டார்கள் MEM ஸ்டாடர்
சுட்சுகள் ரெடி
டெலிவரிக்கு குறைந்த விலைகளில் கிடைக்கும்.
¼, ½, ¾ & 1 HP வீட்டு பம்பு செட்டுகள், எலக்ட்ரிக்
சாமான்களும் சப்ளை செய்கிறோம்.

தேவைக்கு விஜயம் செய்யுங்கள் அல்லது லெட்டர் எழுதுங்கள்.

"கலைக் கதிர்"

மாத வெளியீடு

செந்தமிழ்க்குத் தொண்டு | பயன்மிக்க கட்டுரைகள்
சிந்தனைக்கு நல்விருந்து | சுவைமலிந்த கற்பனைகள்

முழுவதும் கிளேஸ் காகிதம்.

சந்தா விபரம்

வெளி நாடு	உள் நாடு
ஆண்டுச் சந்தா ரூ. 9.	ஆண்டுச் சந்தா ரூ. 6.
தனிப் பிரதி அண. 12.	தனிப் பிரதி அண. 8.

"கலைக் கதிர்"
பூளைமேடு போஸ்ட், கோவை.

Edited & Published by G. R. Damodaran, B. Sc., Elec., B. Sc., Mech. (Durham) A. M. I. E. E. (London) and Printed at the P. S. G. Industrial Institute Press, Peelamedu, P. O., Coimbatore.

ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1922-ல்)

ரிஜிஸ்டர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.

ஆதரைஸ் ஆன மூலதனம், ரூ. 10,00,000 வசூல் செய்யப்பட்ட மூலதனம் ரூ. 7,51,250

வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30,000

2-ம் நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகையராக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பூளைமேடு — கோயமுத்தூர்.

இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய இந்த சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்.

Telegrams: PIONEER. *Telephone: 160*

The Mills are situated at Peelamedu, Coimbatore and are equipped with 19,280 spindles. The mills specialise in the spinning of yarns from counts 40s to 80s, carded and 100s combed.



Registered Office:
Peelamedu, Coimbatore.

Managing Director:
G. R. Govindarajan.

P. S. G. C. I. I. Press, Peelamedu, Coimbatore.